மாரீசன்கூடல்


# புனித கயித்தார் ஆலயம்





12. 08. 2010

## திறப்பு விழா சிறப்பு மலர்



60.019

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# எமது திருத்தந்தை
# 16ம் ஆசீர்வாதப்பர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கயித்தானு முனிக்கு இன்னிசைக் கீதம்

**பல்லவி**

கருணைவிழி யருள்சுரக்கும் கயித்தானு மாமுனியே
காவலனாய் எமையாளும் மாதவனே வாழ்க
திருப்பாலன் யேசுவையே கரத்தினிலே ஏந்தி
தெய்வமுகம் காட்டுகின்ற தேனமுதே வாழ்க

**சரணம்**

எளியவர்நாம் நின்னிழலில் வாழ்வதற்காய் வந்தோம்
பழிசுமக்கும் பாவியராய் படுவமலம் பாரும்
விழிசொரியும் நீரோடுன் அன்பினுக்கு ஏங்கும்
அழியுமுடல் சுமக்கின்ற அடியவரைக் காரும்

கரு

யுத்தத்தின் கொடூரத்தால் உறவுகளை யிழந்து
சித்தந் தடுமாறுகின்ற அபலைகளைப் பாரும்
நித்தம்தம் உள்ளத்து வேதனையால் வாடும்
கத்திக் கதறுகின்ற தமிழினத்தைக் காரும்

கரு

நோயுற்று வலுவற்று அருகில்வரத் துடிக்கும்
தாயற்றுத் துணையற்றுத் தவிப்பவரைப் பாரும்
சேயுற்ற துன்பமதாய் எமையேந்திக் காரும்
மாயப்பேய் வினையகலப் பரமனடி சேரும்

கரு

அன்னைமரி அடிவருடி அவளிதயங் கவர்ந்தே
உன்னையீந்த பெற்றவர்க்குப் பெருமையினைச் சேர்த்தீர்
நின்கமலக் கரத்தினிலே யேசுவையே ஏந்தி
அன்பினிறை ஆசியினை எமக்கள்ளித்தாரும்

கரு

மாரீசன்பதிவாழும் மக்கள்நாம் ஒன்றாய்
மாதவற்கோர் ஆலயமும் அமைத்திட்டோம் நன்றாய்
சீரோங்க நின்னாமம் போற்றியிசை பாடும்
பாரெங்கும் வாழும்நும் மக்கட்கருள் தாரும்

கரு

மாரீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

புனித கயித்தானு முனீந்திரர், மாரீசன் கூடல் கிராம மக்களின் பாதுகாவலராக, வழிகாட்டியாக அனைத்து மக்களையும் இறையன்பினால் ஒன்றிணைத்து, இறைவிசுவாசத்தில் உறுதிப்படுத்தி, நம்பிக்கையுடன் இறை சிந்தனையில் வாழவும், தமது அளப்பரிய விசேட அருளை எல்லாம் வல்ல பரம பிதாவிடமிருந்து பெற்று, எங்களுக்கு வாரி வழங்கி வந்துள்ளமையால், அவருடைய இருப்பிடமான பழைய ஆலயம் 167 ஆண்டுகளாக நிலைத்து வளர்ந்து இறைமக்களுக்கு விண்ணரசின் மகத்துவத்தையும் அதை அடையும் நெறிமுறைகளையும், நற் செய்திகளின் மூலமாக மக்களுக்கு அளித்து வந்துள்ளது.

1843ம் ஆண்டு தொடக்கம் 1865ம் ஆண்டுவரை 22 ஆண்டுகளாகப் புனிதரின் நாமத்தைச் சுமந்து கொண்டு முதலாவது பழைய கோவில் மக்களை நெறிப்படுத்தி மக்களை இறைவிசுவாசத்தில் ஊன்றித் திளைக்க வைத்தது.

1865இல் இரண்டாவது ஆலயம் பொயிசியோ என்னும் போதகர் சபைக் குருவானவரால் ஆரம்பிக்கப்பட்டு, 1888இல் இலவாஜ் என்னும் குருவானவரால் பூர்த்தி செய்யப்பட்ட போதிலும் ஆலய முகப்பு பூரணப்படுத்தப்படாமல் இருந்தமைக்கு நாங்கள் சாட்சியாகவுள்ளோம்.

இந்த ஆலயம் 19ம் நூற்றாண்டின் இறுதிக்காலப் பகுதியிலும், 20ம் நூற்றாண்டின் ஆரம்பகாலத்திலும் மாரீசன்கூடல் பங்கு மக்களுக்கு மட்டுமன்றி அயற் கிராமங்களான இளவாலை, விளான், பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த அனைத்து மக்களுக்கும் அர்ப்பணிப்பு மிக்க நற்செய்திப் பணியை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடவேண்டியதொன்றாகும். முக்கியமான திருநாட்கள் இந்த ஆலயத்திலே முன்னெடுக்கப்பட்ட படியால் அயற் கிராம மக்கள் மாட்டு வண்டிகளில் வந்து பங்குபற்றிக் கொண்டார்கள் என்பது எமது தந்தையார் எனக்குக் கூறியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

பழைய ஆலயம் (1964-1970) காலப்பகுதியிலும் அதன் பின்னரும் புனரமைப்பிற்குட்படுத்தப்பட்ட போதிலும் முருகைக்கற்கள், சுண்ணாம்பு கலவையினால் உட்கட்டுமானம் அமைந்திருந்தபடியால் 145 ஆண்டுகளாக நிலைத்திருந்த ஆலயம், யுத்த காலத்தில் மேற்கொள்ளப்பட்ட எறிகணை, விமானக் குண்டுகளின் அதிர்வினாலும் புதிய ஓர் ஆலயத்தின் தேவை உணரப்பட்டது.

தற்போதய பங்குத்தந்தை ஞானேந்திரன் அடிகளாரும், நிர்வாக சபையினரும் துணிந்து மேற்கொண்ட தீர்மானத்தினால் 2008ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட புதிய ஆலயக் கட்டுமானப்பணிகள் இறுதி நிலையையடைந்து ஆலயத்திறப்பு விழாவைக் கொண்டாட முடிந்தமை புனிதர் கயித்தானின் விசேட அருள் மட்டுமன்றி ஒரு புதுமையெனவும் கூறமுடியும்.

பழைய ஆலயக் கூரைப் பகுதிகள், ஓடுகள், மரங்களை அகற்றுவதிலும், சுவர்களைத் தகர்த்துச் சிதைவுகளை அப்புறப்படுத்துவதிலும் எமது பங்கு மக்கள் அனைவரும் பால்வேறுபாடின்றி ஒன்றுபட்டு ஆற்றிய பணிகள் அற்புதமானவை, ஆச்சரியம் மிக்கவை, வியக்கத்தக்கவை. புனித கயித்தானின் பரிந்துரையில் எல்லாம் வல்ல இறைவனால் வழங்கப்பட்ட வல்லமையே இவர்களுக்கு இந்தச் சக்தியை அளித்துள்ளது.

புதிய ஆலயக் கட்டுமானப் பணிகளுக்கு ஆக்கமும் ஊக்கமுமளித்து ஆலய வேலைகளுக்கு வேண்டிய நிதியினைச் சேகரித்து அனுப்பி வைத்து அரும்பணியாற்றியவர்கள் வெளிநாடுகளில் புலம் பெயர்ந்து வாழும் புனிதர் கயித்தானின் பக்தர்களேயாவர்.

அவர்களின் வள்ளற்றன்மையாலும், இங்குள்ளவர்கள் தங்களால் இயன்றவரையில் தொழிலுழைப்பையும், உடலுழைப்பையும் தூய உள்ளத்துடன் நல்கி ஆலயம் கற்பனையில் சிந்திக்க முடியாத அளவிற்கு புதிய எழிலுடன் திகழ ஒத்துழைத்தமை வரலாற்றில் பதியப்பட வேண்டிய அருஞ்செயலாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் புதிய ஆலயத் திறப்பு விழா மலர் சிறப்புற அமையும் பொருட்டு ஆசியுரைகள் வழங்கிய யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை, மன்னார் ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை ஆகியோருக்கு மலர்க்குழு சார்பாக எனது இதய பூர்வமான நன்றியைச் சமர்ப்பித்து நிற்கிறேன்.

அத்துடன் யாழ் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார், மறைக்கோட்டக் குரு முதல்வர் அருட்பணி தேவசகாயம் அடிகளார், வெள்ளிவிழா நாயகர் அருட்பணி யேசுதாசன் அடிகளார், எமது பங்குத்தந்தை அருட்பணி ஞானேந்திரன் அடிகளார், நிதிப் பொறுப்பாளர் அருட்பணி அன்ரனிதாஸ் அடிகளார் ஆகியோருடன் மேற்கொண்டு ஆசிச்செய்திகள் வழங்கிய அருட்பணியாளர்கள், அருட்சகோதரிகள், பிரதேச செயலர்கள், கிராம அலுவலர்கள், பாடசாலை அதிபர்கள், கவிதைகள், ஆக்கங்கள் அனுப்பி எமது விழாமலர் சிறப்புற உதவிய அனைவருக்கும் மலர்க்குழு சார்பாக எமது விசேட நன்றிகள்.

புதிய ஆலயத்திறப்பு விழா மலரை அச்சேற்றுவதற்குரிய ஆசிச்செய்திகள், ஆக்கங்கள், ஒளிப்படங்கள் அனைத்தையும் இரவு பகல் பாராது அலைந்து திரிந்து சேகரித்து வழங்கிய செல்வன் ரூபன், திரு. குமார் ஆகியோருக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

புதிய ஆலயக் கட்டுமானப் பணிகள் ஆரம்பமாகிப் பூர்த்தியடையும்வரை அதனை நெறிப்படுத்திய பங்குத்தந்தையின் பணி அளவிட முடியாதது. அருட்பணி ஞானேந்திரன் அடிகளார் அவர்களின் மதியூகத்தினாலும் விஞ்ஞான ரீதியான சிந்தனையினாலான நெறிப்படுத்தலினாலும் புனித கயித்தாரின் புதிய ஆலயமானது புதுப்பொலிவுடன் அழகுற் ஜொலித்துக் கொண்டிருக்கிறது. ஒரு சாதாரண ஊழியனைப் போன்று ஏனைய ஊழியர்களுள் ஒருவனாகி ஆலோசனைகளை வழங்கியமைக்காக பங்கு மக்கள் சார்பாக எனது நன்றியைச் சமர்ப்பிக்கின்றேன்.

ஈற்றில் கட்டுமானப் பணிகளின் பொறுப்புக்களைப் பூரணமாகச் சுமந்து இரவு பகலாகத் துயில் நீக்கிச் சகல பணிகளுக்கும் ஈடுகொடுத்து உதவிய திரு. அருமைத்துரை, திரு. கயித்தாம்பிள்ளை ஆகியோருக்கும் ஆகாயத்தில் அந்தர வெளியில் கொதிக்கும் வெயிலிலும் விறைக்கும் குளிரிலும் மன உறுதியோடு புனிதருக்காகத் தங்கள் உயிர்களைப் பணயம் வைத்துக் கட்டுமானப் பணிகளைப் பூர்த்தி செய்த கட்டுமான ஊழியர்களுக்கும், அவர்களைத் தந்துதவி வழிநடத்திய திரு. ஆனந்தன் அவர்களுக்கும், ஆலயம் முழுவதும் ஒளிவெள்ளத் துலங்கிப் பிரகாசிக்கச் சகல முயற்சிகளையும் மேற்கொண்ட திரு. கயித்தாம்பிள்ளை அவர்களுக்கும். அவர்களின் உடன் ஊழியர்களுக்கும், புனித கயித்தானின் இறையாசிக்கிறைஞ்சி முன்னுரையை நிறைவு செய்கிறேன்.

எல்லாம் வல்ல பரம்பொருள் எமது கிராமத்து மக்கள் மனைவரையும் ஆசீர்வதித்துப் பாதுகாத்து வழிநடத்துவாராக.

**ஏ. சவரிப்பிள்ளை (மாரீசன்)**
ஓய்வு பெற்ற அதிபர்,
பொறுப்பாளர், ஆலயத் திறப்புவிழா மலர்க்குழு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கயித்தானு முனீந்திரன் வரலாறு

## கிறிஸ்துவின் ஏழைகள் மேற்கொண்ட அன்பு

இத்தாலி நாட்டின் வின்சென்சா என்னும் மாகாணத்தில் பிரபுக்கள் குடும்பத்தைச் சேர்ந்த கஸ்பார் (Caspar) மரியா (Mary) தம்பதிகளின் புதல்வனாக 1480ம் ஆண்டளவில் கயித்தான் பிறந்தார். அவர் பிறக்கும்போதே கிறிஸ்துவின் ஏழ்மையை அவர் பின்பற்ற வேண்டுமென்பது இறைவனின் சித்தமாக இருந்தது.

கயித்தான் பிறந்து இருவருடங்களில் இவரின் தந்தையார் சண்டையில் காலமானார். அதன் காரணமாக, கயித்தானையும் அவரது இரு சகோதரர்களையும் பராமரித்து நெறிப்படுத்தும் பொறுப்பு தாயார் மரியாவிடம் சேர்ந்தது.

தாயாரின் பிரமிக்கத்தக்க முன்மாதிரிகையினாலும் கற்பித்தலினாலும் அவவுடைய புத்திரர்கள் மிகவிரைவாகவும் ஆச்சரியப்படத்தக்க வகையிலும் ஆண்டவனுக்கு நற்கனியை அபரிமிதமாக அளிக்கக்கூடியவாறு உருவெடுத்தார்கள்.

குழந்தை கயித்தானுடைய அன்னை, மரியாளில் அதிக பக்தியுள்ளவள்; அதனால் அதே பக்தியை மகனிடமும் வளர்த்து வந்தாள். அதனால் மகனை "புனித மரியாளின் கயித்தான்" என்ற பெயராலேயே அழைத்தார்கள்.

குழந்தை கிறிஸ்தவ பழக்கவழக்கங்களிலே வளர்க்கப்பட்டது. குழந்தை முதலில் உச்சரித்த வார்த்தைகள் "யேசு" மரி" என்பவையே. மூன்று வயதாயிருக்கும் போதே வீட்டில் சிறு பீடம் அமைத்து அதைப் பூக்களினாலும், தூபங்களினாலும், புனிதர்களின் படங்களினாலும் அலங்கரித்து, தம உறவினரையும் அழைத்து அப்பீடத்தின் முன் செபிக்கும் பழக்கம் அவரிடமிருந்தது.

சிறுபராயம் தொட்டே ஏழைகள் மீது அன்புள்ளவராகக் காணப்பட்டார். தங்கள் வீட்டிற்கு வரும் ஏழைகளுக்குத் தமது கையாலேயே தானதருமம் செய்வார். சில வேளைகளில் தாய் தனக்குக் கொடுக்கும் சிற்றுண்டிகளைத் தியாகம் செய்து வறியவர்களுக்குக் கொடுப்பார்.

கிறிஸ்தவ போதனைகளில் நன்கு பயிற்சி பெற்றார். சில வேளைகளில் சிறு சிறு சமயவிவாதங்களில் ஈடுபட்டுக் கத்தோலிக்கக் கொள்கைகளை உறுதியுடன் நிலை நாட்டுவார். இதன் மூலம் பின்பு அவர் லூதரின் பதித கொள்கைகளைத் தீவிரமாக எதிர்ப்பதற்கு இறைவன் கயித்தானை ஆயத்தம் செய்து கொண்டு வந்தார்.

சிறுவயதிலிருந்தே இலக்கியக் கல்விபயிலத் தொடங்கினார். பாடசாலைப் படிப்பில் ஈடுபட்ட பொழுதிலும் சமய ஆசாரங்களைக் கைவிடவில்லை. திருப்பலிப் பூசையில் பங்குகொண்டு செபமாலை ஓதி, அடிக்கடி பச்சாத்தாபம் எனும் திருவருட்சாதனத்தை நாடுவார்

அவர் விரைவில் திருவிருந்தருந்த வேண்டுமென ஆவல் கொண்டிருந்தார். அவரின் பக்தியை உறுதிப்படுத்துவதுபோல ஆவியானவர் அவருக்கு ஒருமுறை அவர்களின் தோட்டத்தில் காட்சியளித்து "கயித்தானே சமாதானம் உன்னுடன் நிரந்தரமாக இருப்பதாக அதை ஒருபோதும் இழந்து விடாதிருக்கப் பார்த்துக்கொள்" எனக் கூறினார். கயித்தானும் இந்த அமைதியை என்றுமே இழந்ததில்லை.

இலக்கியக் கல்வி முடிந்ததும் தத்துவ இயல் (Philosophy) கற்க ஆரம்பித்தார். அவரது பக்திமுயயற்சிகளும் வளர்ந்தன. வைத்தியசாலைகளுக்குச் சென்று நோயாளர்களையும் சந்தித்தார். தனக்குச் சேரவேண்டிய குடும்பச் சொத்துக்களை விற்று வறியோருக்கு வாரிவழங்கினார்.

அவரின் தலைசிறந்த வாழ்க்கையைக் கவனித்த ஊர்மக்கள் அவரைப் "புனிதர்" என்று அழைக்க ஆரம்பித்தனர். பதுவை என்னும் நகருக்குச் சென்று தேசியச் சட்டமும், திருச்சபைச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டமும் படித்து அவைகளில் 17.07.1504ல் கலாநிதி பட்டம் பெற்றார். அதே வேளையில் இறையியல் (Theology) படிப்பிலும் ஈடுபட்டார்.

## தியாகச் செம்மல்: ஓர் இலட்சியத் துறவி

உலகிற்கு முற்றாகப் பிரியாவிடை கூற வேண்டுமென விரும்பித் துறவற உடுப்பு அணியத் தொடங்கினார். தனது பெற்றோரின் கிராமமாகிய "ரம்பட்சோ" என்னும் சிறிய கிராமம் சென்று துறவற வாழ்வை ஆரம்பித்தார். அக்கிராம மக்கள் பங்குக் கோவிலிலிருந்து அதிக தூரத்தில் வசித்ததால் சமய வசதிகள் மிகக் குறைவாக இருந்தன்.

எனவே கயித்தான் அக்கிராம மக்களுக்கெனத் தனது செலவில் ஒரு கோவிலைக் கட்டி அவர்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியைப் போதித்தார். மனந்திரும்பிய புனித மரியமதலேனாள் பெயரிலேயே கோவில் கட்டப்பட்டது. அக்கிராமத்தில் வெகு காலம் தங்கவில்லை.

அங்கிருந்து ரோமாபுரிக்கு 2ம் ஜூலியஸ் பாப்புவினால் அழைக்கப்பட்டுப் பாப்புவினால் அந்தரங்க விடயங்களைக் கண்காணிக்கும் பொறுப்பு அவரிடம்ஒப்படைக்கப்பட்டது. "ரம்பட்சோ" கிராமமக்களுக்கு இது ஒரு பேரிழப்பாகவே இருந்தது. கண்ணீருடனும், கவலையுடனும் அவருக்குப் பிரியாவிடை கூறினர்

இரண்டாவது ஜூலியஸ் பாப்பு இறந்தபின் வந்த பத்தாம் சிங்கராயர் பாப்புவும் கயித்தானை தன்னுடன் வைத்திருக்க விரும்பினாலும் கயித்தான் பாப்புவின் அனுமதியுடன் அங்கிருந்து புறப்பட்டுக் குருவாக வரத் தன்னை ஆயத்தம் செய்தார். அக்காலத்தல் 33வயது நிரம்பியவர்கள் தான் குருவாக வரலாம். எனவே இந்த வயது நிறைவெய்தியபின் மூன்று மாதம் கடுமையாக ஆயத்தம் செய்து ஏழு நாட்கள் கடும் உபவாசம் இருந்த பின்னர் ரோமாபுரியில் சாந்தமரியா மஜோரே என்னும் பேராலயத்தில் கிறிஸ்துவின் பிறப்புத் திருநாளாகிய நத்தாரன்று தனது முதற் பூசைப்பலியை ஒப்புக் கொடுத்தார்

மிகவும் பக்தியுடனும், வழிந்தோடும் கண்ணீருடனும் கிறிஸ்துவின் தொட்டிலென அழைக்கப்படும் பீடத்தில் திருப்பலியை ஒப்புக்கொடுத்தார். இதே பீடத்தில்தான் 1517ம் ஆண்டு நத்தார் திருநாளன்று இரவில் பரிசுத்த கன்னி மரியம்மாளிடமிருந்து புனித சூசையப்பரும், புனித ஜெறோமும் உற்சாகப் படுத்த குழந்தை யேசுவை, தமது கரங்களில் பெற்றார்

10ம் சிங்கராயர் பாப்புவின் ஆட்சிக்காலத்தில் கத்தோலிக்க மதத்திற்கு விரோதமாக எழுந்த தப்பான கொள்கைகளை எதிர்த்துப் போராடக் கயித்தான் "புனித அன்பின் போதகர் கூடம்" (Oratory of Divine Love) என்னும் ஒரு சபையை ஆரம்பித்தார். அது இத்தாலி நாட்டின் பற்பல பாகங்களிலும் பரவியதுமல்லாமல் அநேக ஆயர், கருதினால்மார் 4ம் சின்னப்பு பாப்பு முதலியவர்களையும் அங்கத்தினராகக் கொண்டிருந்தது.

தனது தாய் கடுமையான நோயாளியாக இருப்பதை அறிந்து தனது சொந்த ஊருக்குப் புறப்பட்டு அங்கும் அதே போதகர் சபையை ஸ்தாபித்தார். அத்துடன் வின்சென்யா என்னும் தமது ஊரில் ஒரு பெரிய வைத்திய சாலையையும் கட்டுவித்தார். அஙகிருந்து வெறொனா, வெனிஸ் முதலிய நகரங்களுக்கும் சென்று கிறிஸ்துவின் அன்பைப் பரப்பினார்.

எங்கும் நோயாளிகள் மட்டில் விசேட அக்கறை செலுத்தினார.

"அன்பிலாரெல்லாம் தமக்குரியர். அன்புடையார் என்புமுரியர் பிறர்க்கு" என்னும் குறளிலே வள்ளுவர் அன்புடையோரது என்பும் பிறர்க்கே உரியது என்றார. அக்கருத்துக்கேற்ப முற்றிலும் பிறருக்கே உரியவராக வாழ்ந்தார் அவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொற்றுநோய் வேளையில் பற்றிப் பெருகிய அன்பு வெள்ளம்

தன் ஆன்ம குருவின் ஆணைக்குச் செவிசாய்த்து தொற்றுநோய் பரவியிருந்த ஆறாமாபுரிக்குச் சென்றார். அங்கு தொற்று நோய் பீடித்திருந்த மக்களை அவர்களின் இல்லங்களிலும், மருத்துவ மனைகளிலும் சந்தித்து, அவர்கள் நல்மரணமடைய அவர்களை ஆயத்தம் செய்தார்.

தான் ஏற்ற வழியிற் செல்லத் தனக்கு வழிகாட்டும் படி இறைவனை என்றும் வேண்டுவார். இதற்குப் பதிலளிப்பது போல இறைவனும். **கியேற்றி ஆயர் ஜம்பிற்றோ கறய்வா, அவரது ஆருயிர் நண்பன்** பொணிவாக்சியேடா கொள்ளே என்பவர்களின் உதவியுடன் "துறவற வாக்குத்தத்தங்கள் எடுத்த மடத்துத் துறவிகள்" **(Regulass Clerics)** என்னும் குருக்கள் துறவற சபை ஒன்றிற்கு அத்திவாரமிட்டார்.

## கிறிஸ்துவிற்காகக் களத்திலே போராட ஒரு புதிய துறவற சபை

இறைவனின் திருவுளத்திற்குச் செவிசாய்த்து (03.05.1524) திருச்சிலுவை கண்டெடுத்த திரு நாளன்று தனது புதிய துறவற சபையை அங்கீகரிக்குமாறு 7ம் சாந்தப்ப பாப்புவிற்கு (Pope Clement VII) மிகவும் தாழ்மையுடன் விண்ணப்பம் செய்தார்.

அப்போஸ்தலரின் வாழ்வைப் பின்பற்றி லூதரின் தப்பிதமான கொள்கைகளை எதிர்க்கக்கூடிய இறைபுகழுக்கு முதலிடம் அளிக்கும்தூய குருக்கள் கொண்ட இப் புதிய சபை நல்லதெனப் பாப்பு அதற்கு அங்கீகாரம் கொடுக்க ஆயத்தமாக இருந்தார். ஆனால் கருதினால் மாரின் அபிப்பிராயத்தையும் அறிய வேண்டி இருந்தது.

அவ்வேளைதான் தீயவன் தன் வேலையைச் செய்ய ஆரம்பித்தான். கருதினால்மார் இப்புதிய சபையை எதிர்த்தனர். ஆனால் கயித்தான் தனக்கு இறையருளில் போதிய நம்பிக்கை உண்டென்றும் மக்கள் சேவையுடன் செபவாழ்வும் நடத்த இறைவன் அருள் புரிவார் எனவும் வாதாடி தனது புதிய சபைக்கு அங்கீகாரம் பெற்றார்.

புரட்டாதி மாதம் 14ம் நாள் வர்த்திக்கான் புனித இராயப்பர் பேராலயத்தின் புனித பெலவேந்திரன் பீடத்திற்கு முன்பாக கயித்தான் புதிய சபையின் நித்திய வாக்குத்தத்தத்தை ஆடம்பரமான முறையில் எடுத்தார்

## பதிதத்தினோடு மோதிய புதிய சபை

றோமாபுரியில் புதிய சபை அரும்பெரும் சேவைகள் புரியத் தொடங்கியது. கயித்தான் கோவில்களிலும், தெருவோரங்களிலும், மறைப்போதகங்களிலும், திருவருட்சாதனங்களுக்கு மக்களை ஆயத்தம் செய்வதிலும், மருத்துவ மனைகளில் நோயாளிகளைச் சந்தித்து அவர்களுக்கு ஆறுதல் கூறுவதிலும் தனது நேரத்தைச் செலவு செய்தார். அவ்வாண்டு (1525) புனிதவாண்டாகையால் றோமாபுரிக்கு யாத்திரிகர்களாக வந்த அநேகர் கயித்தானின் சேவையால் பயனடைந்தனர்.

கயித்தானும் அவர்சபைக் குருக்களும், தெருத்தெருவாக, கைகளில் சிலுவைகளுடன்திரிந்து மக்களுக்கு ஆறுதலும் தேறுதலும் கூறினர். ஆனால் பொன்னாசையும் கத்தோலிக்க திருச்சபைமேல் மக்கள் வைத்திருந்த வெறுப்பும் இவர்களின் நல்ல சேவையை நசுக்கி விட்டன. தங்கள் ஆச்சிரமத்திற்குச் சென்று இறைவனிடம் செபிப்பதைத் தவிர கயித்தானாலும் சீடராலும் வேறு எதுவும் செய்ய முடியவில்லை.

## நித்திய நகரிற் சத்தியப் போர்

அவரின் செல்வங்களை அபகரிக்கலாமென அவரிடம் சென்ற விரோதிகள் ஏமாற்றமடைந்தனர். அவரைவதைத்தனர். அவரின் உடைகளைக் களைந்து அவரை ஆகாயத்தில் தொங்க விட்டனர். அத்துன்பங்கள் மத்தியில், கயித்தான் தன் பொறுமையை இழக்கவில்லை மாறாக விரோதிகளை மன்னிக்கும்படி இறைவனை வேண்டினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்பு புதிய சபையினர் 12 பேரும் வத்திக்கான் சிறைச்சாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு மிகவும் கேவலமான முறையில் கொடுமைப்படுத்தப்பட்டனர். அங்கு அவர்கள் இறைபுகழ் பாடுவதைக் கேட்ட ஒரு ஸ்பானிய சிறைச்சாலை மேற்பார்வையாளன் அவர்கள் விடுதலையடைவதற்கு உதவினான். இராயப்பர் பேராலயத்தில் கயித்தான் திருப்பலி ஒப்புக்கொடுத்தபின் அங்கிருந்து 13 பேரும் ஒரு வள்ளத்திலே வேறொரு நகரத்திற்குப் புறப்பட்டனர்.

## வெனிஸ்டப் பட்டினத்தில் புரண்டோடிய இரக்க வெள்ளம்

ரோமாபுரியில் வெனிஸ் நகரின் தூதுவராயிருந்தவரின் உதவியுடன் கயித்தானும் அவரின் சீடர்களும் வெனிஸ் வந்தடைந்தனர். கயித்தானின் புதிய சபையை அழிந்துபோக இறைவன் விடவில்லை.

வெனிஸ் நகர மக்கள் அன்புடனும், மரியாதையுடனும் அவர்களை வரவேற்றனர். அவர்கள் வசிப்பதற்கு மடங்கள் கொடுக்கப்பட்டன. சபையின் முதல் சிரேஷ்டரின் ஆட்சிக்காலம் முடிவடைந்ததும், கயித்தான் சபையின் சிரேஷ்டராக நியமனம் பெற்றார். வேறு நகரங்களிலும் இச்சபை பரவி, மக்களுக்குச் சிறப்பாக ஏழைகள் நோயாளிகள் முதலியோருக்குப் பற்பல சேவைகள் செய்தது

வெனிஸ் நகரிலும் தொற்றுநோய் பரவிய வேளை கயித்தான் மக்களை அந்நோயிலிருந்து காப்பாற்றத் தன் உயிரையே தியாகம் செய்ய ஆயத்தமானார். அவர்களுடன் உறங்கினார், அவர்களின் மிச்ச உணவைப் புசித்தார். அவர்களுக்கு அதிக சேவை செய்ய வேண்டுமென்பது தான் அவரினது, அவரின் சீடர்களினதும் ஒரே ஆவலாக இருந்தது.

## மரியாளின் காட்சி கயித்தான் பெற்ற மகிழ்ச்சி

கடுமையான நோய்வாய்ப்பட்டிருந்த வேளையிலும் கயித்தான் சிலுவைமீது வைத்திருந்த அன்பையும், தன் தாழ்மையான எண்ணங்களையும் கைவிடவில்லை. அவரைக் கண்காணித்த வைத்தியரே "அவர் எல்லாப்புண்ணியங்களுக்கும் மேல்வரிச் சட்டமாக இருக்கிறார்" எனக் கூறினார்.

சாகும் தறுவாயிலும், கயித்தான் கிறிஸ்துவின் திருப்பாடுகளின் சரிதையைத் தனக்கு வாசிக்கும்படி வேண்டினார். கடைசி முறையாக மிகவும் பக்தியுடன் திருவிருந்தில் பங்கு கொண்டார். அவ்வேளையில் தான் யாருக்காவது குறை செய்திருந்தால் அதை மன்னிக்கும்படி வேண்டினார். அவர் இறந்துவிட்டாரென மக்கள் எண்ணினர்.

ஆனால் அவர் சிலுவையைத் தனது மார்போடு இறுக இணைத்துக்கொண்டு தனது இறுதிநேரத்தை எதிர்பார்த்துக் கொண்டிருந்தார். அவ்வேளை மரியன்னை அவருக்குக் காட்சி கொடுத்து "புறப்படு கயித்தானே, எனது திருமகன் உனக்காகக் காத்திருககின்றார். சமாதானமாகப் போவோமாக" என மொழிந்தார்.

தன் கண்களையும், கரங்களையும் மேலே வானகப்பக்கம் திருப்பித் தன் ஆன்மாவை மோட்ச இராக்கினி மூலம் இறைவனிடம் கயித்தான் ஒப்படைத்தான்.

அவர் இறந்தது 07.08.1547 ஞாயிற்றுக் கிழமை நேபிள்ஸ் நகரில் மாலை 7.00 மணிக்கு அவரது 67வது வயதில், அவரின் ஆன்மா உடலை விட்டுப் பிரிந்தது. அவ்வேளை நேபிள்ஸ் நகர மக்கள் தங்களுக்குள்ளிருந்த வேறுபாடுகள், வெறுப்புகள், போராட்டங்கள் எல்லாவற்றையும் மறந்து ஒரே திரளாக கயித்தானின் சடலம் வைக்கப்பட்டிருந்த தேவாலயத்திற்குத் தங்கள் இறுதி மரியாதையை அவருக்குச் செலுத்தும் பொருட்டு ஓடோடிச் சென்றனர்.

"தம்மைத் தாழ்த்துபவர்கள் உயர்த்தப்படுவார்கள்" என்பதற்கொப்ப கயித்தானின் உத்தம வாழ்வு அவரை ஒரு புனிதராக உயர்ந்து ஒரு உன்னத நிலையை எய்தச் செய்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவரின் மரணத்தின் 72 வருடங்களின்பின் 08.10.1629ல் முத்திப்பெறுபேறு பெற்ற பட்டமும், 12.04.1671ல் புனிதர் பட்டமும் திருச்சபையால் அவருக்கு வழங்கப்பட்டது. அவருக்கு 10ம் சாந்தப்ப **(Clement – X)** பாப்புவால் புனிதர் பட்டம் வழங்கப்பட்டது

வின்சென்சியா மக்கள் தங்கள் பாதுகாவலராக புனித கயித்தானைத் தேர்ந்தெடுத்துக் கொண்டனர்.

மாரீசன் பதிவாழ் கத்தோலிக்க மக்கள் அனைவரும் புனித கயித்தானு முனீந்திரனைத் தங்களது பாதுகாவலனாகவும் வழிகாட்டியாகவும் 1865ம் ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஏற்று வருடந்தோறும் விழாவெடுத்து வணங்கிப் போற்றித் துதித்து வழிபட்டு வருகின்றனர்.

இவ்வளவு காலமும், கிராமத்திலும் புலம் பெயர்ந்து வெளிநாடுகளிலும் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் அனைவரையும் பாதுகாத்து வழிநடத்துவதற்கு நன்றிக்கடனாக புனித கயித்தானு மாமுனிக்கு இவ்வருடம் ஒரு புதிய அழகான ஆலயத்தைக் கட்டியெழுப்பி திறப்பு விழாவையும் திருநாளையும் நடாத்தி அவருக்குப் பாத காணிக்கையாக்கி மகிழ்வடைகின்றனர்.

எமது பாதுகாவலர் எமது கிராமத்திலுள்ள அனைத்து மக்களையும் இங்கு வழிபட வருகின்ற அனைத்து சமய மக்களையும் வருங்காலத்திலும் நிறைவாக ஆசீர்வதித்துக் காப்பாற்ற அவரிடம் இருகரம் கூப்பி இறைஞ்சுவோம்.

மேலும் இந்த ஆலயத்தைக் கட்டியெழுப்புவதில் ஊக்கமும் உற்சாகமும் அளித்து பங்குமக்களில் தானுமொரு பங்காளியாகவும் செயற்பட்டு எமது பங்கு மக்களின் ஈடேற்றத்திற்காகவும், முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்துக் கொண்டிருக்கும் எமது பங்குத்தந்தை அருட்திரு ஞானேந்திரன் அடிகளாரையும், கடந்த காலங்களில் எமது பங்கில் பணியாற்றி மாற்றலாகிச் சென்ற அருட்தந்தையர்கள் அனைவரையும் எமது காவலர் நிறைவாக ஆசீர்வதித்துக் காப்பாற்றி வழிநடத்த அனைவரும் வேண்டுவோமாக.

மாரீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரீசன்கூடல்
# புனித கயித்தார் ஆலய வரலாறு

மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயம் மிகவும் பழமைவாய்ந்ததொன்றாகையால் அதன் ஆரம்ப அடிப்படை வரலாற்றைத் திட்ட வட்டமாகக் கணிப்பிட்டுக் கூற முடியாதுள்ளது. எனினும் நல்லூர் அருட்தந்தை சுவாமி ஞானப்பிரகாசர் அவர்களால் வெளியிடப்பட்ட "இருபத்தைந்தாண்டு கத்தோலிக்க சபையின் வளர்ச்சி" என்னும் நூலிலிருந்து பெறப்பட்ட ஒருசில ஆதாரங்களுடன் ஆரம்ப வரலாறு தர முடிந்தது.

முற்காலத்தில் இங்கு ஒரு பழைய கோவில் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. அதற்கான அடிக்கல் போதகர் சபையின் இலங்கையின் கடைசி அப்போஸ்தலிக்க பதிலாளியான கயித்தானே அந்தோனியோ என்னும் அடியார்களால் நாட்டப்பட்டதாகக் கூறப்படுகிறது. அக்கோவில் 1843ல் பிரான்சீஸ்கோ என்னும் குருவானவரால் பூர்த்தி செய்யப்பட்டது. இதுதான் கோவிலின் ஆரம்பவரலாறு.

**1865ம் ஆண்டு தொடக்கம் 1908ம் ஆண்டுவரை அமைந்த ஆலயத்தின் வரலாறு**

இந்த வரலாறு 1865ம் ஆண்டிலிருந்து ஆரம்பமாகிறது. பொயிசியோ என்னும் போதகர் சபைக் குருவானவர் இந்த ஆலயத் திருப்பணியை ஆரம்பித்து வைத்தார். இந்த ஆலயத்தின் நிர்மாணிப்பிற்கான தேக்கமரத்தாலான தூண்கள் யாழ்ப்பாணம் புனித சந்தியோகுமையோர் ஆலயத்திலிருந்து பெறப்பட்டன.

இப்படியான தூண்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டில் கரையோரப் பகுதியை அண்டிய ஆலயங்களில் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம். கொழும்புத்துறை செபமாலை மாதா ஆலயம், யாழ் சந்தியோகுமையோர் ஆலயம், நாவாந்துறை பழைய புனித நீக்கிலாஸ் ஆலயம், பத்தாவத்தை புனித பிலிப்நேரியார் ஆலயம், இளவாலை புனித யாகப்பர் ஆலயம், வலித்தூண்டல் புனித அன்னம்மாள் ஆலயம், ஊறணி புனித அந்தோனியார் ஆலயம், மயிலிட்டி புனித காணிக்கை மாதா ஆலயம், பருத்தித்துறை பழைய புனித தொம்மையப்பர் ஆலயம் ஆகியவற்றில் இப்படியான தூண்கள் பயன்படுத்தப்பட்டிருப்பதைக் காணலாம்.

அந்த நாட்களில் இத்தகைய பாரிய தூண்கள் ஏற்றி இறக்கப்பட்டமையிலிருந்து அக்கால மேலைத்தேயக் குருக்களின் இறைவிசுவாசத்தையும், அர்ப்பணிப்புச் சேவையையும், தியாக உணர்வையும் எம்மால் புரிந்துகொள் முடிகிறது.

1875ல் இறஉவியாக் (Rauffica) என்னும் குருவானவர் சேமக்காலைக்காக நிலத்தைப் பெற்றுக்கொண்டார்.

10ஆண்டுகளின் பின் 1885ல் இலாவாஜ் (Lafarge) என்னும் குருவானவர் ஆலய வெளிமனையை எழுப்பினார்.

1888ல் புதிதாக மரங்கள் (மரங்கள், தீராந்திகள்) சேகரிக்கப்பட்டு பீடத்தின் மேலுள்ள கோபுரம் முடிக்கப்பட்டது.

கட்டுமானப் பணிகள் முருகைக் கற்களைப் பயன்படுத்திச் சுண்ணாம்புச் சூளை மூலம் பெறப்பட்ட சுண்ணாம்பும் மணலும் கலந்து தயாரிக்கப்பட்ட சுண்ணக் கலவையினால் மேற்கொள்ளப்பட்டதாகத் தெரிகிறது.

1893ன் பின்னர் பொறுப்பேற்றுக்கொண்ட டோறற் சுவாமி என்னும் குருவானவர் முன்பிருந்து அழிக்கப்பட்ட நாலுபக்கமும் சாலையுடன் சுவர்களடங்கிய பிரமாண்டமான குருமனையைக் கட்டினார். இதுவும் சூளைச் சுண்ணாம்பினால் வெட்டப்பட்ட முருகைக் கற்கள் மூலம் கட்டப்பட்டிருந்தன. நான் மிகவும் சிறுவனாய் இருந்தபோது ஆலயத்தின் மேற்கில் சுண்ணாம்புச் சூளையின் எஞ்சிய பகுதியைக் காணக்கூடியதாக இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"டன் (Danne) சுவாமியார் ஆலயத்தின் முகப்பு (Fascadi) வேலைகளைத் தொடங்கினார். கிற்றோ சுவாமியார் வேறுபல திருத்தங்களைச் செய்தார். ஆலய எல்லைச் சுவர்களும், சேமக்காலை எல்லைச் சுவர்களும் முருகைக் கற்களால் கட்டப்பட்டிருந்தமை சிறப்பம்சங்களாகும்.

(எனது நான்காவது அகவையில் பாலர் கீழ்ப் பிரிவில் படித்துக் கொண்டிருந்த 1936ம் ஆண்டிலிருந்து 1938ம் ஆண்டுவரை நினைவிலிருந்து)

ஆலயத்தின் வலது (மேற்கு) இடது (கிழக்கு) புறப் பக்கங்களில் உயர்ந்து வளர்ந்து காற்றுக்காடிக் கொண்டிருந்த தென்னைமரங்களைக் காணக்கூடியதாக இருந்தது. இவைகள் ஆலயத்தின் அழகிற்கு மெருகூட்டிக் கொண்டிருந்தன.

பழைய குருமனையின் முன்பக்கத்தில் மிகவும் பழமை வாய்ந்த மிகப்பருத்து (சுற்றளவு 15 அடிவரையில் இருக்கும்) உயர்ந்த நிழல்வாடி மரம் நாற்றிசையும் மிகவும் நீண்ட கிளைகளைப் பரப்பி நிழல் அளித்து அழகாகக் காட்சி அளித்துக் கொண்டிருந்தது.

1935ம் ஆண்டு (அப்பொழுது நான் எடுக்குப் பிள்ளை) நத்தார் திருநாள் (கிறிஸ்மஸ் பண்டிகை) அன்று நள்ளிரவுத் திருப்பலி நிறைவு பெற்ற பின் இந்த நிழல்வாடி மரத்தின் கீழ் கிறிஸ்மஸ் கரோள் மிகச் சிறப்பாக அரங்கேற்றப்பட்டமை இன்னமும் என் கண்முன் நிழலாடுகின்றன. நிழல்வாடி மரத்தில் தொங்கவிடப்பட்டிருந்த பெற்றோமக்ஸ் ஒளியின் வெளிச்சத்தில் நடைபெற்றது குறிப்பிடத்தக்கது.

ஆலய முகப்பின் எல்லைச் சுவரோரமாக நன்கு பருத்து உயர்ந்த வேப்பமரம் ஒன்று நிழல் பரப்பிக் கொண்டிருந்தது. ஆலயத்தின் தென்மேற்குத் திசையில் பழைய றோ. க. த. க பாடசாலை கட்டப்பட்டிருந்தது. இதுவும் முருகைக் கற்களால் கட்டப்பட்டு கிழக்குப் பக்கம் அரைச்சுவருடன் கம்பிவலை அடித்து அடைக்கப்பட்டிருந்தது.

முகப்பிலிருந்த வேப்பமர நிழலில் "சூரியன் குஞ்சு" அம்மா பாடம் படிப்பித்தார், அவ சூரியனைப்போல் பிரகாசமாகவும் மிக அழகாகவும் காட்சியளித்தபடியால், "சூரிய குஞ்சு" எனப் பாசமுடன் அழைக்கப்பட்டார். இவர் தினமும் அப்பம், தோசை,இடியப்பம் என்பன கொண்டுவந்து தருவார், அவர் திருமணமாகாதவர், கற்பித்தலில் அர்ப்பணிப்புச் சேவை ஆற்றினார், இவருக்கு உறவினரான ஞானப்பிரகாசம் என்பவர் அதிபராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். இவருக்குமுன் இவரது தந்தையார் சூசைச்சட்டம்பியார் இப்பாடசாலையை உருவாக்கி வளர்த்ததாக எனது தந்தையார் கூறியதாக ஞாபகம்.

ஆலயத்தின் இருபக்கங்களிலும் சாலைகள் (விறாந்தை) இறக்கப்பட்டிருந்தன. சீமெந்து போடப்படவில்லை(முகப்பு வேலையும் பூரணமாக முடிக்கப்படாமல் ஒரு குறிக்கப்பட்ட உயரத்துக்கு எழுப்பப்பட்டிருந்தது.) ஆலய உட்பக்கம் சீமெந்திடப்பட்டிருந்தது. முகப்பில் தரைக்கு ஒரு குறிக்கப்பட்ட அளவுக்குக் கற்கள் பதிக்கப்பட்டிருந்தன.

1940ம் ஆண்டுவரை சுவாமி ஆசீர்வாதம் அடிகளார் எமது பங்கிற்குப் பொறுப்பாக விருந்தார். பின்னர் அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளார் பொறுப்பேற்றார்கள் அவர்களுடைய ஆலோசனைக்கமைய எனது தந்தையாரால் ஆலயத்தைச் சுற்றி இரு பக்கங்களிலும் மாங்கன்றுகள் நடப்பட்டு வளர்க்கப்பட்டன.

அருட்தந்தை ஜேம்ஸ் அடிகளாருக்குப் பின்னர் அருட்தந்தை சேவியர் அடிகளார் பொறுப்பேற்றார்கள். அவருடைய காலத்தில், முகப்பு வேலைக்காக ரூபா 2000 கடனாகத் தந்துதவினார்கள். அவருடைய கைங்காரியத்தினால் முகப்பு வேலை பூரணமாக அமுடிக்கப்பட்டு இன்று பழைய ஆலயத்திற்கும் சாட்சியாக விளங்குகிறது.

ஆலய முகப்பு வேலையை ஆலய மூப்பர் தம்பிமுத்து அவர்களும் பெரியார் பூபால பிள்ளை அவர்களும் பொறுப்பெடுத்துச் செய்து முடித்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இதற்கிடையில் ஆலய மக்கள் ஒன்றிணைந்து மூப்பர் தம்பிமுத்து அவர்கள் தலைமையில் கொழும்புத்துறை பிரபல ஓவியரும், புகைப்படப் பிடிப்பாளருமாகிய மாணிக்கத்தம்பி என்பவர் மூலம் ஆலய உட்பகுதியையும், பீடத்தையும் அலங்கரிக்கும் பொருட்டு பத்து வில்லுப் பூஞ்செடி வளைவுகளையும் 10சோடி சம்மனசுகளையும் தயாரித்து முதன்முதலாக 1947ம் ஆண்டு நத்தார்ப் பண்டிகையை முன்னிட்டு ஆலயத்தை அலங்கரித்திருந்தமை கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. இந்த அலங்காரச் சோடினைகள் துணியுடன் காட்போட் மட்டையைப் பயன்படுத்தி மரச்சட்டங்களில் பொருத்தப்பட்டன.

குடாநாட்டில் எந்த ஆலயங்களிலும் இப்படியான சோடினை பயன்படுத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

1963ம் ஆண்டு தொடக்கம் 1970ம் ஆண்டுக்கிடைப்பட்ட காலத்தில் ஆலயம் பூரணமாகத் திருத்த வேலைக்கு உட்படுத்தப்பட்டது. முகடு திறக்கப்பட்டு, கை மரங்களில் பழுதானவை யாவும் அகற்றப்பட்டு புதிய மரங்கள் மாற்றப்பட்டு ஓடுகள் போடப்பட்டன, உட்கோவில் முகட்டு மரங்கள் யாவும் மாற்றியமைக்கப்பட்டன. ஆலயத்தின் சுவர்கள் உட்புறம், வெளிப்புறம் யாவற்றிலும் சுண்ணாம்புப் பூச்சுகள் பூரணமாக அகற்றப்பட்டு சீமெந்துக் கலவையினால் பூசி வெள்ளையடிக்கப்பட்டது.

கயித்தானு முனீந்திரன் ஆலயம் இருபிரிவுகளைக் கொண்ட காலப்பகுதிகளுள் அடங்குகிறது.

1. பழைய கோவில் அதன் ஆரம்ப காலம் குறிப்பிடப்படவில்லை. அந்த ஆலயம் பூர்த்தி செய்யப்பட்டது 1843ம் ஆண்டு.
2. புதிய கோவில் 1865ம் ஆண்டு பொயிசியோ என்னும் குருவானவரால் ஆரம்பிக்கப்பட்டு, 1888ம் ஆண்டு பூர்த்தி செய்யப்பட்டது.

பழைய கோவிலின் ஆயுட்காலம் 1843 தொடக்கம் 1865வரையான 23 வருடங்கள். புதிய கோவிலின் ஆயட்காலம் 1865 தொடக்கம் 2008வரை 143 ஆண்டுகள். புனிதரின் ஆலயவழிபாடு தொடங்கி (1843 – 2010வரை) 168 ஆண்டுகள் ஆகின்றன.

எனவே இந்த ஆலயம் கட்டப்பட்ட காலம் தொடக்கம் இன்றுவரை 145 ஆண்டுகளை நிறைவு செய்கிறது. இவ்வளவு ஆண்டுகளுக்கு சுண்ணாம்புக் கலவையிலான கட்டிடம் தாக்குப்பிடித்ததே அதிசயம்தான். இதற்குக் காரணம் இடைக்காலத் (1964-1970) திருத்தவேலைதான். மீண்டும் ஒரு திருத்த வேலைக்கு ஆலயத்தை உட்படுத்தும் நோக்குடன் பங்குத்தந்தை ஞானேந்திரன் அடிகளாரும் ஆலய நிர்வாகசபை உறுப்பினர்ளும் யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையுடன் கலந்தாலோசனை ஒன்றை நடாத்தினர்.

ஆலயத்தின் ஆயுள் ஒன்றரை நூற்றாண்டையும் கடந்துள்ள படியால் மீண்டும் அதனைத் திருத்த வேலைக்குட்படுத்துவது விவேகமான செயலாக இருக்க முடியாதென்ற தீர்மானத்துடன் கோயிற்சபை ஊர் திரும்பியது.

ஒரு ஆலயத்தைக் கட்டியெழுப்புவதென்பது அவ்வளவு சுலபமான ஒரு காரியமல்ல. அதுவும் இந்தக் காலத்தில் ஒரு தளம்பற் பொருளாதாரம் நிலவும் ஒரு இக்கட்டான கால கட்டத்தில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். கட்டிடப் பொருட்களின் விலைகள் யாவும் மலையென உயர்ந்து நிற்கும் வேளையிலே மாரீசன் கூடல் புனித கயித்தாரின் பக்தர்களாகிய பங்கு மக்கள் மனத்துணிவுடனும், இலட்சிய உறுதியுடனும் புதிய ஆலயத்தை எப்படியாவது கட்டிமுடிப்போம் என்று எல்லாம் வல்ல இறைவனின் விசேட அருளாலும், எமது காவலரின் வேண்டுதலாலும் ஒன்றுபட்டு முடிவெடுத்தமையும் ஆச்சரியத்துக்குரியதே. இந்த முடிவும் இறைவன் தூண்டுதலால் மேற்கொள்ளப்பட்ட முடிவென்றே கருதுகின்றேன்.

எமது மக்களின் தீர்மானப்படி புதிய ஆலயத்துக்கான அடிக்கல் 30.06.2008இல் அருட்தந்தை யூட் அமலதாஸ் அடிகளாரால் நாட்டப்பட்டது. எமது இப்புதிய ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டிய அருட்தந்தை யூட் அமலதாஸ் அடிகள் எமது ஊரின் மூன்றாவது குருமகன் ஆவார். அவரது தந்தையார் திரு. ச. செபஸ்தியாம்பிள்ளை அவர்கள் பழைய ஆலயக் கட்டுமானப் பணிகளில் முன்னின்று செயலாற்றியவர். எமது கிராம மக்களின் முன்னேற்றத்திற்காகவும் அயராது உழைத்த ஒரு சமூக சேவையாளர். அப்படிப்பட்ட ஒருவரின் புத்திரன் இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆலயத்திற்கு அடிக்கல் நாட்டியமை பெருமைக்கும் மகிழ்ச்சிக்குரிய செயலாகும். தற்போது புலம் பெயர் மக்கள் சார்பில் அவரும் அவரது குழுவினரும் புலம்பெயர்ந்த மக்களுடன் தொடர்பு கொண்டு வேண்டிய நிதியைத் தொடர்ந்து திரட்டி அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள். பல்வேறு நாடுகளிலிருந்து எமது மக்கள் தனிப்பட்ட முறையிலும் தங்கள் பங்களிப்பை மனப்பூர்வமாக அனுப்பியிருக்கிறார்கள். அவர்களின் ஊக்கமும் உற்சாகமும்தான் இங்குள்ளவர்களைச் சோர்வடையவிடாது, இங்கு முன்னின்று உழைப்பவர்களுக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளன.

புலம்பெயர்ந்த மக்களின் உற்சாகத்திற்கும் ஒத்துழைப்பிற்கும் சவாலாக இங்குள்ள எமது மக்களும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றபடியினால்தான் இந்தக்கட்டுமானப் பணிக்காக முழுமூச்சுடன் ஓய்வுறக்கமின்றி உழைத்துக் கொண்டிருக்கும் ஆலய மூப்பர் யேம்ஸ், ஜெறாட், யேசுதாசன் (அருமைத்துரை) அவர்களுக்கும், திட்ட அமைப்பாளராக இயங்கிக் கொண்டிருக்கும் ஏ. கயித்தாம்பிள்ளை அவர்களுக்கும் அனைத்துப் பங்கு மக்களினதும் பாராட்டுதல்கள் உரியதாகும்.

பழைய ஆலயத்தகர்ப்பிலும், புதிய ஆலயக் கட்டுமானப் பணிகளிலும் ஆண்களும், பெண்களும் சலிக்காது பங்கு கொண்டு, பணியாற்றியமையானது நினைத்துக் கூட பார்க்க முடியாத ஒரு சாதனையாகும். ஆண்களுடன் பெண்கள், இளைஞர்கள், யுவதிகள் அனைவரும் சகல பணிகளிலும் ஒன்றுபட்டு உழைத்தமையானது புரட்சிக்கவிஞர் பாரதிதாசனின் எழுத்துக்களுக்கு ஓர் எடுத்துக்காட்டு. அது மட்டுமன்றி இங்குள்ள மக்கள் பல வழிகளிலும் பண உதவியும் செய்துள்ளனர். மாதத்தில் ஒரு நாள் தமது தொழில் முயற்சியில் கிடைக்கும் வருவாயை வழங்கியமை சிறப்பான விடயமாகும்.

கட்டி முடிக்கப்பட்டுள்ள இந்த அழகிய ஆலயத்தை உற்று நோக்குபவர்களின் மனத்திரையில் பழைய ஆலயத்தின் தோற்றம் தென்படும்.

இந்தக் கட்டுமானப் பணிகளைப் பூரணமாக அகற்றுவதற்கு பங்கிலுள்ள குடும்பங்களின் அங்கத்தவர்கள் அனைவருமே தமது அனைத்துக் கருமங்களையும் புறந்தள்ளிவிட்டு இந்தப் பணிகளில் பங்கு கொண்டு, தமது சரீர உழைப்பை ஆண்டவனுக்கு அர்ப்பணித்து செயற்பட்டமையானது, அவர்களின் விசுவாச உறுதியையும், இலட்சியப் பற்றையும், தன்னம்பிக்கையையும், இறையன்பையும் பூரணமாக வெளிப்படுத்தி நிற்கின்றன.

பன்னாடுகளிலும் புலம்பெயர்ந்து வாழும் புனித கயித்தாரின் பக்தர்கள் அனைவரும் ஒன்றிணைந்து வழங்கியுள்ள நிதியானது எமது பங்கு மக்கள் பல மாதங்களாக நன்மனதுடன் அளித்த உழைப்புடன் இரண்டறக் கலந்து இன்று பாருறை மக்களை வியக்க வைக்கும் பேராலயமாய்க் காட்சியளிப்பதானது புனிதரின் வேண்டுதலின் வெளிப்பாடாகும்.

மாரீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை
அவர்களுக்கு
# வரவேற்புக் கீதம்

பல்லவி

மேதகு ஆண்டகை சௌந்திரநாயகம்
ஆதவனாய் எழுந்தார் (2)
மாதவம் செய்தனம் யாமின்று அவர்புகழ் (2)
பாடி மகிழ்ந்திடவே - மேதகு

சரணம்

ஆண்டவர் அருளுடன் ஆசியும் ஈந்தவர்
ஈண்டெமை அழைக்க வந்தார் (2)
வேண்டிடும் வரங்களை அள்ளியே வழங்கிட (2)
வேந்தன் அவர் வந்தார் - மேதகு

மாநிலம் அனைத்திலும் அன்பினை வழங்கிட
மன்னவன் இங்கு வந்தார் (2)
பூதலம் தழைத்திடப் புண்ணியம் செழித்திட (2)
வேதம் அருள வந்தார் - மேதகு

வேதனையால் வாடி அலைந்திடும் அபலைகட் (கு)
ஆறுதல் அளிக்க வந்தார் (2)
சாதனையால் இந்த மாநிலம் அதிர்ந்திடும் (2)
போதனை பொழிய வந்தார் - மேதகு


மாதவன் புனிதர் கயித்தானு முனிந்திரர்
மாட்சியுற் றிலங்கிடவே (2)
ஆதியிறை யேசு ஆலயம் ஆகிட (2)
அபிஷேகம் செய்ய வந்தார் - மேதகு

மாரீசன் பதிஇனி வளர்ந்து செழித்திடும்
மாதவன் வருகையினால் (2)
சீரிய நல்வழி தேர்ந்து உயர்ந்திட (2)
சிறப்புரை வழங்க வந்தார் - மேதகு

மாரீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எமது ஆயர்
மேதகு தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆயரின் ஆசிச் செய்தி



மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலய அர்ப்பணிப்பு விழா மலருக்கு எனது ஆசிச் செய்தியுடன் எனது ஆசீரையும் வழங்குவதில் நான் பெருமகிழ்வடைகின்றேன். ஆலயங்கள் கத்தோலிக்க மக்கள் அனைவரையம் ஒன்றிணைத்து இறைவனை வழிபடும் புனிதமான இடங்களாக விளங்குகின்றன. "ஆலயம் இல்லாத ஊரில் குடி அமராதே" என்னும் நம் முன்னோர்களின் வாக்குக்கேற்ப 1843ஆம் ஆண்டுக்கு முன்னரே இங்கு குடியேறிய நம் முன்னோர்கள் திருமுழுக்கின் மூலம் இயேசு ஆண்டவரை மீட்பராக ஏற்றுக் கொண்டதன் அடையாளமாக ஒரு புதிய கிறிஸ்தவ குழுமம் என்பதன் வெளிப்பாடாக இவ்விடத்திலே புனித பிலிப்பு நேரியாரின் தியான சம்பிரதாய சபைக்குருக்ககளின் (ORATORIAN) வழிகாட்டலில் புனித கயித்தாரைப் பாதுகாவலராகக் கொண்டு ஆலயம் அமைத்தார்கள்.

இலங்கையிலுள்ள 11 மறைமாவட்டங்களிலும் எமது மறைமாவட்டத்தில் மட்டுமே அதிலும் குறிப்பாக மாரீசன் கூடலில் மட்டுமே புனித கயித்தாரின் பேரில் ஆலயம் இருப்பது எம் எல்லோருக்கும் பெருமையே. இன்று நாம் கட்டிமுடித்து, புனிதப்படுத்தி, வழிபாட்டுக்காகத் திறந்து வைத்த ஆலயம் மூன்றாவது ஆலயம் என வரலாறு கூறுகிறது.எனவே இது எமது பாரம்பரிய கத்தோலிக்க விசுவாச வாழ்வின் உண்மைச் சான்றாகவும் வெளிப்பாடாகவும் விளங்குகின்றது. போராட்ட காலங்களில் ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயக் கட்டுமான பணியானது பெரும் பணக் கஷ்டங்கள் மத்தியிலும் பங்குத்தந்தையின் அயராத முயற்சியினால் முன்னெடுக்கப்பட்டு, பங்கு மக்களின் ஒத்துழைப்பினாலும் தியாக வாழ்வினாலும் முடிவுற்று இருப்பது எம் எல்லோருக்கும் பெரும் மகிழ்ச்சியே. இக்கட்டுமானப் பணியில் முன்னின்று உழைத்த அனைவரையும் வாழ்த்தி, புனித கயித்தாரின் பரிந்துரையுடன் கிறிஸ்துவின் சாட்சிகளாக வாழ வாழ்த்தி நிற்கின்றேன்.

இறைவன் உங்களை ஆசீர்வதிப்பாராக

அன்புடன்
பேரருள் திரு. இ. தோமஸ் சவுந்தரநாயகம்
யாழ். ஆயர்
ஆயர் இல்லம், யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் மாரீசன்பதி புனித கயித்தானு முனீந்திரர் புதிய ஆலயத் திறப்பு விழாவிற்கு வருகைதந்தபோது பாடியளித்த**

# வாழ்த்து மடல்

வெண்பா

அருளிறையின் தூதுவனே! ஆன்மீகம் காக்கும்
திருவுறையும் தெய்வத் திருமகனே! – மருவியெமக்(கு)
ஆசீர் வழங்க வந்த அருந்தவத்தோய் தோமாசே!
பாசமுடன் ஈந்தோம்நல் வாழ்த்து.

விருத்தம்

அருளாளும் உள்ளத்தில் அன்பொளிரும்
அகல் விளக்காய் அனைவர்க்கும் ஒளிகொடுக்கும்
திருவாளும் நாவும்தெய் வீகம்தாங்கும்
திருத்தலங்கள் மறையுரையால் பொலிவுபெறும்
கருவினிலே யுருவான ஞானமோங்கும்
கர்மவினை தகர்த்தெறியும் அருள் சுரக்கும்
பெருமானெம் ஆண்டகையும் பகலவனாம்
பெருங்கதிரால் அனைவரையு மணைப்பானாம்

பரமனிறை யேசுபிரான் அடிச்சுவட்டில்
பதைபதைத்துத் துடிதுடிக்கும் மக்கள்நாடி
விரைந்தவர்க்கு வேண்டுவன நல்கிடுவார்
வெந்தழியு மவர்கள்நிலை மாற்றிடுவார்
சுரக்கின்ற அன்பெனும் அமிர்தத்தாலே
சூதுவாது அறியாதபாமரரின்
இரக்கின்ற அவலநிலை யகன்றிடவே
ஈகையினால் இரட்சிக்கும் ஆண்டகையே

நல்லாயன் ஆண்டகையின் வருகையினால்
நாம் மகிழ்ந்தோம் உறுதி பெற்றோம் உயர்ந்திடுவோம்
பொல்லாத தீவினைகள் செலிழக்கும்
பொழிந்தமறை யுரையினாலே தெளிவு பெற்றோம்
வெல்வோமெம் ஆன்மீக வாழ்வினிலே
வேற்றுமைகள் எமையணுக அனுமதியோம்
நல்வினைகள் எமைக்காக்கும் அச்சமற்றோம்
நாயகனாம் ஆண்டகைக்கு நன்றிசொல்வோம்

சிற்றூராம் மாரீசன் பதிவாழ் மக்கள்
சிறியதொகை யானாலும் சக்திமிக்கார்
அற்புதந்தான் படைத்திட்டார் புலம்பெயர்ந்தார்
ஆண்டவனின் அருள்மழையுள் மூழ்கிநின்றார்
நற்றுணையாம், சற்குருவாம் கயித்தானின்
நாமந்தான் இன்றுபேர் ஆலயமாய்
வெற்பெனவே உயர்ந்தெழுந்து காட்சிநல்கும்
தேசத்தின் விருட்சமெத் திகழ்கிறதே

வேறு


வேதத்தின் காவலனாய் விண்ணரசின் தூதுவனாய்
போதிக்கும் திறமையினிற் சாதனைகள் படைத்தவனாய்
நாதியற்றவர்க் குறுதுணையாய் நலன்காக்கும் மருளாளன்
நீதிக்காய் குரலெழுப்பும் நெறியாளன் வாழியவே

தங்கள் நல்லாசிக்கு இறைஞ்சும்
புனித கயித்தார் ஆலயப்
பங்குத்தந்தையும் பங்குமக்களும்

மாரீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எமது பங்குத்தந்தை

அருட்பணி M. M. H. ஞானேந்திரன் அடிகளார்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் மறைமாவட்ட குருமுதல்வரின் வாழ்த்துச் செய்தி



மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலயம் பழமையும், தனிப்பெருமையும், ஆழமான ஆன்மீக வேர்களும் கொண்ட ஓர் ஆலயம். கடவுளின் கரம்பிடித்து நடந்து வந்த நீண்ட பாதைகளில் இப்பங்கு மக்கள் நிறைந்த வலிமை பெற்றிருக்கிறார்கள்.

புதுமைகள் எப்போதும் புரட்சிகளைத் தாண்டியே புறப்படுகின்றன. பிரசவங்கள் எப்போதும் வலிகளோடே ஆரம்பிக்கின்றன. இப்புதிய ஆலயத்தின் தோற்றத்திலும் இப்பங்கு மக்களும், பங்குத்தந்தையும் பல பிரசவ வேதனைகளைத் தாண்டியிருக்கிறார்கள், தாங்கியிருக்கிறார்கள். ஆனால் தளர்ந்து போகவில்லை. இவ்ஆலயத்தின் முகப்பினை அப்படியே பேணுகின்ற இவர்களது முயற்சியானது, தம் மூதாதயரின் முதுசங்களையும், பசுமையான பாரம்பரியத்தையும் நேசிக்கும் உயர்ந்த உள்ளத்தைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

புனித கென்றியரசர் கல்லூரி நிர்வாகத்தின் கீழே இப்பங்கு இயங்கிய காலகட்டத்தில் குறிப்பாக (1981-1986) வரையான காலப்பகுதியில் பங்குத்தந்தையாகப் பணியாற்றிட எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தைப் பெரும் பேறாகக் கருதுகிறேன்.

இப்பங்கு ஆயிரங்காலத்துப் பயிராக, ஆலமர நிழலாக, ஓர் ஆன்மீகப் பல்கலைக் கழகமாக அற்புதமான சேவையாற்றி வருகிறது. இது சிறந்த விசுவாசக் கட்டமைப்புக் கொண்ட ஓர் பணித்தளம்.


இறுதியாக இந்த ஆன்மீக வீடு எப்போதும் இமயமாய் உறுதிபெறவும், வானம் போல் உயர்ந்திருக்கவும், இப்பங்கு மக்களின் முயற்சிகள் மேலும் வெற்றி பெறவும் நிறைவான இறை ஆசிகளைக் கூறுவதோடு பங்குத்தந்தை, பங்குமக்களது இந்த வெற்றியை உளமாரப் பாராட்டுகின்றேன்.

**அருட்கலாநிதி ஜஸ்ரின் ஞானப்பிரகாசம்**
(முன்னாள் பங்குத்தந்தை)
குரு முதல்வ
யாழ் மறை மாவட்டம்
ஆயர் இல்லம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் ஆயரின் இதயத்தில் இருந்து



மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயம் புனரமைக்கப்பட்டு இவ்வாண்டு ஆவணித் திங்கள் பன்னிரெண்டாம் நாள் திறந்து வைக்கப்படுவதை அறிந்து மகிழ்ச்சி அடைகிறேன். மாரீசன் கூடல் மக்களின் இறை நம்பிக்கையையும் பக்தியையும் நான் அவர்கள் மத்தியில் 1969-1970ம் ஆண்டுகளில் பணி செய்து வந்தபோது நன்கு அறிந்திருந்தேன். அவர்களுக்கு இளம் குருவாக இருந்தபோது பணி செய்யக் கிடைத்த வாய்ப்பு என்னைப் பல வகையில் குருத்துவப் பணியில் முதிர்ச்சியடையச் செய்தது.


போரின் அனர்த்தங்கள் இடப்பெயர்வுகள் போன்ற பல இடையூறுகள் மத்தியிலும் இந்தப் பாரிய கட்டுமானப் பணியை மேற்கொள்ள கடின தியாகத்துடனும் உழைத்த அனைத்து நல் உள்ளங்களையும் நான் பாராட்டுவதோடு அவர்களுக்கு இறை ஆசீரையும் நிறைவாக வேண்டுகிறேன். புனித கயித்தாரின் பரிந்துரையால் இறைத்தந்தை உங்கள் ஒவ்வொருவரையும் தம் கண்ணின் மணி போற் காத்து வழி நடாத்துவாராக.

அன்புடன்

**மேதகு கலாநிதி இராயப்பு யோசேப்பு**
மன்னார் ஆயர்
ஆயர் இல்லம்
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலய புனரமைப்பின் ஆரம்ப நிகழ்வின்போது...
30. 06. 2008

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னாள் பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி



மாரீசன் கூடல் பங்குத்திருச்சபை எனது குருத்துவப் பணிவாழ்வில் மறக்கமுடியாத பங்குத்தளமாகும். சுருங்கக்கூறின் எனது குருத்துவப் பணி வாழ்வானது இங்குதான் கருவாகி உருவாகியது எனலாம். இங்குதான் எனது எதிர்கால குருத்துவ வாழ்வுக்கான பல அனுபவங்களையும் பல செய்திகளையும் அருட்பணியாளர் யஸ்ரின் ஞானப்பிரகாசத்தின் கீழ் பெற்றுக்கொண்டேன். மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலய கிறிஸ்தவ சமூகம் கிட்டத்தட்ட 167 வருடங்களுக்கு முன்னரே (1843) இங்கு வேரூன்ற ஆரம்பித்தது. புனித பிலிப்பு நேரியாரின் தியான சம்பிரதாய குருக்களின் வழிகாட்டலில் (ORATORIAN) இவ்விடத்தில் முதலாவது ஆலயம் அமைக்கப்பட்டதாக (1843 முன்னர்) வரலாறு கூறுகிறது. பின்னர் தொடர்ந்து 1865ல் இரண்டாவது ஆலயம் இதே சபைக் குருக்களால் கட்டப்பட்டது., இன்று 2010 இல் தற்போதைய மறைமாவட்ட சுதேச குருவான அருட்பணி ஞானேந்திரன் அடிகளாரின் பெரும் முயற்சியினால் மூன்றாவது ஆலயம் மிகவும் அழகுற அமைக்கப்பட்டுள்ளது.

இவையாவும் காலங்களினூடே மலர்ந்துள்ள ஆலயத் திருச்சபையின் விசுவாச வாழ்வின் முதிர்ச்சியையும் வளர்ச்சியையும் எடுத்துக்காட்டுகின்றது. இவர்களுக்கென்றொரு பாரம்பரிய வழிபாட்டு முறைகளும் தொழில் வழங்களும் வாழ்க்கை முறைகளும் தனித்துவமாய் அமைந்துள்ளன. இவர்களின் விசுவாச வாழ்வின் பயனாக இன்று பல குருக்கள் துறவிகள் இவ் ஆலயத்திருச்சபையிலிருந்து உருவாகியிருப்பதை நாம் காணலாம். எனவே இப்புதிய ஆலயம் நேர்ந்தளிக்கும் இந்நன்நாளில் அயராது உழைத்த அனைவரையும் வாழ்த்தி இறை ஆசிர் ஈர்ந்து நிற்கின்றேன்.

**அருட்பணி J.B அன்ரனிதாஸ்**<br>
நிதி முகாமையாளர்<br>
யாழ். மறைமாவட்டம்<br>
ஆயர் இல்லம் யாழ்ப்பாணம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை மறைக்கோட்ட முதல்வரின் ஆசிச்செய்தி

"ஆண்டவருக்குப் புதியதொரு பாடல் பாடுங்கள்;
மாட்சியும், புகழ்ச்சியும் அவர் திருமுன் உள்ளன.
ஆற்றலும், எழிலும் அவரது திருத்தலத்தில் உள்ளன."

(தி. பா. 96 : 6)



ஆதித்திருச்சபையின் பாரம்பரியத்தில் இருந்தே ஆலயங்கள் இறைமக்களின் விசுவாச வாழ்வின் பயிற்சிக் களங்களாக அமைந்து ஆன்மீக வளர்ச்சிக்குச் சான்று பகர்கின்றன. இதனால் அன்றோ, **"கோவில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"** என எம் முன்னோர் உரைத்துள்ளனர்.

இவ்வாறான வரலாற்றுப் பின்னணியில் நூற்றாண்டுகளுக்கு மேலாக வளர்ச்சி பெற்ற திருச்சபைக் குழுமத்தின் மாரீசன் கூடல் பதியில் அமைந்துள்ள புனித கயித்தானு முனீந்திரர் ஆலயமாகும். இன்று இவ் ஆலயம் புனரமைக்கப்பட்டு, புதுப்பொலிவுடன் திகழ்வதன் ஞாபகார்த்தமாக வெளியிடப்படும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் நான் பெரு மகிழ்வெய்துகின்றேன்.

யாழ் மறைமாவட்டத்திலேயே புனித கயித்தானு முனீந்திரனுக்கென அமைக்கப்பட்ட ஒரேயொரு ஆலயம் என்ற பெருமையும் இ∴து பெற்றிலங்குவது வரலாற்று உண்மையாகும்.

நீண்டகாலப் போர்ச் சூழலின் விளைவுகள் எம் மக்களின் சமய, கலாச்சார, அறிவியல் வளர்ச்சிக்குப் பல வகையிலும் தடைக்கற்களாக அமைந்த போதிலும் **"நாங்கள் எல்லாச் சூழ்நிலைகளிலும் இன்னலுற்றாலும் மனம் உடைந்து போவதில்லை"** (2: கொரி. 4:8) என்ற மறைநூல் வாக்கிற்கிணங்க இப்பதி வாழ் மக்கள் தமது விசுவாச வாழ்வின் பாதுகாவலரது ஆலயத்தைப் பல நெருக்கடிகளுக்கு மத்தியிலும் முழுமையாகப் புனரமைக்க மேற்கொண்ட முயற்சி சிறப்பு மிக்க ஓர் இறையரசுப் பணியாகும்.

பல இன்னல்கள் மிகுந்த சந்தர்ப்பத்திலும் தமது கத்தோலிக்க விசுவாச வாழ்விற்குச் சான்று பகரும் மாரீசன் பதித் தலத்திருச்சபை மக்கள் தாம் பெற்றுக் கொண்ட இறைவிசுவாச வாழ்வைத் தமது எதிர்காலப் பரம்பரையினருக்குக் கையளிக்கும் வகையில் மேற்கொண்ட இவ் ஆலய புனருத்தானப் பணி மிகுந்த பாராட்டிற்குரியதும், இவர்களின் சமய, சமூக வளர்ச்சியின் வெளிப்பாடாகவும், அமைந்துள்ளமை கண்கூடு.

மேலும் ஆலயப் புனருத்தானப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டது முதல், இ∴து புதுப்பொலிவுடன் துலங்கும் இந்நாள்வரை இவ் ஆலயமக்கள் தமது மணித்துளிகளையும், வியர்வைத் துளிகளையும் அர்ப்பணித்தது மட்டுமன்று, தமது பூரண ஒத்துழைப்பையும், தியாகப் பணிகளையும் சிரமதான அடிப்படையில் முன்வந்து கையளித்த செயற்பாடுகளை நான் நேரில் கண்டு உணர்ந்தமையினால் இவர்களது இறை நம்பிக்கை மீதான பற்றுறுதியையும், இப் பங்கினை வழிநடத்தும் பங்குத்தந்தையின் அயராமுயற்சி,சிறந்த வழிகாட்டல், முழுமையான ஒத்துழைப்பு என்பவற்றையும் மனமாரப் பாராட்டுகின்றேன்.

**"அனைத்தையும் புதியது ஆக்குகிறேன்"** என்ற திருவெளிப்பாட்டு வாக்கிற்கிணங்க இவ் ஊர்மக்கள் அனைவரும் தமது ஒற்றுமையான வாழ்விலும், அயராத உழைப்பினாலும், பொருளாதார நன்கொடையினாலும் இறை வழிபாட்டிற்கான தமது பாதுகாவலரின் ஆலயத்தைப் புனரமைத்துப் புதுப்பொலிவுறச் செய்த பெருமுயற்சி போன்று, இவர்களது ஆன்மீக வாழ்வும் புதுப்பொலிவு பெற்று அனைவருக்கும் சாட்சியம் பகரும் திருச்சபைச் சமூகமாக விளங்க இறைகரம் இவர்களைத் தொடர்ந்து வழிநடத்த இறை அருளை ஆசித்து நிற்கின்றேன்.


"மோட்ச இராச்சியத்தையும், அதன் நெறியையும் மகா
ஆவலோடு தேடப் படிப்பித்த கயித்தானு முனியோரே
எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்."

அருட்பணி. **A. P.** தேவசகாயம்
(இளவாலை மறைக்கோட்ட முதல்வர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது பங்குத்தந்தையின் ஆசிச் செய்தி



மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலய இறைமக்கள் தமது புதிய ஆலய அமைவை கருத்திற் கொண்டு வெளியிடும் மலருக்கு ஆசிச்செய்தி வழங்குவதில் அகமகிழ்கின்றேன்.

மாரீசன் கூடல் இறைமக்கள் பரம்பரை, பரம்பரையாகக் கொண்ட விசுவாச வளர்ச்சியின் காத்திரமான நிலையையே இப்புதிய ஆலயம் எமக்குச் சுட்டிக் காட்டுகின்றது. இறை சமூகமாக ஒன்று கூடி எமது ஆன்மீக வாழ்வை வளப்படுத்த எமக்குத் தந்த நல்ல சூழமைவை ஏற்படுத்தித் தரக்கூடிய வகையில் இப்புதிய ஆலயம் அமைந்ததை நினைந்து நன்றியோடு இறைவனைப் புகழ்கின்றேன்.

இறைவனின் நாமம் என்றென்றும் புகழப்படுவதாக புதுப்பொலிவுடன் கம்பீரமாகக் காட்சி தரும் இவ்வாலயத்தை உருவாக்க தம்மை அர்ப்பணித்தவர்கள், தியாக சிந்தையுடன் உரமிட்டவர்கள், தமது தாராள உதவிகளை வழங்கியவர்கள் அனைவருக்கும் மனம் நிறைந்த பாராட்டுக்களையும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளையும் கூறிக்கொள்கின்றேன்.

சிறப்பாக புதிதாக அமைக்கப்பட்ட இவ் ஆலயத்தின் ஒவ்வொரு பகுதியும் இவ்வூர் மக்களின் அதாவது சிறார்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை கொடுத்த ஒத்துழைப்பின், ஒற்றுமையின் சின்னமாக அமைந்திருக்கின்றது என்று சொன்னால் அது மிகையாகாது.

இவ்வாலயம் வானளாவ உயர்ந்துள்ள இவ்வேளையில் பரம்பரை பரம்பரையாக வளர்ந்து வரும் விசுவாசமும், இறைவனில் கொண்ட பற்றும், அன்புச் சமூக வாழ்வும் இறைமக்களிடம் இன்னும் உயர்ந்து ஒரு ஆரோக்கியமான கிறீஸ்தவ வாழ்வு மலர இறைவன் நிறைவாக ஆசீர்வதிக்க வேண்டி வாழ்த்துகின்றேன்.

**அருட்பணி M. M. H. ஞானேந்திரன்**
பங்குத்தந்தை
புனித கயித்தார் ஆலயம்
மாரீசன் கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கயித்தாரின் ஆசீர் உங்களோடு இருப்பதாக



மாரீசன் கூடலில் கத்தோலிக்க சமூகம் பல தலைமுறைகளாக ஆழமான இறை நம்பிக்கையைப் பேணி வாழ்ந்து வருகின்றது. எமது நாட்டின் அப்போஸ்தவர் அருளால் ஜோசப் வாஸ் அடிகளால் அணையாது காக்கப்பட்ட கத்தோலிக்க மறை அவரைத் தொடர்ந்து வந்த அவரது துறவற சபையாகிய ஒரட்டோரியன் சபைக்குருக்களால் இலங்கையின் பல விடங்களிலும் ஒளிரத் தொடங்கியது. இவ்வாறாக மாரீசன் கூடலும் இந்த ஒரட்டோரியன் சபைக்குருக்களின் பணிகளால் பயன்பெற்றது.

இங்கு கட்டப்பட்ட பழைய ஆலயத்தின் மூலைக்கல் இலங்கையில் கடைசி ஒரட்டோரியன் சபை அப்போஸ்தலிக்க பிரதிநிதியாகப் பணியாற்றிய கயிதானொ அந்தோனியோ அடிகளால் நாட்டப்பட்டது. இந்த ஆலயம் 1843ல் கட்டி முடிக்கப்பட்டது. மூலைக் கல்லை நாட்டிய முதல்வரின் பெயரில் அவரது பாதுகாவலராகிய புனித கயித்தாருக்கு இவ்வாலயம் நேர்ந்தளிக்கப்பட்டிருக்கவேண்டும். பின்னர் வந்த ஒரட்டோரியன் சபைக் குருக்கள் இவ்வாலயத்தைப் பல கட்டங்களில் தேவைக்கேற்ப மாற்றங்களையும் விரிவுபடுத்தல்களையும் மேற்கொண்டனர். இவ்வனைத்துப் பணிகளும் மக்களின் பங்களிப்பு குறிப்பாக உடலுழைப்பின் வழியாக வழங்கிய ஒத்துழைப்பின்றி இடம்பெற்றிருக்க முடியாது.

காலப்போக்கில் நூற்றாண்டைக்கடந்த இப்பழைய ஆலயம் அதன் பராமரிப்பிற்குக்கிரமமாக பெருமளவு பணத்தையும் உடல் உழைப்பையும் உள்வாங்கியவண்ணமிருந்தது. அத்துடன் பங்கு மக்கள் வசதியாக இருந்து வழிபாடுகளில் கலந்து கொள்ள முடியாமலுமிருந்தது. இதனால் புதிய ஆலயம் ஒன்று கட்டவேண்டிய தேவை உணரப்பட்டது. இதன் அடிப்படையில் எல்லா மக்களையும் உள்ளடக்கக்கூடிய விதத்தில் உயர்ந்த ஆலயம் ஒன்று கட்டவேண்டுமென்ற தீர்மானம் எடுக்கப்பட்டது. இது சரியான நேரத்தில் எடுக்கப்பட்ட பொறுப்பான முடிவாகும். இதற்காகப் பங்கு மக்களையும் பங்குத்தந்தையையும் பாராட்டியாகவேண்டும்.

இப்பங்கு மக்கள் தமது மூதாதையரின் அடிச்சுவட்டில் கடின உழைப்பாளிகளாகவும் முன்னெடுக்கும் காரியங்களை விரைவில் வினைத்திறனுடன் முடிக்கக்கூடிய ஆற்றலுமுள்ளவர்கள். இதனால் தான் பலவிதமான நெருக்கடிகள் மத்தியலும் இவ்வழகிய ஆலயத்தைப் பெரும் பொருட் செலவாலும் உடல் உழைப்பாலும் கட்டி முடித்துள்ளார்கள். இதற்காக இவர்களை நான் மனப்பூர்வமாகப் பாராட்டுகிறேன்.

புனித கயித்தார் தாம் வாழ்ந்த காலத்தில் சீர்திருத்தங்கள் செய்யவேண்டியிருந்த திருச்சபையில் பல சீர்திருத்தங்களைக் கொண்டுவந்து திருச்சபைக்குப் புதுவாழ்வு கொடுக்க தமது பங்களிப்பைத் திறம்படச் செய்தது போல புனித கயித்தார் ஆலயப் பங்கு மக்களும் தமது புதிய ஆலயத்தை அழகுறக் கட்டியெழுப்பியது போல் தமது ஆன்மீகத்தையும் கட்டியெழுப்ப வேண்டுமென எது உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன். இறைவன் உங்கள் முயற்சிகளையும் பணிகளையும் ஆசீர்வதிப்பாராக.

நன்றி

**அருட்தந்தை எஸ்.வி.பி. மங்களராஜா அடிகளார்**
அதிபர், புனித சவேரியார் குருத்துவக்கல்லூரி
கொழும்புத்துறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலய புனரமைப்புகளின் போது...
பங்குமக்கள்








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கென்றியரசர் கல்லூரி அதிபரின் ஆசிச் செய்தி



வளம்கொழிக்கும் மாரீசன்கூடல் கிராமத்தில் அமைந்துள்ள புனித கயித்தார் ஆலயம் "மிகவும் தொன்மை வாய்ந்த கத்தோலிக்க தேவாலயம்" எனும் பெரும் புகழைத் தாங்கி நிற்கிறது. இப்பிரதேசத்தில் காணப்படும் புராதன புகழ்வாய்ந்த இவ் ஆலயத்தில் பங்குக் குருவாகப் பணியாற்றும் சந்தர்ப்பம் கிடைத்ததை எண்ணி நான் புளகாங்கிதமடைகின்றேன்.

இவ்வாலயத்தின் பங்குக் குருவாக நான் பணிபுரிந்த காலப்பகுதியில் இலங்கை இராணுவம் மற்றும் இந்திய அமைதிப் படையினரின் இராணுவ நடவடிக்கைகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தன. அக்காலப்பகுதியில் எமது பிரதேசத்தில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக மக்கள் இடம்பெயர்ந்து அடைக்கலம் தேடி, புனித கயித்தாரின் பதியை நாடி வந்த வேளைகளிலெல்லாம் அவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து புனிதரின் பரிந்துரை பங்கு மக்களையும் என்னையும் அனுதினமும் காத்து வந்தது என்று கூறின் மிகையாகாது.

ஆரம்ப காலந்தொட்டே இக்கிராமம் இறையருளும் நிறைவளமும் கொண்டு இலங்குவதற்கு அடிப்படையாக அமைந்தது இம்மக்களின் உறுதியான விசுவாச வாழ்வாகும். இறை பக்தியும் தளராத தொழில் முயற்சியும் கொண்ட இவர்களின் வாழ்வே இப்புராதன ஆலயத்தின் புனரமைப்பிற்கு வழிகோலியுள்ளது. பசுமையான இக்கிராமம் போரின் விளைவான இடப்பெயர்வுகளால் பொருளாதாரச் சிக்கல்களை எதிர்நோக்கியபோதிலும் புனிதரின் துணையால் மீள்குடியேற்றம் பெற்று தளராத மன உறுதியோடு உழைத்து சமூக பொருளாதார கல்வித்துறைகளில் வளர்ச்சியடைந்து வருவது மட்டுமல்லாமல் பாதுகாவலரின் பதியையும் புனருத்தாரணம் செய்ததை எண்ணி நான் மகிழ்வடைகிறேன்.

'நவீன மயமாக்கல்' என்ற போர்வைக்குள் சிக்கியிருக்கும் உலகியல் வாழ்வின் சவால்களையும் போராட்டங்களையும் புனித கயித்தாரின் பரிந்துரையால் வெற்றி கொண்டு ஆழமான விசுவாச வாழ்வில் திளைத்து ஆன்மீகத்தில் உயர்ந்து கல்வி, கலை, கலாச்சாரம் போன்றவற்றிலும் என்றென்றும் சிறப்புற்று மிளிர ஆதி அந்தம் இல்லாதோனின் ஆசியை இறைஞ்சி புதுத்தோற்றம் பெற்றுள்ள இவ்வாலயத்தில் புதுப்பிக்கப்பட்ட உள்ளங்களாய் ஒன்றிணைந்து பங்கு மக்கள் அனைவரும் புதுவாழ்வு பெறவேண்டுமென வாழ்த்தி நிற்கிறேன்.


நன்றி

**அருட்பணி. யோ. அ. யேசுதாஸ்**
(முன்னாள் பங்குத்தந்தை)
அதிபர், புனித ஹென்றியரசர் கல்லூரி, இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருட்தந்தை எட்மன்ட் றெஜினோல்ட் அடிகளாரின் ஆசிச் செய்தி



மாரீசன்கூடல் புனித கயித்தானு முனீந்திரர்க்கு ஓர் அழகான, கவர்ச்சியான, கண்ணைக் கவரும் விதத்திலான, புதிய சிந்தனையின் வெளிப்பாடாக எழில் மிகு ஆலயம் கட்டப்பட்டு, அதற்குத் திறப்பு விழா நடைபெறுவதற்குரிய ஆயத்தங்கள் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டிருக்கும் இவ்வேளையில், புதிய ஆலயத் திறப்பு விழா மலருக்கு ஆசியுரை வழங்குவதில் பெருமகிழ்வடைகின்றேன்.

1843ம் ஆண்டு பூரணத்துவம் பெற்ற ஓர் ஆலயம், 1865ம் ஆண்டில் பிள்ளைப் பருவத்தைப் பூர்த்தி செய்து இரண்டாம் நிலையை எய்தி, வளர்ச்சிப் படிகளினூடே 2008ம் ஆண்டுவரை புனித கயித்தாரின் பக்தர்கள் அனைவருக்கும் இறையன்பையும், அருளையும், புத்துணர்ச்சியையும், மனவுறுதியையும், இறை நம்பிக்கையையும் அளித்ததன் விளைவாக இன்று இரண்டாவது நிலையையும் கடந்து மூன்றாவது எழிலுறு நிலையில் முதிர்ச்சி பெற்று பார்ப்பவர்களுக்கு கண்கொள்ளாக் காட்சியாகவும், அனைவரையும் கவர்ந்தீர்க்கும் கோலமிகு தேவாலயமாகவும், பரிணமித்துக் கொண்டிருக்கின்றது.

1952ம் ஆண்டில் பூரணப்படுத்தப்பட்ட பழைய ஆலயம் 145 அகவைகளைக் கடந்துள்ள நிலையில் அந்தப் பழைய ஆலயத்தின் சௌந்தர்யம் பொலிந்த முகப்பிலிருந்து இப்புதிய மூன்றாவது ஆலயக் கட்டுமானப் பணிகள் ஆதிமூலத்தை நோக்கி நகர்ந்து பலிப்பீடத்தைக் கட்டிக் காக்கும் கோபுரமாக வான்னோக்கி உயர்ந்து, இப்பங்கு மக்களின் விசுவாசத்திலூறிய இறைபற்றை உலகிற்கு வெளிக்காட்டி நிற்கின்றது.

ஒன்றரை நூற்றாண்டு கடந்த பழைய ஆலயமானது தனது பூரண முகப்பையும், பழம்பெரும் தூண்களையும் நல்கியதன் மூலம் மூன்றிலொரு பகுதி நிதியை புதிய ஆலயத்திற்கு அன்பளிப்பாக வழங்கியமையால் இப்புதிய ஆலயம் பழமையும், புதுமையும் கலந்து உருவாக்கப்பட்ட நவீன ஆலயமாக விளங்குகின்றது.

பழைய ஆலயமானது ஐந்து புதிய குருக்களைப் பிரசவித்துள்ளது. மேலும் இரு அருட் செல்வர்களைக் கருவறையில் இருத்திப் புதிய ஆலயக் கருவறைக்கு நகர்த்தியுள்ளமை சிறப்பம்சமாகும்.

கனவிலும் நினைத்துப் பார்க்க முடியாத அதிசயிக்கத்தக்க மாபெரும் புதுமை புனிதர் கயித்தானின் வேண்டுதல் மூலம் இறைவனால் நிகழ்த்தப்பட்டுள்ளது.

யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் ஆலோசனையின் பேரில் ஆலயப் பங்குமக்களும், புலம் பெயர்ந்து வாழ்பவர்களும் ஒன்றிணைந்து பங்குத் தந்தை அருட்திரு ஞானேந்திரன் அடிகளாரின் விவேகமும் ஆச்சரியமும் மிக்க நெறிப்படுத்தலில் புதிய ஆலயத்தை உருவாக்கியமை ஒரு மாபெரும் சாதனை மட்டுமன்றி ஒரு வரலாற்று நிகழ்வுமாகும்.

இத்தகைய சாதனையாளர்களுக்கு எனது பாராட்டுதலும், வாழ்த்துக்களும் உரித்தாகுக. எல்லாம் வல்ல இறைவன் தனது ஆசிகளை நிறைவாகப் பொழிவாராக.

அருட்பணி. ச. எட்மன்ட் றெஜினோல்ட் அமதி
நோர்வே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுடைய பணிவாழ்வின் நாற்றுமேடை
# மாரீசன்கூடல்

நான் அருட்பணியாளனாக அருள்பொலிவு பெற்று சரியாக ஆறுமாதங்கள் கிளிநொச்சிப் பங்கின் உதவி பங்குத்தந்தையாக பணியாற்றிக் கொண்டிருந்தேன். 1990 ஆம் ஆண்டு தைத்திங்கள் எமது முன்னாள் ஆயர் அமரர் தியோகுப்பிள்ளை ஆண்டகை அவர்களின் பணிப்புரையின் பேரின் மாரீசன்கூடல் பங்குத் திருச்சபைக்கு உதவிப் பங்குத் தந்தையாகச் சென்றேன். அப்போது இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரியன் உப அதிபராக இருந்த அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்தான் மாரீசன்கூடல் பங்குத் தந்தையாக இருந்தார். இவர் முன்பின் எனக்கு பெரிய அறிமுகமான குருவாக இல்லாவிட்டாலும் நான் எனது சொந்தப் பங்கில் (மண்டைதீவு) இருந்து சிறிய குருமடத்திற்கு அடி எடுத்து வைத்த அன்றைய முதல் நாளில் எனது பங்குப் பணிமனையில் எனக்கு ஆசிர் வழங்கி வழி அனுப்பிவைத்த மூன்று குருக்களில் அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஒரவராய் இருந்தார். இன்று அவருடன் அவரின் வழிகாட்டலில் எனது ஆரம்ப குருத்துவப் பயிற்சியைப் பெற வந்தது எனக்குப் பெரும் மகிழ்வாய் இருந்தது. அன்று 19.7.2010 ல் திரு. ஏ. கயித்தாம்பிள்ளை என்பவரும் திரு. அ. ஜேம்ஸ் ஜெறாட் யேசுதாசன் (அருமைத்துரை) என்பவரும் ஆயர் இல்லத்தில் என்னைச் சந்தித்து உங்கள் ஆசிச் செய்தியுடன் எமது புனித கயித்தார் ஆலய வரலாறு உங்கள் அனுபவம் போன்றவற்றையும் சற்று விரிவாக எழுதித்தருமாறு கேட்டதற்கிணங்க நான் அறிந்தவற்றையும் தெரிந்தவற்றையும் எனது அறிவு அனுபவம் இவற்றின் துணைகொண்டு இதை வரைய விழைகிறேன்.

மாரீசன் கூடல் என்னும் கிராமம் இளவாலைக்கு மேற்காகவும் மாதகல் சேந்தாங்குளம் போன்ற கிராமங்களுக்கு நடுவே அமைந்த நீண்ட வரலாற்றைக் கொண்ட அழகிய பாரம்பரியக் கத்தோலிக்க கிராமம் ஆகும். இதற்கு அங்கு அமைந்திருந்த மிகவும் பழைமை வாய்ந்த (தற்போது புதிதாய் அமைக்கப்பட்ட ஆலயத்திற்கு முன்பிருந்த ஆலயம்) புனித கயித்தாரின் ஆலயம் ஒரு எடுத்துக் காட்டாகும். அதுமட்டுமல்ல இலங்கையில் உள்ள பதினொரு மாவட்டங்களிலும் யாழ் மறைமாவட்டத்தில் மட்டுமே அதுவும் குறிப்பாக மாரீசன்கூடலில் மட்டுமே புனித கயித்தாரின் ஆலயம் அமைந்துள்ளது. இது எமது மறைமாவட்டத்திற்கு கிடைத்த பெருமையே. அங்கு வாழ்ந்த கத்தோலிக்கர்கள் யாவரும் மீன்பிடித்தொழிலை தம் பாரம்பரியத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்தார்கள். இவர்களுக்கென கணிசமான விவசாய நிலங்களும் இருந்தன. அந்த நாட்களில் போயிட்டி புனித லூர்து மாதா ஆலயத்திருச்சபை இளவாலை புனித நீற்றம்மாள் ஆலயத்திருச்சபை போன்றவை இருக்கவில்லை. இவர்கள் யாவரும் ஆரம்பத்தில் மாரீசன் கூடல் ஆலயத்திருச்சபையினராகவே இருந்தனர். இன்றும் இவர்கள் யாவருக்குமிடையே திருமண உறவுகள் இருப்பதைக் காணலாம். இன்றும் மதத்தால் இனத்தால் இவர்கள் யாவரும் ஒன்றாய் இருக்கிறார்கள்.

**புனித கயித்தார் ஆலயத் திருச்சபையின் வரலாறு**

காலம் சென்ற நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசம் அ.ம.தி. அவர்களால் எழுதப்பட்ட "XXV Year's Catholic Progress" THE DIOCESE OF JAFFNA UNDER THE EPISCOPATE OF DR. HENRY JOULAIN O.M.I 1893 – 1918.

ஆயர் கலாநிதி ஹென்றி யூலியன் அ.ம.தி. அவர்களின் ஆயர் பணியின் இருபத்தைந்து வருட யாழ் மறைமாவட்டத்தின் கத்தோலிக்க வரலாறு 1893 – 1918 என்னும் ஏட்டின்படி தற்போது புதிதாய் அமைக்கப்பட்ட ஆலயத்திற்கு முன்பிருந்த பழைமையான ஆலயம் கட்டப்படுவதற்கு முன்னரே இங்கு ஒருமிகவும் பழமைவாய்ந்த ஆலயம் இருந்தது. அவ்வாயலம் அமைப்பதற்கான முதல் மூலைக் கல் புனித பிலிப்பு நேரியாரின் தியான சம்பிரதாய சபையின் (ORATORIAN) இலங்கைக்கான கடைசி அப்போஸ்தலிக்க குருமுதல்வரான அதி வணக்கத்திற்குரிய அருட்பணி கயிற்றானோ அன்ரோடனியோ என்பவரால் ஆசிர்வதிக்கப்பட்டதாக கூறப்படுகிறது. பின்னர் இவ்வாலயம் அருட்பணி பிரான்சிஸ்கோ டயஸ் என்பரால் 1843ஆம் ஆண்டு பூர்த்தியாக்கப்பட்டது. பின்னர் தற்போது புதிதாய் அமைக்கப்பட்ட (2010) ஆலயத்திற்கு முன்பிருந்த ஆலயம் அழகிய நீண்ட மாளிகை போன்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(EDIFICE) வேலைப்பாடுகளைக் கொண்ட ஆலயம் 1865 ல் அருட்பணி பொய்சு என்பரால் ஆரம்பிக்கப்பட்டது. அந்த ஆலயத்தின் நடுப்பகுதியின் வேலைப்பாடுகள் அமைந்த மேல்கூரைப் பகுதியை தாங்கிக் கொள்ளும் அழகிய நீண்ட மரத்தூண்கள் யாவும் யாழ் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து கொண்டுவரப்பட்டு ஆலயம் அமைக்கப்பட்டது. (தற்போது அந்த மரத்தூண்கள் யாவும் புதிய ஆலயத்தின் கதவு, யன்னல், நிலைகளாக மாற்றப்பட்டுள்ளன).

தொடர்ந்து இவ்வாலயத்திருச்சபையினரின் நல்லடக்கத்திற்கான "உத்தான பூமி" க்குரிய (சேமக்காலை) காணி 1875ம் ஆண்டு அருட்பணி றூபியாக் என்பவரால் கொள்வனவு செய்யப்பட்டது. பத்து வருடங்களின் பின் அருட்பணி லபாருஜி என்பவரால் ஆலயத்திற்கருகாமையில் சிறிய இல்லம் வாங்கப்பட்டு, தொடர்ந்து 1888ல் மரத்தூண்கள், நீண்ட மரத்தால் ஆன குறுக்குச் சட்டம் (Beams) போன்றவை இவ்வாலயத்திற்கு அறிமுகம் செய்யப்பட்டு அதே ஆண்டு அந்த இல்லம் பூர்த்தி செய்யப்பட்டது. பின்னர் 1893ல் அருட்பணி டொறாட் என்பவரால் தொடர்ந்து குருமனைக்கான அறைகள் கட்டப்பட்டன. (தற்போதய குருமனைக்கு முன்பிருந்த குருமனை) அவரைத் தொடர்ந்து வந்த அருட்பணி டண் என்பவரால் பழைய ஆலயத்திற்கு மெருகூட்டும் அழகிய சிற்ப வேலைகள் நிறைந்த முகப்பு (Facade) (தற்போது நாம் காணும்) கட்டப்பட்டது. அவரைத் தொடர்ந்து பணிப்பொறுப்பை ஏற்ற அருட்பணி கிற்றொட் என்பவரால் மேலதிக வேலைகள் யாவும் முன்னெடுத்துச் செல்லப்பட்டன.

மேலும் நீண்டகால வரலாற்று இடைவெளியின் பின்னர் இவ்வாலயத் திருச்சபையை பொறுப்பேற்ற யாழ் மறைமாவட்ட சுதேச குருவான அருட்பணி E. J. அருமைநாயகம் என்பவரால் மணிக்கூட்டுக் கோபுரமும், புதிய (தற்போதுள்ள) குருமனையும் 1980ல் அழகுற கட்டப்பட்டன.

## புதிய பங்கின் உதயம்

1981ல் காலஞ்சென்ற யாழ் ஆயர் தியோகுப்பிள்ளையினால் மாரீசன்கூடல் போயிட்டி ஆகிய இரண்டு ஆலயத்திருச்சபைகளும் இளவாலை பங்குத்திருச்சபையிலிருந்து பிரிக்கப்பட்டு மாரீசன் கூடல் என்னும் பங்குத் திருச்சபையின் பெயரில் புதிய பங்காக உருவாக்கப்பட்டது. மாரீசன்கூடல் பங்கோடு அன்று கருவாகி உருவாகிக் கொண்டிருந்த சகாயபுர ஆலயத் திருச்சபையும் சேர்த்துக்கொள்ளப்பட்டது. புதிய மாரீசன் கூடல் பங்கின் முதல் பங்குத் தந்தையாக அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆயர் தியோகுப் பிள்ளையினால் நியமிக்கப்பட்டர். அவ்வேளை அவர் இளவாலை புனித ஹென்றி அரசர் கல்லூரி உப அதிபராகவும் கடமையாற்றினார். இவர் தான் முதல் முதலில் குருமனையில் தங்கியிருந்து பணியாற்றிய பங்குத்தந்தையாவார். அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் 1981முதல் 1986வரை அங்கு பங்குத் தந்தையாக கடமையாற்ளினார் அக்காலப்பகுதியில் அந்த மக்களின் ஆனமீக வாழ்வில் மட்டுமல்லாது உலக வாழ்விலும் குறிப்பாக அவர்களின் தொழில் துறைகளில்அன்றைய அரசியல் சூழ்நிலையில் காலத்திற்குக் காலம் ஏற்பட்ட தடங்கல்களின்போது அரச உயர் அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நிவர்த்தி செய்தார். மேலும் அக்காலப்பகுதியில் சகாயபுரம் கோடாலிக்காடு என அழைக்கப்பட்டது. இப்பெயரை மாற்ற வேண்டும் என்ற ஆவலில் மிகவும் பிரயாசப்பட்டு அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு சகாயபுரம் என்ற பெயரைச் சூட்டினார். மேலும் 1983ல் சகாயபுரம் புதிய சதாசகாய அன்னை ஆலயம் இவரால் கட்டப்பட்டது.

இவரைத் தொடர்ந்து 1986 தொடக்கம் 1989 வரை அருட்பணி A. யேசுதாசன் அடிகளார் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்று அங்கிருந்து இளவாலை புனித ஹென்றிஅரசர் கல்லூரியின் ஆசிரியராகவும் கடமையாற்றி வந்தார். மீண்டும் 1990ல் ஆயர் தியோகுப்பிள்ளை ஆண்டகையினால் இளவாலை பங்குத் திருச்சபையிலிருந்து புனித யூதாததேயு ஆலயத் திருச்சபை பிரிக்கப்பட்டு மாரீசன் கூடல் பங்குத் திருச்சபையுடன் இணைக்கப்பட்டது. மீண்டும் தனது உயர்கல்வியை முடித்துக்கொண்டு நாடு திரும்பிய யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகள்,இரண்டாம் முறையாக மாரீசன் கூடல் பங்குத் தந்தையாக ஆயர் தியோகுப் பிள்ளையால் நியமிக்கப்பட்டார். இதே ஆண்டு 1990 தைத்திங்கள் நான் (அருட்பணி ஜே. பி. அன்ரனிதாஸ்) கிளிநொச்சிப் பங்கிலிருந்து உதவிப் பங்குத்தந்தையாக மாரீசன்கூடல் பங்கிற்கு அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாவம் அவர்களுடன் இணைந்து பணியாற்ற ஆயர் தியோகுப்பிள்ளையினால் அனுப்பப்பட்டென். இப்பங்கில் நான் இவ் அருட்பணியாளரின் கீழ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுக்கொண்ட உருவாக்கம் தான் இப்போது நான் குருத்துவ வாழ்வில் இருக்கும் நிலைக்கு அடிகோலியது எனலா். அதனாற்தான் மாரீசன்கூடல் பங்குத்திருச்சபை எனது பணி வாழ்வில் நாற்றுமேடை எனக் கூறத் துணிந்தேன்.

பின்னர் நான் நெடுந்தீவுப் பங்குத் தந்தையாக 1991ல் சென்றுவிட, தொடர்ந்து வரலாற்றில் எமது மறைமாவட்ட குருக்கள் சிலர் அரும்பணியாற்றி வந்தார்கள். மேலும் 2004ல் ஆண்டு ஆனி மாதம் திரும்பவும் கரவெட்டி பங்கிலிருந்து தற்போதய ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் மாரீசன்கூடல் பங்குத் தந்தையாக நியமிக்கப்பட்டேன். அப்போது இளவாலை புனித யூதாததேயு ஆலயத் திருச்சபை மட்டும் மாரீசன் கூடல் பங்குத் திருச்சபையிலிருந்து பிரிக்கப்பட்டு, இளவாலைப் பங்குத் திருச்சபையுடன் சேர்த்துக்கொள்ளப்பட்டது. இளவாலைப் பங்குத் திருச்சபையோடு இருந்த பத்தாவத்தை புனித பில்ப்புநேரியார் ஆலயத் திருச்சபையும், இளவாலை புனித நீற்றம்மாள் லேயத் திருச்சபையும், மயிலங்காடு வேளாங்கன்னி சிற்றாலயமும் மாரீசன் கூடல் பங்குத்திருச்சபையோடு இணைக்கப்பட்டன. அதே வேளை விளான்காடு புனித பிரான்சீஸ் அசீசியார் ஆலயமும் சேர்க்கப்பட்டிருந்தன. (அவ்வாலயம் இப்போது புனித அந்தோனியார் ஆலயமாக மாற்றப்பட்டுள்ளது) ஆயர் என்னை இங்கே அனுப்பும்போது கூறியது "உமக்கு இது மிகவும் சிறிய பங்கு. அங்கு நீர் நீண்டகாலம் இருக்கமாட்டீர். உம்மை ஓர் விசேட பணிக்காக ஓர் விசேட இடத்தை நிரப்ப... அங்கு அனுப்புகிறேன்" எனக்கூறி அனுப்பினார். அங்கு நான் சரியாக எட்டு மாதங்கள் மட்டுமே பங்குத்தந்தையாகப் பணியாற்றினேன்.அப்போது 2004 ஆண்டு ஒக்டோபர் மாதம் தற்போதய பங்குப் பணிமனையில் சில மாற்றங்கள் செய்து உணவறை, சமயலறை, விருந்தினர் அறை என மாற்றங்கள் செய்து கட்டப்பட்டது. இவ்வாண்டு (2004) ஆலயத் திருவிழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. எமது ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் வருகை தந்து திருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுத்து சிறப்பித்தார். ஞாயிறு தினங்களில் எனக்கு திருப்பலிக்கு உதவிபுரிய கொழும்புத்துறை புனித சவேரியார் குரத்துவக் கல்லூரியிலிருந்து அதன் அதிபர் அருட்பணி மங்களராஜா அடிகள் சனிக்கிழமை மாலைதோறும் வந்து எம்முடன் தங்கி உதவி புரிந்து வந்தார். மேலும் இவ்வாண்டு மாரீசன் கூடல், சகாயபுரம் ஆலயத் திருச்சபையினரை குடும்பம் குடும்பமாக மாலையில் சந்தித்து இல்லம் தோறும் திரு இருதய ஸ்தாபகம் செய்யப்பட்டது.

## வரலாறு காணாத சுனாமிப் பேரவலம்

2004ம் ஆண்டு மிகவும் மகிழ்வாக ஆலயத்திற்கென புதிய பாலன் குடில் சொருபங்கள் கொள்வனவு செய்யப்பட்டு நத்தார் கொண்டாட்டங்கள் கொண்டாடிக்கொண்டிருந்த போது பிள்ளைகள் ஒளிவிழாவிற்காக ஆயத்தங்கள் செய்து கொண்டிருந்தபோது வந்தது பேரிடியாய் ஒரு செய்தி. "கடல் பொங்கி எழுந்து கிராமத்துக்குள் வந்துவிட்டதாம்" அப்போது நானும் கிஸ்மஸ் காலங்களில் எனக்கு உதவி புரிய வந்திருந்த அருட்சகோதரன் பிறாயன் (இப்போது அவர் ஒரு குருவானவர்) பொயிட்டி லூர்து அன்னை ஆலயக் குருமனையில் ஒளிவிழா ஒத்திகைகளைப் பார்த்துக்கொண்டிருந்தபோது டிசம்பர் 26ம் திகதி காலை 9.30 மணிக்கு ஒரு சிறிய பிள்ளை அழுதவண்ணம் ஓடிவந்து என்னிடம் சொன்னாள் "பாதர்! ஊருக்குள் கடல் வந்து எங்கட ஆட்களின் எல்லாத் தொழில்கள், வள்ளங்கள், கொட்டில்கள் யாவற்ரையும் அள்ளிக்கொண்டு போய்ட்டுதாம். எல்லோரும் கடக்கரைக்கு ஓடுகிறார்கள்" என்று நான் உடனே கூறினேன் உனக்கு என்ன லூசா போய் உன்னுடைய வேலையைப் பார் எப்படிக் கடல் ஊருக்குள் வரும்? என்று அப்போது மக்கள் திடீரென கூச்சலிட்டுக் கதறியபடி ஆலயம் நோக்கி ஓடிவந்தார்கள். எமக்கு ஒன்றும் புரியவில்லை. சகோதரன் பிறாயன் கண்களை விழித்தபடி எனது மோட்டார் சைக்கிளில் ஏறி அமர மாரீசன் கூடல் குருமண் துறைநோக்கி விரைகிறது மோட்டார் சைக்கிள். ஒருபுறம் கடற்படையினர் மக்களைத் தடுத்து நிறுத்த மறுபுறம் மக்கள் பதறியடிக்க நாங்கள் மட்டும் கடற்படையினரிடம் விடைபெற்று கடற்கரைக்குச் சென்றபோது கண்ட காட்சியை எப்படிக் கூறுவோம். சகல கடற் கலங்கள் வலைகள், தொழில்கள், கொட்டில்கள் யாவும் ஏன் கடற்படையினரின் காவல் நிலையங்களனைத்தும் உடைத்தெறியப்பட்டு பாரிய கடல் அலைகளால் ஒதுக்கி மலைபோன்ற நீண்ட அணைக்கட்டுக்கள் போல் கிடந்தன. அந்நாட்கள் நத்தார் தினமாகவும் விடுமுறையாகவும் இருந்ததினால் யாரும் கடலுக்கோ, கடற்கரைக்கோ வரவில்லை. இதனால் மனித உயிர்கள் ஏனைய இடங்களைப்போல் கடல் அலைகளால் காவு கொள்ளப் படவில்லை. கலங்கிய விழிகளோடு நாங்கள் கடலோரம் நின்று கடற்படையினரோடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரையாடும்போது நீண்டதூரம் கடல்நீர் வற்றி கட்டாந்தரையாகக் காட்சி தந்தது. வரலாற்றில் நாம் காணாத கற்பாறைகள் காட்சி தந்தன. அப்போது சற்றுத் தூரத்தில் கடலில் நின்ற கடற் படையினர் கரையில் நின்ற கடற்படையினருக்கு ஒரு அவசர செய்தி தொலைபேசி மூலம் அனுப்பினார்கள். "மீண்டும் பேரலைகள் மலைபோல் எழுந்து வருகின்றன கடற்கரையில் யாரும் நிற்க வேண்டாம்" இதைக் கடற்படை அதிகாரி என்னிடம் கூறியவுடனே கடலைப் பார்த்தோம். திரும்பவும் கடல் அலைகள் கரை நோக்கிப் பாய்ந்து வர காட்சிதந்த கற்பாறைகள் எல்லாம் மறைந்துவிட ஓடிவிழுந்து எழுந்து ஆலயக் குருமனை வந்து சேர்ந்து கொண்டோம். அங்கு மக்களோடு செய்திகளைப் பகிர்ந்து கொண்டிருந்த வேளை சுனாமிப் பேரவலம் நிகழ்த்திய தாக்கத்தால் எண்ணிலடங்கா மனிதப் பேரவலம் நாட்டின் கரையோரப் பகுதியெங்கும் இடம்பெற்றுள்ளன என்ற துயரச் செய்தியைத் தந்தது. இதன் விளைவாக அவ்வாண்டு ஒளிவிழாக்கள் எல்லாம் நிறுத்தப்பட்டு உள்ளத்தாலும் உடலாலும் பாதிக்கப்பட்ட மக்களுடன் ஒன்றித்து உள்ளதைப் பகிர்ந்து கொண்டோம். 2005 தை மாதம் யாழ் கரித்தாஸ் கியூடெக் நிறுவனம் மூலம் பாதிக்கப்பட்ட எமது பங்கைச் சேர்ந்த அனைத்து மீனவக் குடும்பங்களுக்கும் மீன்பிடி வலைகள், மீன்பிடி உபகரணங்கள் வழங்கப்பட்டன. அத்தோடு நிவாரணமாக உணவுப் பொருட்களும் வழங்கப்பட்டது. தொடர்ந்து எமக்கு ஒரு புதிய ஆலயம் கட்டப்பட வேண்டும் என்ற ஆவலில் மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலய திருச்சபையினரின் ஏகோபித்த முடிவோடும் ஆயரினதும் அனுமதியோடும் கட்டுமானப் பணிக்கான நிதி சேகரிக்கும் படலம் ஆரம்பிக்கப்பட்டு கடிதங்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்பட்டன.

இறுதியாக எட்டாம் மாதத்தின் பின் ஆயரின் பணிப்புரையின் பேரில் நூற்றுக்கு நூறு விதம் சுனாமியினால் ஊடைத்து அழிக்கப்பட்ட ஆயிரக்கணக்கான மனித உயிர்களைக் காவுகொண்ட தாளையடிப் பங்குத் திருச்சபையைப் பொறுப்பேற்று அதன் மீழ் கட்டுமானப் பணிகளையும் பொறுப்பேற்றுச் சென்றேன். எனக்கு உதவியாக அருட்பணி எஸ். நேசநாயகம் அடிகள் ஆயரினால் நியமனம் பெற்று என்னுடன் இணைந்து பணி புரிந்தார். 2005 மாசி மாதம் நடுப்பகுதியில் ஒளிவிழாப் போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களைக் கௌரவித்து பரிசில்கள் வழங்கிச் செல்வோம் என முற்பட்ட வேளைபங்குமக்கள் முன்வந்து எழிமையான முறையில் ஒரு பிரியாவிடை வைபவத்தையும் வைத்து மிகவும் மகிழ்வாக வழியனுப்பி வைத்தார்கள்.

## எழில்மிகு ஆலயம்

மேலும் என்னைத் தொடர்ந்து வந்த பங்குத் தந்தையர்களால் நல்ல முறையில் வழிநடத்தப்பட்டு கட்டியெழுப்பப்பட்டு வந்து பங்கானது மேலும் ஒருபடி முன்சென்று தற்போதய பங்குத்தந்தை அருட்பணி ஞானேந்திரன் அவர்களின் துணிச்சலின், சாதுாரியமான வழிகாட்டலினாலும், முன்னெடுப்பாலும் பல முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு எமது ஆயரின் பெரும் பங்களிப்பினாலும். வெளிநாட்டு, உள்நாட்டுப் பங்குமக்களின் உபகாரியங்களின் பங்களிப்பினாலும் ஆலயத் திருச்சபையினரின் அயராத அர்ப்பணிப்பு மிக்க கடும் உழைப்பாலும் மிகவும் அழகிய இவ் ஆலயம் கட்டி முடிக்கப்பட்டது. இன்று இவ்வாலயம் எமது யாழ் ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் ஆசீர்வதித்து திருவழிபாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டிருப்பது எம் எல்லோருக்கம் பெரு மகிழ்ச்சியே. முழு மூச்சாய் நின்று பல கஸ்டங்களையும் வருத்தங்களையும் தன்னகத்தே கொண்டு அரும்பாடுபட்டு உழைத்த பங்குத்தந்தை அருட்பணி ஞானேந்திரன் அடிகளாரையும் அடிக்கல் நாட்டிவைத்த மண்ணின் மைந்தன் அருட்பணி யூட் அமலதாஸ் அடிகளாரையும், அவர்களோடு கரம்கோர்த்து செயற்பட்ட அருட்பணிச் சபையினரையும் ஆலயதிருச்சபையும் குறிப்பாக ஏ. கயித்தாம்பிள்ளை திரு. அ. ஜெறாட் யேசுதாசன் (அருமைத்துரை) என்பவர்களையும் பாராட்டி நிற்கிறேன்.

இறைவனின் அன்புத் அருளும் மரியன்னையின் பராமரிப்பும், அரவணைப்பும் புனித கயித்தாரின் பரிந்துரைப்பும் உங்களோடு என்றும் இருப்பதாக

**அருட்பணி ஜே. பி. அன்ரனிதாஸ் (முன்னாள் பங்குத்தந்தை)**
நிதி முகாமையாளர்
யாழ் மறைமாவட்டம்
ஆயரில்லம்
யாழ்ப்பாணம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



மாரீசன் கூடலின் மைந்தனாக உதித்து, கோவில் கொண்டெழுந்தருளி அருள் பாலிக்கும் புனித கயித்தாரின் திருவடியில் களிப்புடன் என் வாழ்வை அமைத்து இறைபணிக்காய் எனைக் கொடுக்க உறுதுணையாய் எனக்கிருந்த என் உறவுகளை எண்ணிப் பார்த்துப் பெருமைப்படுகின்றேன். ஒரு மனிதனுடைய வாழ்க்கையில் குடும்பத்தினர் உருவாக்கம் அத்திவாரமாக இருந்தாலும் அவன் தொடர்ந்து வீறுநடை போடுவதற்கு அவன் சமூகத்திலேயே தங்கியிருக்கின்றான். அந்த விதத்தில் என் உருவாக்கத்திற்கும், என் பணி வாழ்விற்கும் என் சமூகம் எனக்கு உறுதுணையாக அமைந்தது. என் சமூகத்தை எனக்கு கிடைத்த பெரிய வரப்பிரசாதமாகவே நினைக்கின்றேன்.

ஆலயம் என்பது உறவுகள் ஒன்றித்து வாழ, இறை அன்பின் வெளிப்பாடாய் மிளிர்வதற்கு ஏதுவான இடமாகும். இவ்வாறான இறை வெளிப்பாட்டை என் சமூகத்தின் மூலம் கண்கூடாகக் கண்டுள்ளேன். புனித கயித்தார் மேல் எம் மக்கள் கொண்டுள்ள அன்பும், பக்தியும், மரியாதையும் அளப்பரியது. எம் பங்கில் பணியாற்றிய, பணியாற்றுகின்ற பங்குக் குரவர்களின் அயராத உழைப்பும், ஆன்மீக வாஞ்சையும் எம் மக்களின் விசுவாச வாழ்க்கைக்கு வித்தாக அமைந்துள்ளது. அதனை நான் எனது வாழ்க்கையில் பார்த்திருக்கிறேன், அனுபவித்திருக்கிறேன். இவ் இறைபணியாளர்களின் இறை அன்பும் தியாக சேவையும் என்னைப் போன்ற பலரின் அழைத்தலுக்கு அத்திவாரமாக அமைந்தது.

எம் ஆலயத்தினைப் புனரமைப்பதற்கு எம் மக்களின் ஒருமனப்பட்ட உள்ளமும், ஒருமித்த செயல்பாடுமே காரணமாகும். உள் ஊரில் வாழ்வோர், அயல் நாடுகளில் வசிப்போர், நலன் விரும்பிகள் எனப் பலர் இவ் ஆலயப் பணிக்காய் கரம் கொடுத்தவர்கள். இவர்களின் உவந்தளிக்கும் நல் உள்ளம் பாராட்டப்பட வேண்டியதாகும். கடின உழைப்பும், சோர்வற்ற வாழ்வும் இவர்கள் முன்னேற ஏணிப்படியாயிற்று. நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக இவர்களின் வாழ்வு பொலிவுற்று வாழ்ந்து வருவதைக் கண்டு நான் பேருவகை கொள்கிறேன்.

எம் ஆலயத்தின் வளர்ச்சிக்காக நீங்கள் முழுமனதுடன் செயற்படவும், இறை சாட்சிகளாகத் திகழவும் உங்களை ஆசிக்கின்றேன். எம் புனிதர் கயித்தார் உங்களுக்காக பரிந்துரைக்கவும் வாழ்வில் ஒளி நிலவாக என்றும் பிரகாசிக்கவும் குடும்பங்களில் அன்பும், அமைதியும் நிலவி கிறிஸ்தவ விழுமியங்களில் சிறப்புப் பெற்று வாழவும், புனித கயித்தாரின் துணைவேண்டி ஆசிக்கிறேன்.

**அருட்பணி சுவாம்பிள்ளை ஸ்ரனிஸ்லொஸ் அமதி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி

மாரீசன்கூடலில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட புனித கயித்தார் ஆலய திறப்பு விழா மலருக்கு ஆசி வழங்குவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகின்றேன்.

1964களில் மாரீசன் கூடல் தனிப்பங்காக இயங்கவில்லை. வலித்தூண்டல், பத்தாவத்தை, புனித றீற்றம்மாள் கோவில், போயிட்டி ஆகியவற்றுடன்இணைந்து, மாரீசன் கூடலும் சேந்தாங்குளப் பங்கிலே அங்கம் வகித்தன.

வருடத்தின் சில நாட்களிலே முக்கியமாக ஆலய திருநாட்களை ஒட்டிய காலப்பகுதிகளில் அங்கு தங்கியிருந்து பணியாற்றினேன்.

இறைப்பற்றுடையவர்களாகவும், முதியவர்கள் ஒரு சிலருடன் இணைந்து ஆலய நிர்வாகத்தை திறம்பட செய்தார்கள்.

போர் அனர்த்தங்களால் பல தாக்கங்களை, குறிப்பாக மீன்பிடி தடையினால் பொருளாதார கஸ்ரங்களையும் அனுபவித்தார்கள்.

இத்தனை கஸ்ரங்கள் மத்தியிலும் மிக விரைவில் ஆலய நிர்மாணத்திற்கு முக்கியத்துவம் கொடுத்து சகலருடையவும் ஒத்துழைப்புடனும் அதை நிறைவு செய்துள்ளார்கள்.

கற்களால் கட்டிய ஆலயம் மட்டும் போதாது அவர்களும் ஒவ்வொருவரும் "நான் பரிசுத்த ஆவி தங்கும் ஆலயம்" என்ற உணர்வோடு உத்தம கிறிஸ்தவர்களாக வாழ வேண்டும் என்று புனித கயித்தார் மூலமாக இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

அருட்பணி S. J. பிரான்சிஸ் அமதி
டி மசெனட் இறையியலகம்,
"வசந்தகம்"
சுவாமியார் வீதி,
கொழும்புத்துறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஆலய புனரமைப்புகளின் போது...
பங்குமக்கள்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றேன்



மனிதனின் பொக்கிஷம் அமைதி. அதைத் தருவது ஆலயம். மாரீசன்கூடல் கயித்தார் ஆலயமானது எமது கிராமத்து மக்களினுடைய சமூக பொருளாதார வாழ்வியலின் எல்லாச் அம்சங்களினுடைய மையமாகவும், ஆழமான விசுவாச வாழ்வின் ஊற்றாகவும், எல்லா செயற்பாடுகளுக்கும் மையமாகவும் இருக்கின்றது. நான் எனது வாழ்வுக்காக இறை அழைத்தலைப் பெற்றுக் கொள்ள இவ் ஆலயச் செயற்பாடுகளிலான ஈடுபாடும் பங்கேற்புமே காரணமென்று கூறலாம்.

மிகப் பழமையான இவ் ஆலயத்தை புதிய அழகிய ஆலயமாகக் கட்டுவதற்குச் சிந்தித்து பங்குத்தந்தையோடு இணைத்து செயற்பாட்டில் ஈடுபட்ட அனைவரும் பாராட்டப்பட வேண்டியவர்களே. புதிய ஆலயப் பணி தொடங்கிய நாள் முதல் எமது கிராமத்திலிருந்து சிறு பிள்ளை தொடக்கம் புலம்பெயர் நாடுகளிலிருந்த ஒவ்வொருவர் வரையிலும் பங்களிப்புக்களை அபரீதமாக வழங்கியிருக்கிறார்கள். கிராமத்து மக்களின் ஆபத்துக்கள் நிறைந்த கடின உழைப்பும் புலம் பெயர் மக்களின் பண உதவியும் பக்தர்களின் ஆதரவும் பங்குத்தந்தையின் ஊக்கமும் இவ் அழகிய ஆலயத்தை உருப்பெறச் செய்திருக்கின்றன.

இவ் ஆலயத் திறப்புவிழாவிலே என்னுடைய மண்ணின் பங்குமக்கள் அனைவருக்கும் புலம்பெயர்ந்து வாழுகின்ற பங்குமக்களுக்கும் அன்புக்குரிய பங்குத்தந்தைக்கும் எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும் உரித்தாகுக.

"புனித கயித்தாரின் பரிந்துரை எப்போதும் எமக்கு கிடைப்பதாக"

**அருட்பணி. யூட் அமலதாஸ்**
மீட்பின் அன்னை மறைத்தளம்
மொன்றியல், கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வலிகாமம் வடக்கு தெல்லிப்பளை பிரதேச செயலாளரின் ஆசிச் செய்தி

மிக நீண்ட தொன்மையுடைய இளவாலை பாரீசன் கூடல் கிராமத்தின் வரலாற்றுப் புகழ் பூத்த புனித கயித்தார் ஆலயம், தன்னை நேசிக்கும் மக்களுக்காகப் புதிய ஆலயமாகத் தன் பணியைத் தொடங்குகிறது.

இவ்வாறான ஒரு நிலைமையில் ஆலயத் திறப்பு விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்கச் சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு மனநிறைவு கொள்கின்றேன்.

167 வருட பழைமை வாய்ந்த புனித கயித்தார் ஆலயம் இலங்கையில் உள்ள ஒரே ஒரு கயித்தார் ஆலயம் என்பது இங்கு சிறப்பு மிகு செய்தியாகும்.

நூற்றுக்கு மேற்பட்ட குடும்பங்களில் கருணைக் கடவுளாக உள்ள கயித்தார் தான் நிலை கொண்டுள்ள மக்களுக்கும், ஏனையவர்களுக்கும் அருள் பாலித்து மேன்மையுறச் செய்பவர் என அவர்தம் அடியவர்கள் பெருமை கொள்கின்றனர்.


"ஆன்மாக்களைத் தேடி அலையும் வேட்டைக்காரன்" என்னும் பட்டத்தைப் பெற்ற புனித கயித்தாரின் ஆலயம் எங்கள் மண்ணுக்கு ஒரு தனித்துவமான அடையாளமாகும்.
அருட்பணி ஞானேந்திரன் அவர்கள் தலைமையில் விசுவாசம் மிக்க இறை பணியாளர்கள் தங்கள் மண்ணின் சிறப்பினை மேலும் வலுவூட்ட இத்தகைய முயற்சிகளில் ஈடுபடுவதையிட்டு இந்தப் பகுதியின் பிரதேச செயலாளர் என்ற வகையில் நான் பெருமிதம் அடைகின்றேன்.

**S. முரளிதரன்**
பிரதேச செயலாளர்
வலிகாமம் வடக்கு
தெல்லிப்பளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிகளும் வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்



என்றும் எப்போதும் புகழோடு உடனிருந்து எமக்காக இறைவனிடம் செபிக்கின்ற எம் புனிதன் கயித்தான் முனியோரின் சிறப்பான இவ்வாண்டு விழாவிலே எம் மக்களோடு நானும் இணைந்து இறைவனைப் புகழ்கின்றேன். இற்றைக்கு 167 ஆண்டுகளுக்கு முன்பே (1843) அருட்தந்தை பிரான்சிஸ்கோ டயஸ் என்னும் குரவானவரால் பூர்த்தி செய்யப்பட்ட இவ்வாலயம் தொடக்க கட்டுமானப்பணிகளானது அவரைத் தொடர்ந்து வந்த சில பணியாளர்களால் முன்னெடுக்கப்பட்டதாக வரலாற்றில் படிக்கிறோம். அந்த வகையில் மீண்டும் இப்புதிய மிலேனியத்தில் எம் அருட்தந்தை ஞானேந்திரன் அடிகளாரின் காலத்தல் புதுப்பொலிவோடு இந்த ஆலயம் எம் புனிதரின் புகழ்பேச எழுப்பப்பெற்றிருப்பது மிகுந்த மகிழ்ச்சியைத் தருகின்றது.

பழம்பெரும் புகழ்பேசும் மாரீசன் பதியிலே
மங்காப் புகழோடு என்றும் இறைவனிடம் பரிந்துரைக்கும்
எம் புனிதன் கயித்தானின் புகழ் பேசாத மாந்தர் இங்குண்டோ!

வெகுண்டெழும் பொல்லாத் தீங்கிலும்,
கசக்கிப் பிழியும் வறுமையின் பிடியிலும் இறையுதவி பெற்றுத்தரும்
எம் அன்பன் முனிந்திரனின் கரம் பற்றா எளியவர் யாருமுண்டோ!

தொலைதூரம் வாழ்ந்திடினும் - எம்
அன்பனவன் திருநாளில் கலந்து கொள்ளா வேளையிலும்
இறையுதவி பெற்றுத்தா! என்றிரஞ்சா இதயங்கள் எதுவுமுண்டோ!

ஆம் காலத்தின் கோலமதில் நாம் எதிர்கொள்ளவேண்டியிருந்த எத்தனையோ இடப்பெயர்வுகள், உயிரிழப்புகள், சொல்லொணா துயரங்கள் அத்தனையும் தாங்கியும் என்றும் எம் புனிதனவன் பரிந்துரையில் வாழ்கின்ற எம்மவர் மனவலிமை போற்றப்படவேண்டியதே. அதேவேளை எம் மக்களுக்காகத் தம் அருட்பணிகளை இதுவரை காலமும் தொடர்ந்தாற்றிய எம் மறைமாவட்ட குருக்கள், துறவிகள், அருட்சகோதரிகள், அருட்சகோதரர்கள் அனைவரும் நன்றியோடு எம் மனங்களில் எப்போதும் எண்ணப்படவேண்டியவர்களாக இருக்கிறார்கள்.

எனவே கிறிஸ்துவின் சாயலை தன் வாழ்வில்கொண்டு அவருக்காகவே போராடும் அழைப்பைப் பெற்ற புனித கயித்தார் வழியில் நாமும் சென்றிடவும் இவ்வாலயத்தை மையங்கொண்டு தம் வாழ்வை நடாத்துகின்ற எம் அன்பு மக்களுக்கும் அயல் நாடுகளில் வாழும் இவ்வாலய அனைத்து உள்ளங்களுக்கும் அனைத்து அருட்பணியாளர்களுக்கும் இவ்வாண்டின் ஆலய சிறப்பு விழாவிலே இச்சிறப்பு மலர் ஊடாக எனது செபங்களையும் நல்வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

அருட்சகோ. பிலிப் ரஞ்சனகுமார் அ.ம.தி.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

"எனக்கு வலுவூட்டுகின்ற இறைவனின் துணை கொண்டு
எதையும் செய்ய எனக்கு ஆற்றல் உண்டு"

(பிலிப்பியர் 4 : 3)



ஆலயம்! அது இறைவன் வாழும் அழகிய வீடு. இறைமக்கள் அனைவரும் ஒன்றாகக் கூடி, இனிய சிட்டுக்கள் பாலர் இன்பமாய்ப் பாடி இறைவனைத் துதித்திடும் ஆனந்த சுவர்க்கம். இங்குதான் எம்ஆன்மாக்களை ஆழமாய் ஊடுருவும் அமைதி, சந்தோசம் நிறைந்து வழிகின்றன.

இந்தவகையில் மாரீசன் கூடல் புனித கயித்தார் ஆலயம் நீண்டதொரு ஆண்மீகப் பாரம்பரியம் கொண்ட, மிகப் பழமைவாய்ந்த ஒரு ஆலயம், காலத்தின் தேவைகருதி, புதுப்பித்துக் கட்டப்பட்டு, புதுப்பொலிவோடு பிரகாசிக்கும் இவ்வாலயமானது இப்பங்கு மக்களின் விழுதுகள் பல இறக்கிய ஆலமரம் போன்ற விசுவாசத்தைப்படம் பிடித்துக் காட்டுகிறது. ஏனெனில் இவ்வாலயத்தின் உருவாக்கத்தில் இப்பங்கு மக்கள் தமது இரத்தம், வியர்வை, கனவுகள், ஆசைகள் அனைத்தையும் கரைத்து உழைத்திருக்கிறார்கள்.

ஆலயம் கட்டிடமாய் அமைவதில் மட்டும் அர்த்தமில்லை. அவை எமது விசுவாசத்தின் வீடாக அமைய வேண்டும். எமது அன்றாட ஆன்மீக வாழ்வில், விசுவாசத்தின் வேர்கள் அகலப்படர்ந்து, வாழ்வின் பக்கங்களோடு ஆன்மீகம் இரண்டறக் கலக்க வேண்டும். எனவே நோக்கத்தில் தெளிவாய் இருங்கள்.

இந்த அற்புதமான வெற்றிக்கு துணையாக இருந்த, நல்லாயனாக வழிகாட்டிய பங்குத்தந்தை, அருட்பணி ஞானேந்திரன் அடிகளாருக்கு எனது சிறப்பான பாராட்டுக்களையும், இறை ஆசிகளையும் தெரிவிக்கின்றேன்.

இறுதியாக நீங்கள் மேலும் மேலும் ஆன்மீகத்தில் ஆழமாகிடவும் உங்கள் ஆலயம் சிறப்புற்று ஓங்கிடவும் உங்கள் முயற்சிகள் வெற்றி பெறவும் இறை ஆசீரோடு வாழ்த்தி, புனிதரின் பரிந்துரையையும் வேண்டுகிறேன்.

**"எப்போதும் மகிழ்ச்சியாக இருங்கள், இடைவிடாது இறைவனிடம் வேண்டுங்கள்.
எல்லாச் சூழ்நிலையிலும் நன்றி கூறுங்கள்."**

(1தெசலோனிக்கர் 5:16–18)

அருட்பணி. ஜெயசீலன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



நீர்வளம், நிலவளம் மிகுந்த பசுமை மிகு மாரீசன்பதியின் காவலராய் வீற்றிருக்கும் புனித கயித்தாருடைய நூற்றாண்டுகள் பழமைவாய்ந்த ஆலயம் இன்று புதுப்பொலிவோடு புனரமைக்கப்பட்டுள்ள இந்த வேளையில் அந்த மண்ணின் ஒரு குருமகன் என்ற வகையில் நானும் எம்மக்களோடு இணைந்து அனைத்து ஆசீர்வாதங்களுக்கும் ஊற்றான எல்லாம் வல்ல இறைவனைப் போற்றிப் புகழ்கிறேன். அவர் செய்துவருகின்ற எல்லாக் காரியங்களுக்கும் நன்றி செலுத்துகிறேன்.

போரின் தளும்புகளும் அதன் அழுத்தங்களும் மறையாது நம்பிக்கையிழந்து வாழ்ந்து வரும் எம் மக்களுக்கு புதிய ஆலயமும் அதன் கம்பீரத் தோற்றமும் உள்ளத்திற்கு உற்சாகமும் வாழ்விற்குச் சக்தியும், வாழ்வதற்கான நம்பிக்கையையும் வழங்குகின்றது.

கத்தோலிக்கர் எம் வாழ்வு பிறப்பிலிருந்து இறப்புவரை வாழ்வின் எல்லாச் சூழ்நிலைகளிலும் ஆலயங்கள் எமக்கு அருள்வளங்கும், ஆறுதலளிக்கும், வழிப்படுத்தும், திடப்படுத்தும் ஆண்டவர் வாழும் வீடு. கத்தோலிக்க விசுவாசத்தை வளர்த்து அதில் உறுதியாக நிலைத்திருந்து நூற்றாண்டு காலத்திற்கு மேலாக அவ்விசுவாசத்தைக் காத்து வருகின்ற மாரீசன்பதி கத்தோலிக்கர் எமக்கு, எமது ஆலயம் புனரமைக்கப்பட்டமை ஒரு வரலாற்று நிகழ்வு. இவ்வரலாற்றுப் பெருமை மிக்க காலத்தில் நாமும் வாழ்வதையிட்டுப் பெருமை கொள்ள வேண்டும்.

இவ்வுயர் பணியைச் செவ்வனே முடித்திட பெரும்பாடுபட்டு உழைத்த புனித கயித்தார் ஆலய இந்நாள் பங்குத்தந்தை அருட்பணி ஞானேந்திரன் அடிகளாரையும், ஆலயப் புனரமைப்பிற்குப் பொறுப்பாயிருந்த பங்குச் சபை உறுப்பினர்களையும். இப்பெரும் பணியில் உடன் உழைத்த அனைத்து நல்ல உள்ளங்களையும் சிரம் தாழ்த்தி வாழ்த்துகின்றேன். உங்களுடைய இப்பெரும் அர்ப்பணிப்பு இறைவன் பார்வையில் மிக உயர்வாகக் கொள்ளப்படும். அவர் எம் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக.

அருட்பணி. மரியஸ்ரீபன் (சதீஸ்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



இலங்கை கத்தோலிக்க திருச்சபை வரலாற்றில் குறிப்பிடக்கூடிய கத்தோலிக்க பதிகளுள் எமது சண்டிலிப்பாய் பிரதேசத்திலேயே பெருமைமிக்க தனித்துவமாக மாரீசன்கூடல் பதியில் அமையப்பெற்றதே புனித கயித்தார் ஆலயம் ஆகும். இக் கிராமத்தின்கண் எழுந்தருளி தன்னை நாடி வரும் அடியார்களுக்கு அருள் புரியும் புனித கயித்தார் மூலமாக இப்பதி எமது பிரதேசத்தின் கத்தோலிக்க ஆலயங்களுள் எங்கும் காணப்பெறாத தனித்துவத்தை பெற்று நிற்கின்றது.

"சுமை சுமந்து சோர்ந்திருப்போரே என்னிடம் வாருங்கள்" என்ற யேசு கிறிஸ்துவின் கருணைப் பார்வைக்கு இலக்கணமாய் மாரீசன் கூடலில் பதி கொண்டிருக்கும் புனித கயித்தார் ஆலயத்தை நாடி பல்வேறுபட்ட பகுதிகளிலிருந்தும் இனமத பேதமின்றி அடியார்கள் வந்து வணங்கி மனநிறைவு பெற்றுச் செல்வதனைக் காணும் போது புனித கயித்தாரின் அருள் மணம் திக்கெட்டும் வீசுவதனைக் காணலாம். எனவே எமது பிரதேசத்திற்கு பெருமை சேர்க்கின்ற இப் புனிதருடைய ஆலயமானது இப்போது புதுப் பொலிவு பெற்று மெருகூட்டப்பட்ட தோற்றத்தினைக் காணும்போது எமது உள்ளங்களும் பரவசமடைகின்றன. இந் நன்னாளில் புனித கயித்தாரின் ஆசீர்வாதம் எமது உள்ளங்களிலும், இல்லங்களிலும் கிடைக்க வேண்டும் என வேண்டி நிற்கின்றேன்.

**திருமதி எ. அன்ரன் யோகநாயகம்**
பிரதேச செயலர்
சண்டிலிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காத்தருளும் காவலனே!

அன்னைமரி அடியவனே
அர்ச்சஸ்ர கயித்தானு முனீந்திரனே
அற்புதங்கள் பல புரிந்து
அடியவரை காப்பாற்றும்
உம் அருட் பரிந்துரை
எம் மண்ணில் எந்நாளும்
கிடைக்க வேண்டுகின்றோம்

விசெஞ்சியா நகரத்தின்
தூய பாதுகாவலனே — நீர்
எம் மண்ணில் எழுந்தருளி
எமைக்காவல் செய்திட
நாம் என்ன தவம்
செப்தோமோ?

மாரீசன் பதியெழுந்து
மங்கா புகழ்விழங்க வீற்றிருந்து
உம்பதி மக்களையும்
உம்பதி நாடிவரும் அனைவரையும்
மாண்புடன் காத்து வரும் - எம்
மன்னவனே கயித்தானே

ஊரிழந்து உறவிழந்து — எம்
உரிமைகளனைத்தையுமிழந்து
அகதிகளாய் அநாதைகளாய்
அந்தரித்து ஓடிய உம் பக்தரை
அழிவிலிருந்து காத்த எம்
காவலனே கயித்தானே

மீண்டும் உம்பதம் ஓடிவந்தோம்
உம் கிருபை நாடி வந்தோம்
காத்தருளும் காவலனே — எமை
மீட்டருளும் அனுதினமும்
பரிந்து பேசும் எம் மக்கட்காய்
நாம் பாவிகள் உமை
வேண்டுகின்றோம்.

அருட்சகோதரர்
கீ. பீட். சுஜாகரன். அ. ம. தி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை

"வாழ்க மாரீசன் கூடல் பங்கு வளர்க கிறீஸ்துவில்" 1865ம் இந்த ஆண்டில் கட்டப்பட்ட புனித கயித்தார் ஆலயத்தை மக்கள் பக்தியாகவும் நிம்மதியாகவும் அமர்ந்து வழிபாடுகள் செய்யக் கூடிய வகையில் புதுப்பித்துக் கட்டியெழுப்பியுள்ளார்கள் .இதை இறைவனுக்கு புகழும் மாட்சியும் ஏற்படும் வகையில் ஒன்றுபட்டு கிறீஸ்தவ விழுமியங்களுக்கும் திருச்சபையின் கோட்பாடுகளுக்கும் ஏற்ற வகையில் பயன் படுத்துவார்கள் என எதிர்பார்க்கிறேன்.

நான் இப்பங்கில் தற்காலிகமாக 3 மாதங்கள் வரை பணியாற்றினேன். அவ்வேளையில் ஆலய வேலைகள் இடம் பெற்றுக் கொண்டிருந்தன. இதில் ஆலயத்தைச் சேர்ந்த மக்கள் அனைவரும் பங்கெடுத்து ஆற்றிய பணி என்னை வியக்க வைத்தது. உங்களது விடாமுயற்சியே இன்று ஆலயம் சிறப்புற அமைவதற்கு அச்சாணியாக இருந்தது. இது உங்களது ஒற்றுமைக்குச் சாட்சியம் ஆகும்.

இவ்வாலயத்திலிருந்து இறைவனின் அருளும் புனிதரின் பரிந்துரையும் உங்களுடைய ஆன்மீக வாழ்வுக்கு ஏராளமாகக் கிடைக்க, செபித்து வாழ்த்தி நிற்கின்றேன்.

அருட்பணி. அ. கிறிஸ்தோப்பர்
பங்குத்தந்தை,
தூய செபஸ்தியார் ஆலயம்,
கரம்பொன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






கட்டடக்கலைஞர் திரு. ஆனந்தனுடன் உதவியாளர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச்செய்தி



கடவுள் மனிதனைப் படைக்கையிலே அவனை சமூகப்பிராணியாகப்படைத்தார். மனிதன் சமூகத்தை உருவாக்குகிறான். சமூகம் மனிதனை உருவாக்குகின்றது. அவ்வண்ணம் நாமும் உருவாக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சிக்குரியது. நாம் வளர்ந்த மண்ணும் மக்களும் நம்மை, நம் வாழ்வை, நம் ஆன்மீகத்தை, நம் பண்பாட்டை, நம் பழக்கவழக்கங்களை உருவாக்கி நம்மை வளர்த்து அனுப்பியிருக்கின்றது என்பதையிட்டு மகிழ்சியடைந்து உங்களுக்கு வாழ்த்துக்கூறுகின்றோம். யுத்த சூழல் நீங்கிய வேளை வளமான வாழ்வையும் மகிழ்வையும் நோக்கியிருக்கும் நம் மாரீசன்பதி வாழ் இறை உறவுகளை உற்றமும் சுற்றமும் மனமாற வாழ்த்துகின்றோம். புனித கயித்தாரின் பெயர் தாங்கி நம் கிராமத்தின் மத்தியில் காட்சிதரும் ஆலயம் நம் மக்களின் வாழ்வின் பழம் பெரும் பெருமையையும் கத்தோலிக்க விசுவாசத்தின் இணைபிரியா உறவினையும் சமூக வாழ்வின் தனித்தன்மையையும் எடுத்துக்காட்டும் குறிகாட்டியாய் அமைந்திருப்பது எமக்கெல்லாம் பெருமை. இத்தகைய குறிகாட்டியாய் அமைந்த ஆலயத்தை நம் மக்கள் தற்போதைய தொழில்துறைகளற்ற இக்கட்டான, கஸ்ரமான சூழலிலும் தம் நேரத்தை, பொருளை, உடலுழைப்பைப் பாராது ஆக்கபூர்வ முயற்சியோடு திருத்தியமைத்துள்ளமை நன்றியோடு என்றும் பாராட்டப்பட வேண்டிய ஒன்று. இம் முயற்சிக்கு ஊக்கமளித்து, உருக்கொடுத்த பங்குத்தந்தைக்கும் ஏனையோருக்கும் எம் நன்றிகள். செய்து முடித்தவற்றைப் பெருமையாய்க் கொள்வதைவிட செய்யவேண்டியவற்றை பெருமைபாரட்டக் கூடிய விதமாய் செய்ய முயல்வது சாலச் சிறந்ததாய் அமையுமென நம்புகின்றேன். நாம் வாழ்ந்தோம் வளர்ந்தோம் இப்போ நம்மவரை வாழவைப்போம்.

அன்பான இறை சமூகமே! நீ உருவாக்கிய சமூகமும், உன்னை உருவாக்கிய சமூகமும் உன்னோடு இருக்கிறது. இறையாசீர் உன்னோடு இருந்ததைப்போல் என்றும் இருக்கும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. வளமான வாழ்வும், அருள் வாழ்வும் உன்கூட என்றும் இருப்பதாக.

வாழ்த்தி நிற்கும்


**அருட்பணி P. பெனிக்னஸ் அமதி**

அமல அன்னை அன்பகம்,
மன்னார் வீதி,
முழங்காவில்,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எப்படி எழுந்தது இப்படியோர் ஆலயம்?



உதிரத்தை உரமாக்கி
நிதியை நிலமாக்கி
பயிராக உயிர்பெற்ற ஆலயமிது

கைகள் பொங்கிடக் கற்சுவர் இடித்து
கண்கள் கலங்கிட கற்கள் சுமந்து
கால்கள் துவண்டிட தூண்கள் சுமந்து
பெண்கள், ஆண்கள் பேதம் மறந்த
உழைப்பால் உயிர் பெற்ற ஆலயமிது

கடலோடு களமாடும் மீனவ சமூகத்தின்
உடலோடு ஒன்றித்துக் கலந்த
உணர்வோடு உயிராக மாறி
உருப்பெற்ற ஆலயமிது

உயிருக்கும் அஞ்சாது உயரத்தில் ஏறி
உதவிய எம்மவர் உயர்வினைத்திறனால்
உருப்பெற்ற உன்னத ஆலயமிது

கடலோடிக் கொணர்ந்தவற்றைக் காசாக்கி
உடலுழைப்போடு பேறாக்கி அதை வழங்க
கடல்தாண்டி வாழுகின்ற எம்மன்பு உறவுகளும்
உடல் வருத்தி உழைத்திட்ட பெருநிதியும் சேர்ந்து
கருவாகி உருப்பெற்ற ஆலயமிது

பங்குத்தந்தையும் பரிபூரணமாய் பங்காற்றி
பங்கு மக்களைப் பண்போடு நெறிப்படுத்தி
பங்குத் தளத்தில் தளர்வில்லாப் பணியாற்றி
பார்த்துப் பார்த்துக் கட்டிய ஆலயமதிது

அன்னையர் அணிசேர்ந்து ஆலயப் பணிசெய்ய
மென்மையான பெண்கரங்கள் கல்சுமந்து வன்மையாக
தொன்மை மாறி புதுமையாய் எழுந்த ஆலயமிது

சிட்டுக்கள் போன்ற சின்னஞ் சிறார்களின்
பட்டுக்கரங்களும் பங்களிக்க
கட்டிளைஞர் யுவதிகளின் கடின உழைப்பாலும்
கட்டியெழுப்பப்பட்ட கண்கவர் ஆலயமிது

களைப்பு நீக்கிட கலந்த தேனீரோடு
இளைப்பு மாற்றிட சிற்றுண்டி வழங்கிய
உன்னத பணியாளர் பாலசிங்கம் ஐயாவின்
உபசரிப்பால் உருப்பெற்ற ஆலயமிது

செயலாளர் அருமைத்துரையின் அர்ப்பணிப்பு அடித்தளமாகிட
பொருளாளர் அருமைத்துரையின் ஒத்துழைப்பு படிக்கற்களாகிட
திட்டவகுப்பாளர் கயித்தாம்பிள்ளையின் திட்டங்கள் திடமூட்ட
பட்டுப் பட்டென்று உருப்பெற்ற ஆலயமிது

கட்டடக் கலைஞர் ஆனந்தனின் கைவண்ணம்
திட்ட உதவியாளன் றவியின் செயல்வேகம்
கட்டி முடிப்போமென்று பணிசெய்த தம்பி றொபின்சன்
தொட்டதற்கெல்லாம் ஓடிவந்துதவிய எம்மவர் பணியாலும்
கட்டிமுடிக்கப்பட்ட கயித்தார் ஆலயமிது.

நன்றியுடன் கவிதை வடிவில்
**பொ. ஸ். ராஜ்குமார்**
அருட்பணிச்சபை உறுப்பினர், மாரீசன்கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை கன்னியர் மடம் மகா வித்தியாலய அதிபரின் ஆசிச் செய்தி

மாரீசன் கூடல் மக்களின் வாழ்வில் இதயமாக விளங்குவது ஆலயம். அவ்வாலயம் தொன்மையும் பழமையும் வாய்ந்ததோடு நீண்டதொரு வரலாற்றையும் காலத்தின் பதிவுகளையும் தடம் பதித்து நிற்கின்றது என்பது வெள்ளிடைமலையாகும்.

இன்றைய காலத்தின் தேவையை உணர்ந்து விசுவாச வாழ்வின் ஊற்றும் உயிர்நாடியுமாகச் சிறப்புற்று விளங்கும் புனித கயித்தார் ஆலயம் புனரமைக்கப்பட்டுப் புதுப்பொலிவு பெற்று அழகுறக் காட்சியளிப்பது மனதிற்குப் பெருமகிழ்வை அளித்து நிற்கின்றது.

மெருகூட்டப்பட்ட புதிய ஆலயத்தின் திறப்பு விழா நிகழ்வில் வெளியிடவுள்ள நினைவு மலர் வரலாற்று ஆவணமாகவும் பதிவுகளாகவும் முக்கியத்துவம் பெறுகின்றது. எனவே வெளி வரவிருக்கும் இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதையிட்டு நான் உவகையடைகின்றேன்.

பாதுகாவலராம் புனித கயித்தாரின் புனித வாழ்வைப் பின்பற்றும் பங்கு மக்களின் பக்தியுணர்வு, இறைவிசுவாசம், ஆழமான நம்பிக்கை ஆன்மீக தாகம் என்பன போற்றுதற்குரியன. இடப்பெயர்வினால் மக்கள் வெளிநாடுகளுக்கும் பல்வேறு இடங்களுக்கும் சென்று குடியேறியபோதும் திரும்பி வந்து மீளக்குடியேறிய போதும் புனிதரின்மேல் கொண்ட பக்தியும் உறுதியான விசுவாசமும் நிலை தளராது: கட்டிக்காத்து நிலை நிறுத்தப்பட்டு ஆலயத்தை மேன்மையுறச் செய்த பெருமை இவ்வூர் மக்களையே சாரும். எஞ்சியிருக்கும் கிராம மக்களின் கூட்டொருமைப்பாடும் தாராளமனமும் அர்ப்பணிப்புமிக்க சேவையும்: பங்குத் தந்தையின் அயராத உழைப்பும் ஆத்மீக வாஞ்சையும் நெறிப்படுத்தலும் பாராட்டுக்குரியன.

இவ்வினிய நன்னாளில் பங்கின் பாதுகாவலர் புனித கயித்தார் பரிந்துரையும் ஆசீரும் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் நிறைவாகக் கிடைக்க ஆசித்து நிற்கின்றேன். "யாம் பெற்ற இன்பம் பெறுகஇவ்வையகம்" என்பதற்கொப்ப இறைவார்த்தையை வாழ்வாக்கி, பெற்றோர் தம் பிள்ளைச் செல்வங்களுக்கும் எதிர்கால சந்ததியினருக்கும் விசுவாசம் என்னும் அழியாச் சொத்தைப் பாதுகாத்து நல்லொழுக்கத்திலும் ஆன்மீக தேடலிலும் வாழ வளர வழிசமைத்துக் கொடுப்பவர்களாகத் திகழ்வார்களாக.

ஆலயங்கள் கட்டிடங்களாக மட்டுமல்ல: வழிபாட்டு ஆலயங்களாகவும் வழிபாடு செலுத்தும் மனித உள்ளங்கள் கிறீஸ்துவின் நறுமலர்களாக மணம் பரப்பி மேன்மையுற்று சாட்சிய வாழ்வு வாழ வாழ்த்தி இறையாசி வேண்டி நிற்கின்றேன்.

**அருட்சகோதரி தயாநாயகி செபமாலை**
அதிபர்
இளவாலை கன்னியர்மட வித்தியாலயம்,
இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரீசன்கூடல் றோ. க. த. க. பாடசாலை அதிபரின் ஆசிச்செய்தி



யாழ்ப்பாணக் குடா நாட்டின் வடபாலமைந்த எழில் கொஞ்சும் பழந்தமிழர் கிராமமான மாரீசன் கூடல் எனும் ஊர் மக்களிற்கு இறை ஆசிகளைப் பெற்றுத்தரும் புனித கயித்தார் ஆலயத்தின் திறப்பு விழா மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பேருவகை அடைகின்றேன்.

167 வருடங்கள் பழமை வாய்ந்த வரலாற்றுச் சிறப்புமிக்க இவ் ஆலயம் இலங்கையில் புனித கயித்தாருக்காக அமைக்கப்பட்டுள்ள ஒரே ஒரு ஆலயம் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

பழமையான கட்டடக் கலைகளை அழித்து விடக் கூடாது என்ற சிந்தனையில் யாழ் மேற்றிராசனமும், புனித கயித்தார் ஆலயப் பங்குத்தந்தையும் பங்கு மக்களும் ஆலய முகப்பை அழித்து விடாது ஏனைய கட்டடங்களைப் புதிதாக அமைத்தமை போற்றுதற்குரிய அம்சமாகும்.

இவ் ஆலய கட்டுமானப் பணிகளில் அவ் ஆலய மக்கள் அனைவருடனும் பங்குத்தந்தை அருட்பணி MMH ஞானேந்திரன் அடிகளாரும் இரவு பகல் பாராது ஒன்றிணைந்து உழைத்தமை பெருமைக்குரியதும் காலத்தால் அழிக்கப்பட முடியாததுமான உண்மையாகும்.

ஆலயப் பங்குத்தந்தை மற்றும், பங்கு மக்களின் செபத்தினாலும் நல்ல எண்ணத்தினாலும் வகுத்த திட்டங்களாலும், உழைப்பினாலும், காணிக்கையாலும், புதுப்பொலிவுடன் கூடிய புனித கயித்தார் ஆலயம் காட்சி தருகின்றமையானது இறைவன் இக் கிராமத்திற்குத் தந்த உன்னத கொடை என்றே கருத முடியும்.


இறை பணியுடன் கூடிய சமூகப்பணி என்ற வகையில் இப்பாடசாலைக்கு இப்பங்குச் சமூகம் வழங்கும் ஒத்துழைப்புக்காக எனது பாராட்டுடன் கூடிய நன்றிகளைத் தெரிவித்து நிற்கின்றேன்.

இந்த ஆலயத்தின் திறப்பு விழாவைப் பெருமையுடனும், நன்றியுணர்வுடனும் கொண்டாடும் புனித கயித்தார் ஆலயத் திருச்சபையினரைப் பாராட்டுவதோடு இந்த ஆலயம் உங்கள் வாழ்வுக்கு விளக்காகவும், தவிக்கும் உள்ளங்களுக்கு ஆறுதலாகவும், இக்கிராமத்தினரின் ஆன்மீகப் பீடமாகவும் விளங்க ஆசித்து நிற்கின்றேன்.

திரு. சூ. நோபேட் உதயகுமார்
SLPS 2-II BA, PGDE
அதிபர் யா/ மாரீசன் கூடல் றோ.க.த.க. பாடசாலை,
இளவாலை.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




முதலாவது குருமணி
அருட்பணி றெஜினோல்ட் அமதி



இரண்டாவது குருமணி
அருட்பணி ஸ்ரனிஸ்லொஸ் அமதி



மூன்றாவது குருமணி
அருட்பணி யூட் அமலதாஸ்



நான்காவது குருமணி
அருட்பணி மரிய ஸ்ரீபன் சதீஸ்



ஐந்தாவது குருமணி
அ[illegible] அமதி

மாரீசன்கூடல் மண்ணில் மலர்ந்த மலர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி

ஆலயம் என்பது இறைவனின் இல்லம். இறைவனும், மனிதனும் சந்திக்குமிடம். வரலாற்றுப் பெருமை மிக்க கத்தோலிக்கப் பாரம்பரியத்தைக் கொண்ட மாரீசன் கூடல் என்னும் பழம்பெரும் பதியில் அமைந்துள்ள புனித கயித்தார் ஆலயம் புனருத்தாரணஞ் செய்யப்பட்டு புதுப்பொலிவுடன் திகழ்வதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன். இவ்வாலயத்தின் மூலம் வெளியிடப்படும் இம்மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் பெருமையடைகின்றேன்.

இவ் ஆலயப் புனரமைப்புக்கு உதவி புரிந்த பங்குத்தந்தை, பங்குமக்கள், வெளிநாடுகளில் இருந்து உதவி வழங்கிய பங்குமக்கள் அனைவரையும் உளமார வாழ்த்துகின்றேன்.

ஆலயங்கள் மனித வாழ்வை மேன்மையுறச் செய்வதுடன் எங்கள் பண்பாட்டின் உயிர்ப்பு மையங்களாக விளங்குகின்றன. அன்பு, சாந்தி, சமாதானம், கருணை போன்றன மனித குலத்தை வளம்பெறச் செய்யும் சக்திகளாகும். இவை மனிதனின் அகத்தேயுள்ளன. இறைவழிபாட்டின் மூலமே இவற்றை வெளிக்கொணர முடியும்.

இறைவிசுவாசம் மிக்க இப்பிரதேச மக்களின் துன்பங்கள் நீங்கி பண்பாட்டின் மேன்மையைப் பேணி வளமுடன் வாழ எல்லாம் வல்ல புனித கயித்தார் அருள்புரிவாராக.

**அருட்திரு. க. ஜேம்ஸ் சிங்கராயர்**
அதிபர்,
யா/ புனித அந்தோனியார் கல்லூரி,
ஊர்காவற்றுறை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கயித்தர் ஆலய திறப்பு விழாவுக்கான ஆசிச் செய்தி



எமது வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபையின் பண்டத்தரிப்புக் கிராம நிர்வாக எல்லைக்குட்பட்ட மாரீசன்கூடல் எனும் கடலும் கடல் சார்ந்த நெய்தல் பிரதேசமான அழகிய கத்தோலிக்க கிராமத்தில் புனித கயித்தார் ஆலயம் அமைந்துள்ளது. இலங்கையில் ஒரோயொரு கயித்தார் ஆலயமான மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயம் அமைந்துள்ளது சிறப்புக்குரிய விடயமாகும். புதுப்பொலிவுடன் பூரண இறையாட்சி பெற்று இவ்வாலயம் திகழ்வது எம்மையெல்லாம் மகிழ்விற்குள்ளாக்குகின்றது.

கடற்றொழிலை நம்பிக் கடலில் செல்லும் மக்களை காத்து ஆசீர்வதித்து அவர்களது இன்னல்களைத் தீர்த்து புனித கயித்தார் இதுவரையும் அருட்கொடை வழங்கியது போல தொடர்ந்தும் காத்து இரட்சித்து அருள்புரிய வேண்டும் எனப் பிரார்த்திக்கின்றேன்.


இம்மலர் வெளியீட்டின் மூலம் வருங்கால சந்ததிக்கு இவ்வாலய வரலாற்று மற்றும் புனிதரின் அற்புதங்கள் தொடர்பாக வெளிக்கொணரப்படும் இம்முயற்சியை பாராட்டுவதோடு இவ்வாலய வளர்ச்சிக்கு அரும்பாடுபட்ட அனைவருக்கும் மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி புஸ்மபமலர் சிவலிங்கம்**
செயலாளர்
வலிகாமம் தென்மேற்கு பிரதேசசபை
மானிப்பாய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிதா சுதன் பரிசுத்த ஆவிக்கு மகிமை உண்டாவதாக
# புனிதரின் ஆசி என்றென்றும் எம்மோடு இருப்பதாக



கடலலை தாலாட்டும் கரையோரத்தில் அமைந்துள்ள மாரீசன்கூடல் கிராமத்தில் கல்வளைப் பகுதியில் கம்பீரமாக அமைந்துள்ள புதிய ஆலயத்தின் திறப்பு விழாவினை முன்னிட்டு பெருமகிழ்வும், பெருமையும் அடைகின்றேன்.

இலங்கையிலேயே புனித கயித்தாருக்கென்று அமைக்கப்பட்டிருக்கும் ஒரே ஒரு ஆலயம் என்ற தனிச்சிறப்பைப் பெற்றிருக்கும் ஆலயமாகவும் பண்டைக்கால கட்டட கலை வடிவமைப்பை கொண்டுள்ளதாகவும் விளங்குகின்றது.

இவ் ஆலயமானது அண்மைக்கால போர் நடவடிக்கையினாலும் எமது மக்களின் இடப்பெயர்வினாலும் சிதைவடைந்த நிலைக்குத் தள்ளப்பட்டது. எமது மக்கள் மீண்டும் கிராமத்திற்கு வருகை தரக்கூடியநிலை ஏற்பட்ட பொழுது யாழ் குடாநாட்டிற்குள் அகப்பட்ட பத்து குடும்பத்திற்கும் உட்பட்ட தொகையினரின் இணைந்த அர்ப்பணிப்பினால் இவ் ஆலயத்தின் வழிபாடுகளை செய்யக்கூடிய நிலையிலும் பங்குப் பணிமனையினை புனரமைத்தமையும் எல்லோராலும் மறக்க முடியாத ஒன்றாகும்.

2002 ஆம் ஆண்டு ஏற்பட்ட சமாதான காலத்தையடுத்து எமது கிராம மக்கள் அனைவரும் புனிதரின் ஆசியினால் குடியமரக் கூடிய நிலை ஏற்பட்ட பொழுது 2003 ஆம் ஆண்டு பங்குத்தந்தையாக இருந்த எமது அன்பிற்கும் மதிப்பிற்கும் உரிய அன்ரனிதாஸ் அடிகளாரின் ஆலோசனையின்படி எமது ஆலயத்தைப் புனரமைப்பதற்கென ஓர் புனரமைப்புக்குழு அமைக்கப்பட்டது.

தலைவராகப் பங்குத்தந்தையும், செயலாளராக அ.ஜே.ஜெ.ஜேசுதாசனும், பொருளாளராக யோ. தேவசகாயம்பிள்ளையும், உறுப்பினர்களாக ஜேம்ஸ் பேனாட், சவரிமுத்து, தேவதாஸ், கிருபைராசா ஆகியோரும், வெளிநாட்டு மக்களின் சார்பாக, ஜேர்மனிக்கு சின்னராசாவும், லண்டனிற்கு இருதயநேசனும், கனடாவிற்கு கருணாகரனும் உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப் பட்டனர்.

மீண்டும் எமது நாட்டில் ஏற்பட்ட அசாதரண சூழ்நிலையினால் ஆலயம் புனரமைக்கப்படாமையினால் வழிபாடுகள் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டது. 2008ஆம் ஆண்டு எமது புனிதரின் அருளினால் பங்கிற்கு வருகை தந்த செயல்திறன் மிக்கவரும் எம் மக்களின் அன்பிற்கு உரியவருமான அருட்பணி. ஞானேந்திரன் அடிகளாரின் ஆலோசனையின் பேரில் எமது பங்கு அருட்பணிச் சபையினரால் அடுத்துவரும் மழை காலத்தில் வழிபாடுகளைச் செய்ய முடியாத நிலை உள்ளமையைக் கருத்திற்கொண்டு ஆலயத்தை வழிபாடு செய்யக்கூடிய முறைக்கு சிறிதாக புனரமைப்புச் செய்ய வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

அதனை எமது மூத்த உறுப்பினர்களதும், புனரமைப்புக் குழுவினதும், நிர்வாக சபையினதும் ஒத்துழைப்புடனும், ஆலோசனையுடனும் செய்ய வேண்டும் என்ற தீர்மானம் எடுக்கப்பட்டு எமது பங்குத்தந்தை அருட்பணி. ஞானேந்திரன் அடிகளாரிடமும், புனரமைப்புக் குழுச் செயலாளரும், அருட்பணிச் சபைச் செயலாளருமாகிய என்னிடமும் இப்பணி ஒப்படைக்கப்பட்டது.

எனவே தந்தையவர்களின் ஆலோசனையின்படி என்னைப் பொதுப்பணி வேலைகள் செய்வதற்கு புடமிட்டவர்களாகவும், வழிகாட்டிகளாகவும், மதிப்பிற்குரியவர்களாகவும் விளங்கும் திருவாளர் ச.செ.இரத்தினம், திரு. ச.செபஸ்தியாம்பிள்ளை (பப்பா) அவர்களுடன் தொடர்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்ட பொழுது முழு மனதுடன் வரவேற்று எனக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கினார்கள்.

அடுத்து ஜேர்மன் கிளைப் பொறுப்பாளரும் எனது மதிப்பிற்குரியவரும், எனக்கு வேண்டிய ஆலோசனைகளை வழங்கிக் கொண்டிருப்பவருமான திரு.சூ.கயித்தாம்பிள்ளை அவர்களுடனும், லண்டன் கிளை பொறுப்பாளரான இருதயநேசனுடனும், கனடாக்கிளை பொறுப்பாளரான திரு. செ. கருணாகரனுடனும் தொடர்பு கொண்ட பொழுது அவர்கள் "நீங்கள் செய்ய வேண்டிய வேலைகளிற்கு ஏற்ற நிதி உதவியை வழங்குவோம்" எனவும் கூறி எம்மை உற்சாகப் படுத்தினார்கள்.

அதே போல் திரு. சவரிமுத்து, திரு. ஜேம்ஸ் பேனாட் ஆகியோருடனும் தொடர்பு கொண்ட பொழுது அவர்களும் தக்க நேரத்தில் வேண்டிய ஆலோசனைகளையும், உதவிகளையும் வழங்குவதாக உறுதிமொழி அளித்தார்கள்.

அதனைத் தொடர்ந்து எமது அன்பிற்குரியவரும், எமது கிராமத்தின் தற்போதைய ஆலோசகரும் எவ் வேலைகளையும் உரிய விதத்தில் நெறிப்படுத்துபவருமாகிய அண்ணன் திரு. எ.கயித்தாம்பிள்ளை அவர்கள் மிகவும் கடின சுகவீனத்தினால் இந்தியாவில் வைத்தியம் செய்து கொண்டிருந்த வேளையில், நான் அவரிடம் புனரமைப்புச் சம்பந்தமான வேலைகள் ஆரம்பிக்க வேண்டி உள்ளது எனக் கூறினேன். அவ்வேளை அவர் தனது சுகவீனத்தையும் கருத்தில் எடுக்காது, இது தான் நல்ல தருணம். நான் உடனடியாக வருகிறேன் என்று கூறினார். ஆனால் நானோ இப்போது இங்கு நாங்கள் பார்ப்போம் என்று கூறியதையும் பொருட்படுத்தாது "என்னைக் கயித்தார் காப்பார்" என்று கூறி இங்கு வந்தமையினை இன்றும் என்னால் மறக்க முடியாதுள்ளது

அடுத்து எனது அன்பிற்குரியவரும், எனது வலது கரமாகவும் விளங்கும் அருட்பணிச்சபையினதும், புனரமைப்புக் குழுவினதும் பொருளாளராகவும் விளங்கும் திரு. யோ. தேவசகாயம்பிள்ளை அவர்களின் அர்ப்பணிப்புடனும், சிந்தனையுடனும், எமது பங்கின் வளர்ச்சியிலும் கிராமத்தின் முன்னேற்றத்திலும் கண்ணாகவும், கருத்தாகவும் விளங்கி எந்நேரத்திலும் ஒரே சிந்தனையுடன் செயலாற்றிக் கொண்டிருக்கும் நிர்வாக சபை உறுப்பினர்களின் சம்மதத்துடனும், எமது இரத்தத்தின் இரத்தங்களாகிய எமது பங்கு மக்கள் அனைவரினதும் சம்மதத்திற்காகவும், ஆலோசனைகளிற்காகவும், மற்றும் அபிப்பிராயத்திற்காக வும் பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அக்கூட்டத்தில் பங்கு மக்கள் அனைவரும் ஆலயம் புனரமைப்புச் செய்வதற்கு சம்மதம் தெரிவித்தனர். புனரமைப்பு வேலைகளை முன்னெடுத்துச் செல்வதற்கு ஊரில் உள்ளவர்களைக் கொண்டே செயல்திறன் மிக்க புனரமைப்புக் குழு தெரிவு செய்யப்பட்டது.

அதில் பங்குத்தந்தை, ஜேசுதாசன், தேவசகாயம்பிள்ளை, ஜெயராசா, ஜெயரட்ணம், (பெலிசியஸ்), ராஜ்குமார், ஜெயரட்ணம், (தோமஸ்), ஜோன்சன், நிர்மலா. றொபின்சன், கயித்தாம்பிள்ளை, லீலா ரீச்சர் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். அதே நேரத்தில் எமது மக்கள் பொருளாதாரத்தில் மிகவும் நலிவுற்ற நிலையில் இருந்தும் கூட ஆலய புனரமைப்பிற்கு முன்வந்தமை எமது புனிதர் மேல் கொண்ட பக்தியையும், எமது கிராமத்தின் வளர்ச்சியிலுள்ள ஆவலையும், தியாக சிந்தையையும் எடுத்துக் காட்டுவதாக அமைந்தது.

அதன்பின் புனரமைப்புக் குழு ஆயரிடம் சென்று ஆலோசனைகளையும், அனுமதியையும் கேட்டபொழுது அவர் எங்களை அன்புடன் வரவேற்று எமக்கு வேண்டிய ஆலோசனைகளையும், அனுமதியையும் வழங்கி நின்றார். அதன் பின்பு எமது கலங்கரை விளக்கமாக இருக்கும் எம் மக்களின் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய குருமுதல்வர் அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளாரிடம் சென்றபோது அவர், செய்வதை நல்ல முறையில் செய்ய வேண்டும் என்றும், இன்றைய எமது மக்களின் பொருளாதாரத்தை கருத்தில் எடுக்க வேண்டும் எனவும் ஆலோசனை கூறி எம்மை அனுப்பி வைத்தார்.

அடுத்து எமது மறைமாவட்ட பொருளாளரும், எமது மக்களிடத்தில் கரிசனை உள்ளவருமான அருட்பணி. அன்ரனிதாஸ் அடிகளாரிடமும் ஆலோசனையைப் பெற்று, எமது ஆலய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேலைகளை, கட்டட கலைஞரும், கிராம சேவையாளருமாகிய திருவாளர் துரைராஜா அவர்களின் ஆலோசனையின்படியும், திரு.எ.கயித்தாம்பிள்ளை அவர்களின் நெறிப்படுத்தலிலும் கட்டட ஒப்பந்தக்காரரான திரு.ஆனந்தன் அவர்களின் குழுவினருடன் இணைந்து பங்குத்தந்தை அவர்களின் தலைமையில் 30.06.2008 அன்று எமது மண்ணின் மைந்தனும், மக்களின் வளர்ச்சியில் அக்கறை உள்ளவருமாகிய அருட்பணி. யூட் அமலதாஸ் அவர்கள் அடிக்கல் நாட்டி வைத்தார்.

அன்று தொடக்கம் வேலையானது, எமது பங்கு மக்களின் செந்நீர் வியர்வையாலும், புலம் பெயர்ந்து வெளிநாட்டில் உள்ள எமது மக்களின் தாராளமான நிதி உதவியுடனும், 20.10.2008 காலப்பகுதியில் அரைப்பகுதி வேலை சிறிது பூர்த்தியாகி உள்பகுதியில் வழிபாடு செய்வதற்கு ஏற்ற விதத்தில் அமைத்தோம் என்பதை பெருமையுடன் கூறிக்கொள்கிறேன்.

அதனைத் தொடர்ந்து எமது மக்களின் ஓய்வில்லாத உழைப்புடன் வேலை நடைபெற்றுக் கொண்டிருந்தது. 25.07.2009 அன்று தொடக்கம் 25.04.2010 அன்று வரைக்கும் கட்டடத்தின் நன்மைக்காகவும் பொருளாதார நெருக்கடியாலும் வேலைகளை நிறுத்தியிருந்தோம். இதே காலப்பகுதியில் நிதி நிலமையினைச் சீர்செய்யும் பொருட்டு ஊரில் உள்ள மக்களிடம் மிகவும் கஸ்ரப்பட்டு உடல் உழைப்பைத் தந்தவர்களிடம், மீண்டும் நாம் உங்கள் தொழில் வருவாயில் ஒரு பகுதியினைத் தந்துதவுமாறு கேட்டபொழுது நாம் எவ்வளவு கஸ்டத்தை அனுபவித்தாலும் எமது புனிதரின் ஆலயத்தை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற மன உணர்வுடன் ஒவ்வோர் மாதத்திலும் ஒரு நாள் ஊதியத்தைத் தர முன்வந்தமையை மனதார வாழ்த்தி நிற்கின்றேன்.

மீண்டும் 25.04.2010 வேலைகள் ஆரம்பமாகி நடைபெற்றது. டோமின் மேற்பகுதி வேலைகளை எ. கயித்தாம்பிள்ளை அண்ணரின் ஆலோசனைப்படி கட்டட வேலையாட்களுடன் சேர்ந்து றொபின்சன், றேகன், றகு, யூலியன் இவர்கள் வேலை செய்வதைப் பார்க்க மெய் சிலிர்க்க வைக்கின்றது. அவர்களுக்கு உதவியாக இருந்த தவராசா, சீலன், குமார் போன்றவர்களையும் நாம் மனதார நினைக்கின்றோம்.


இதே காலப்பகுதியில் கீழ்ப் பகுதியில் வேலை செய்து கொண்டு இருக்கும் எல்லா உள்ளங்களையும் மனதார நினைவு கூருகின்றோம். நாம் சிறிதளவில் புனரமைப்பு என்ற வேலைகளை ஆரம்பித்து இன்று வானளாவ ஓங்கி கம்பீரமாகக் காட்சி அளிக்கும் இவ் ஆலயத்தை அமைப்பதற்கு இறைவன் சித்தம் கொண்டு புனிதர் வழியாக எம்மை வழிநடத்தி உள்ளார் என்பதனை பெருமையுடன் கூறி இதற்கு உடல், உள, நிதி உதவி, பொருள் உதவி செய்த அன்பு உள்ளங்களிற்கு எனது நன்றியைக் கூறி வாழ்த்தினை தெரிவித்துக் கொள்கிறேன்.

அ. ஜே. ஜெ. யேசுதாசன்
அருட்பணிச்சபைச் செயலாளர்
புனித கயித்தார் ஆலயம்
மாரீசன்கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போயிட்டி புனித லூர்து அன்னை ஆலய மக்களின் வாழ்த்துச் செய்தி




வளம் கொழிக்கும் இளவாலைக் கிராமத்தின் மாரீசன் கூடல் பதியினிலே கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் புனித கயித்தார் ஆலயமானது இப் போர்க்காலச் சூழலிலும் பல பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்து இன்று புதுப் பொலிவுடன் மிகவும் பிரமாண்டமான புதிய கட்டிடமாக இறைவனுடைய அருளால் மிகச் சிறப்புற அமைக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதும், பாராட்டுக்குரியதுமாகும்.

ஆண்டாண்டு காலமாக இவ் ஆலயமானது பங்கு மக்களின் நல்வாழ்விற்கும், உருவாக்கத்திற்கும் சிறப்புற பெரும் பங்காற்றியுள்ளதுடன் இப் பங்கு மக்களின் விசுவாசம், அன்பு, ஆன்மீகவாழ்வு என்று பலவிதமான நற்பண்புகளை கொண்டு வளர்க்கவும் பேருதவி புரிந்துள்ளது என்பது மிகவும் மகிழ்ச்சிக்குரியதொன்றாகும்.

புதிதாக அமைக்கப்பட்ட இவ் ஆலயத்தைச் சூழ்ந்துள்ள பங்குச் சமூகமானது இறைவனுக்கேற்ற தலத்திருச்சபையாக, இறையன்புச் சமூகமாக மிளிர நாமும் இறைவனிடம் வேண்டி நிற்கின்றோம். மேலும் இவ் ஆலய வளர்ச்சிக்காகப் பல வழிகளிலும் துணைபுரிந்த இறைவனிற்கு நாம் அனைவரும் நன்றி கூறி நிற்பதுடன் இவ் ஆலயக் கட்டுமாணப் பணிகளில் தோள் கொடுத்துதவிய அனைவருக்கும் எமது உள்ளம் நிறைந்த வாழ்த்துக்களையும், நன்றிகளையும் கூறி இப் பதி பங்கு மக்களுடன் இணைந்து போயிட்டி புனித லூர்து அன்னை பங்கு மக்களாகிய நாமும் பெரு மகிழ்வடைகின்றோம்.

புனித லூர்து அன்னை ஆலய
நிர்வாகத்தினரும், பங்கு மக்களும்,
போயிட்டி, இளவாலை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



திருப்பாலத்துவ சபை



பீடத்தை அலங்கரிக்கும் உயிருள்ள பூக்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசியுரை



வடமாகாணமதில் மாரீசன்பதி என்ற சிறிய கிராமத்தில் வாழ்ந்த என் பெற்றோர், இக்கிராமத்தின் பெருமைகளையும், விசேஷமாகப் புனித கயித்தார் ஆலயத்தைப் பற்றியும் கூறக்கேட்டுள்ளேன். அதற்கு உரமிடுவதைப் போன்று 1998ம் ஆண்டு வசாவிளான் என்ற அயற் கிராமத்தைச் சேர்ந்த ஒரு பெரியவர், தான் சிறுவனாக இருந்த போது, தன்னுடைய தந்தையுடன் கயித்தார் ஆலய வளவில் ஆட்டு மந்தையிட்டு பட்டி கட்டிய மாமரங்கள் வளர்ந்து சோலையாகி கனிகொடுப்பது மட்டுமன்றி நிழல் கொடுத்து வளாகத்தை அழகுபடுத்துவதாகவும் கூறினார்.

கடந்த மூன்று தசாப்தங்களாக நடந்த கொடூரப் போரின் அகோரத்தினால் கதிகலங்கிய மக்கள், கல்லெறிபட்ட தேனீக்களைப் போல் மூலைக்கு ஒருவராக ஓடிச் சிதறி நின்ற காலத்தில் என் பெற்றோர்கள் ஜேர்மனியில் குடியமர்ந்தார்கள். இந்நிலையை மாற்றி அனைவரையும் திரும்பவும் ஒன்று கூடச் செய்யும் வண்ணமாகப் புனித கயித்தாரின் ஆலயம் புனரமைக்கப்பட்டு புதுப்பொலிவூட்டப்பட்டிருக்கும் இவ்வேளையில் ஆலயத்தை மெருகூட்ட உதவிய அனைத்து நல்ல உள்ளங்களையும் பாராட்டும் முகமாகவும், எமது பாதுகாவலர் புனித கயித்தாரின் வழியாக இறை ஆசீர் அனைவர் மீதும் பொழிய வேண்டுமெனவும் பிரார்த்தித்து என் பாராட்டைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஒரு நாள் புனிதரின் தேவாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுப்பேன் என்ற நம்பிக்கையோடு அனைவரையும் வாழ்த்தி பாராட்டி விடைபெறுகிறேன்.

அருட்சகோதரர் குறூஸ் தேவராஜா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கயித்தார் ஆலய கனடா கிளையின் வாழ்த்துச் செய்தி

எம் புனித கயித்தார்ஆலயம் புதிய வடிவமைப்பில் அழகுறு நிலைகாண் ஆலயமாக புதுப்பொலிவுறு நிலையில் விழாவெடுப்பது கண்டு கனடாவாழ் மக்கள் மட்டற்ற மகிழ் வெய்தியுள்ளனர்.

பல்லாண்டுகளுக்கு முன்பிருந்தே இவ்வாலயம் பழமையும் பெருமையும் மிக்க பேராலயமாக விளங்கி வந்துள்ளது. புனிதரின் காவலில் தொடர்ந்து பராமரித்து வந்த பங்கு மக்களுடன் பொறுப்பேற்றுப் பணியாற்றி வந்த குருக்களும் இவ்வாலயம் அழிவடையா நிலையில் எல்லோருக்கும் நற்பயனளிக்கும் இறை சன்னிதானமாக பாதுகாத்து வழிநடத்தி வந்ததுடன் இறை தொண்டுக்கென இப்பங்குப் புத்திரர்களான பல பணிக்குருக்களையும் உருவாக்கியுள்ளனர்.

காலச்சூழல் அனர்த்தங்களால் ஏற்பட்ட தாக்கத்தால் ஆலயம் சிதைவுறு நிலை தோன்றியதை அடுத்து இங்கு 14.01.2008ல் பணிப் பொறுப்பேற்றுள்ள எம் பங்குப்பிதா வண. ஞானேந்திரன் அடிகளார் அவர்களது சிந்தனைச் செறிவு மிக்க சிக்கனத் தொண்டின் விடா முயற்சியாலும் இங்குள்ள மக்களின் ஒன்றுபட்ட கடின உழைப்பாலும் இதற்கென உருவாக்கப்பட்ட கனடாக்கிளை உதவியுடன் ஜேர்மன்கிளை லண்டன் வாழ் மக்களுடன் பிரான்ஸ் நோர்வே உட்பட வெளிநாடு வாழ் மக்கள் எல்லோரும் வாரிவழங்கிய உதவியுடன் இவ்வாலயச் சூழலில் உள்ள மக்களும் தங்களால் இயன்ற தாராள உதவிகள் செய்து ஒத்துழைப்பு நல்கி இவ்வாலயம் முழுமைபெற இறைவன் கருணை கூர்ந்தார்.

மேலும் இவ்வாலயமும் சூழவுள்ள மக்களும் புனிதரின் பாதுகாப்பில் இறையருள் ஆசிபெற்று வாழ இவ்வாலய பங்குப்பணி நிலைத்து நின்று நற்தொண்டாற்றும் பங்குத்தளமாக விளங்கவும் இறைவிசுவாசப் பற்றுக்கொண்ட அர்ப்பண வாழ்வெய்திய உத்தம கத்தோலிக்க மக்களாகப் புனிதரின் காவலில் வாழ இறையருள் ஆசி வேண்டி வாழ்த்துகிறோம்.

இவ்வேளை இப்பாரிய பணியைப் பொறுப்பேற்று நடத்தக்கூடிய பங்குப்பிதாவைத் தந்துதவிய யாழ் ஆயர் மேதகு வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுடன் உறுதுணையாய் நின்றுதவிய எம்பங்கின் முன்னாள் அர்ப்பண பிதா குருமுதல்வர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் அவர்களையும் நன்றி உணர்வுடன் வாழ்த்துவதுடன் இப் பொறுப்பை ஏற்று எம் பங்கு மக்களை ஒன்று சேர உற்சாகத்துடன் வழி நடத்தி இரவுபகலாக அர்ப்பணிப்புடன் பணியாற்றி இப்பெரிய ஆலயத்தைக் கட்டி நிறைவேற்றிய எம் பங்குப்பிதா வண. ஞானேந்திரன் அடிகளார் அவர்கட்கும் எம் எல்லோர் சார்பிலும் இறை ஆசியுடன் கூடிய நன்றி நிறைந்த நல் வாழ்த்துக்கள் கூறுகின்றோம்.

இவ்வாலயம் உருவாகுவதற்கு பங்குப்பிதாவிற்கு உறுதுணையாக உதவிய பங்குச்சபை உறுப்பினர்களுடன் பங்குமக்களும் ஒன்று சேர்ந்து தங்கள் உடல் உழைப்பால் தம் உயிரையே துச்சமென மதித்து இரவு பகலாக உழைத்து பேராலயமாக்கிய பெருமை இப்பங்கு மக்களையே சார்ந்துள்ளது மட்டுமல்ல ஒற்றுமையின் மகிமையையும் எடுத்துக்காட்டியுள்ளனர். ஒன்று சேர்ந்து உழைத்த எல்லோருக்கும் நல்வாழ்த்துக்கள்.

இவ் ஒற்றுமையின் நற்றுணையாய் நின்று புலம்பெயர் எம்மக்கள் பேரார்வத்துடன் உதவிகள் புரிந்துள்ளனர். கனடாவாழ் மக்களுடன் ஜேர்மன், லண்டன் வாழ் மக்களோடு ஏனைய வெளிநாட்டு எம் மக்கள் எல்லோரும் தங்களால் இயன்ற உதவிகள் செய்து கட்டிடம் நிறைவுகாண உதவியுள்ளனர் அது மட்டுமல்லாமல் எம் ஆலயச் சூழலில் உள்ள மக்களும் மற்றோரும் இலனென்றும் மெல்வம் உரைத்திடாது ஈந்து தாராளமாகக் கொடுத்துதவியுள்ளனர். இப்பேருதவிகள் புரிந்த எல்லோருக்கும் புனிதரின் வேண்டுதலுடன் கூடியஇறை ஆசீர் நிறைந்த நல் வாழ்த்துக்கள்.

மேலும் இவ்வாலயத்தை முன்பிருந்து பரிபாலித்து எம் பிற்கால சந்ததிக்குதவிய ஆயர்கள் குருக்களுடன் இவ்வாலயப்பங்கு முன்னோர்களையும் வாழ்த்துகின்றோம். நிறைவாக இப்பேராலயம் முழுமைபெற உழைத்து உதவிய அனைத்து மக்களுக்கும், கொடையாளர்களுக்கும், ஆயர், குருக்கள், பரிபாலகர்களுக்கும் புனிதரின் பரிந்துரையுடன் நிறை அருள் ஆசீர்பொழிந்த நல் வாழ்த்துக்கள் கூறி நிற்கின்றோம்.

**ச. செ. இரத்தினம்**
செயலாளர், கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகாயபுரம் புனித சதாசகாய அன்னை ஆலய பங்கு மக்களின் வாழ்த்துரை



கடல்வளம் மிகுந்த மாரீசன் பதியினிலே புனித கயித்தாரின் அளவு கடந்த ஆசீரினாலும், இறையன்பினாலும் தூண்டப்பெற்றவர்களாக இறையுறவின் வெளிப்பாடாக அனைவரும் இணைந்து இவ்வாலய புதுப்பித்தலை சிறப்பாக மேற்கொண்டமையை இட்டு இறைவனின் நன்மைத்தனங்களுக்காக இதயம் நிறைந்த நன்றிகளையும், பங்கு வாழ் மக்களுக்கு உளம் கனிந்த வாழ்த்துக்களையும் கூறி நிற்பதில் சகாயபுரம் புனித சதாசகாய அன்னை ஆலய மக்களாகிய நாம் பெருமையடைகின்றோம்.

இவ்வாலய மக்களின் படிக்கற்களாக ஆன்மீகம், கல்வி, கலை, நம்பிக்கை போன்ற பண்புகள் பல வருடங்களுக்கு முன்னர் தொட்டு இன்றுவரை சுடர்விட்டு எரிகின்றதென்றால் அதற்கு அடிப்படையாக விளங்குவது இவர்களிடையே காணப்படும் ஒற்றுமை, உறுதியான விசுவாச வாழ்வாகும். இவ்வாலயத்தினை புதுப்பொலிவுடன் கொண்ட புனரமைப்பிற்கு மக்கள் அனைவரும் சேர்ந்து தமது கடின உழைப்பிற்கு மத்தியில் இரவு பகல் என்று பாராது இறைவன் வாழும் ஆலயமாக, புதுப் பொலிவுடன் மாற்றியதையிட்டு ஆலய மக்களையும் குறிப்பாக பங்குத்தந்தையையும் மனதார வாழ்த்துகின்றோம். எதிர்காலத்திலும் பங்கு மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஆன்மீக வளர்ச்சி பெற்று இறையன்புச் சமூகமாக, இறைவார்த்தை மீது கட்டப்பட்ட திருச்சபையாக மக்களும், மண்ணும் இறையருள் பெற்று நிறைவுடன் வாழ மீண்டும் மீண்டும் வாழ்த்துகின்றோம்.

நன்றி

புனித சதாசகாய அன்னை ஆலயப்பங்கு மக்கள்,
சகாயபுரம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



ஆழிசூழ் தீவின் யாழ் மண்ணில் கத்தோலிக்க தத்துவத்தின் உத்தமம்தொண்டு நிறை மாரீசன்பதியில் கோவில் கொணடெழுந்தருளி அருள் பொழிந்து வருகின்ற எம் பாதுகாவலராம் புனித கயித்தார் ஆலயம் புதுப்பொலிவுறுகாண் நிலையில் விழாவெடுத்து நிற்கும் இவ்வேளை ஆசிச்செய்தி வழங்குவதில் நாமும் மட்டற்ற மகிழ்வுறுகின்றோம்.

இவ்வாலயம் பல ஆண்டுகளுக்கு மேல் சிறப்பு மிக்க பேராலயப் பங்குத்தளமாக விளங்கி வந்துள்ளது. சூழ உள்ள கத்தோலிக்கர்கள் இவ் ஆலயத்திலேயே ஆராதனை வழிபாடுகள் செய்து வந்துள்ளனர். ஆயினும் காலப்போக்கில்அணித்தாயுள்ள கிராமங்களுக்குப் பிரிந்து சென்று தனித்தனி ஆலயங்கள் அமைத்துள்ள போதிலும் எம் புனிதரின் இவ் ஆலயம் தனித்துவம் இழக்காத தலைசிறந்த இறைசந்நிதானப் பங்குத்தளமாக பரிபாலிக்கப்பட்டு வந்துள்ளது.

அனேக ஆண்டுகள் கடந்த நிலையில் ஆலயம் பழுதுறுநிலை தோன்றினாலும் இங்கு தொண்டாற்றி வந்த குருக்கள் எல்லோரும் இப்பங்கு மக்களின் ஆதரவுடன் தங்களாலான ஆக்கப்பணிகளை மேற்கொண்டு அபிவிருத்திகளுடன் முன்னோக்கி ஓரளவு புதிதான நிலைக்கு கொண்டுவர முடிந்தது. இந்நிலையில் 1980ல் புனிதரின் (500வது ஆண்டு) யூபிலி விழாவைத் தொடர்ந்து மேதகு வண. தியோகுப்பிள்ளைஆண்டகை அவர்களால் 1981 பங்குனி 31ல் இருந்து இப்பங்குப் பிதாவாக வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் பொறுப்பேற்றினிமித்தம் மீண்டும் ஆலயமும் கிராமமும் இறைவிசுவாசக் கட்டுக் கோப்பிற்குள் ஒன்றித்த மக்களாக கத்தோலிக்க நற்செய்தி விழுமியங்களில் தேர்ச்சியும் உயர்ச்சியும் பெற்றுமுன்மாதிரி வளர்ச்சிக்குரிய பங்குத்தளமக்களாக ஆக்கம் பெற்றது மட்டுமல்லாமல் இறை அருளால் இறைத் தொண்டுக்கென இம் மண்ணில் பூத்தமலர்களான பல குருமணிகள் உருவாவதற்கும் இறைவன்அருள்கூர்ந்தார்.

இவ்வடிகளாரின் அர்ப்பணிப்பு சேவையின் ஐந்து ஆண்டு காலப்பகுதியின் பின் இங்கு பொறுப்பேற்ற வண. பிதா. யேசுதாஸ் அடிகளாரும் அளப்பரிய இறைத்தொண்டாற்றியதுடன் இவரைத் தொடர்ந்து இப் பங்கைப் பொறுப்பேற்ற குருக்களும் அர்ப்பணிப்புடன் செயலாற்றி ஆலயத்தையும், பங்கையும், மக்களையும் பாதுகாத்து வந்துள்ளனர்.

நாட்டில் ஏற்பட்ட போர்ச் சூழல் காரணமாக மக்கள் இடம் பெயர் நிலை தோன்றி, பரந்து பிரிந்துவாழும் அவலநிலை ஏற்பட்டது. அதை அடுத்து ஆலயம் பழுதடைநிலை தோன்றியது. மீழ் குடியேறிய எம் மக்களின் இறைவிசுவாசமிக்க பற்றார்வத்தால் சிதைவுற்ற சிலவற்றை நிவர்த்திக்க விரும்பினாலும் நிதிநிலை சிக்கல் காரணமாகவும் நிரந்தர பங்குப்பிதா நியமிக்கப்படாமையாலும் வெளிநாடு வாழ் எம் மக்களின் உதவிகளுடன் சிறு திருத்தங்கள் மட்டும் செய்ய முடிந்தது.

இந்நிலையில் மாரீசன் கூடல் பங்குப் பிதாவாக வண. ஞானேந்திரன் அடிகளார் 14.01.2008ல் பொறுப்பேற்றதிலிருந்து இறைபணி, மறை அறிவுத்திறன் சீர்திருத்தப் பாதையில் அடி எடுக்க ஆரம்பித்தது. ஒன்று சேர்ந்த மக்களாக ஆக்கம் பெற்றுள்ளனர். எனினும் ஆலயம் வழிபாட்டிற்கு உகந்ததாக இல்லாமையால் திருத்த வேண்டிய கட்டாய நிலையில் பங்கு மக்களின் ஒத்துழைப்புடன் கனடாக்கிளை ஜேர்மன் கிளை, லண்டன் உட்பட வெளிநாடு வாழ் எம்மக்கள் எல்லோரினதும் உதவிகள் பெற்று சிறுகட்டுமானத்தில் தொடங்கிய இவ்வாலயக் கட்டிடம் இப்பெரிய ஆலயமாக புதுவித வடிவமைப்பில் உருப்பெற்றதென்றால் எம் புனிதரின் பரிந்துரையில் இறைவன் வழங்கிய பேரருள் ஆசீராகும். இவ்வேளை இப்பணிப் பொறுப்பை ஏற்று நடத்தக்கூடிய பங்குப் பிதாவைத் தந்துதவிய யாழ் ஆயர் மேதகு வண. தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை அவர்களுடன் உறுதுணையாய் நின்றுதவிய எம் பங்கின் முன்னாள் அர்ப்பணபிதா குருமுதல்வர் வண. ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார்க்கும் நற்பணிசிறக்க இறையருள் ஆசி வேண்டுவதுடன் இம்மிகப் பெரும் பொறுப்பை ஏற்று அயராது உழைத்து இப்பெரிய ஆலயத்தை புதுவடிவில் கட்டி நிறைவேற்றிய எம் பங்குப் பிதா வண. ஞானேந்திரன் அடிகளாருக்கும் நற்தொண்டுயர இறையருள் ஆசிவேண்டி வாழ்த்துகின்றோம்.

இவ்வாலயம் முழுமைபெற இரவுபகலாய் உழைத்து ஒற்றுமையின் சின்னமாய் உயர் பேராலயமாக்கி இப்பங்கு மக்களின் உயரிய பண்பு நிலைத்து நீடூழிவாழ இறையருள் ஆசி வேண்டி வாழ்த்துவதுடன் பேருதவிகள் புரிந்த வெளிநாடுவாழ் மக்களுக்கும் மேலும் முன்பிருந்து பரிபாலித்து இவ்வாலயம் முழுமைபெற ஆதரவு நல்கிய அனைத்துக் கொடையாளர்களுடன் எல்லோருக்கும் புனிதரின் பரிந்துரையும் அன்னை மரியாளின் வேண்டுதலுடன் கூடிய இறையருள் பொழிந்த நிறை ஆசீர்வேண்டி நல் வாழ்த்துக்கள் கூறி நிற்கும்.

முன்னாள் பங்குச்சபைச் செயலர்

**ச. செபஸ்தியாம்பிள்ளை (இரத்தினம்)**

கனடா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



புனித மரியகொறற்றி மன்றம்



புனித டொன்பொஸ்கோ இளைஞர் மன்றம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கயித்தாரின் ஆசீர் அனைத்து மக்களுக்கும் என்றென்றும் கிட்டட்டும்

மாரீசன் கூடல் கிராமத்தின் கிறீஸ்தவ சமூகத்தின் மத்தியில் துலங்கும் ஆன்மீக பீடமாகவும் எமது சமூகத்தின் கௌரவச் சின்னமாகவும் பல நூற்றாண்டு காலப்பழைமை வாய்ந்ததுமான புனித கயித்தார் ஆலயம் புதிதாகப் புனர்நிர்மாணம் செய்யப்பட்டு அதன் திறப்பு விழாவின்போது வெளியிடப்படும் நினைவு மலருக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகின்றோம்.

இலங்கையிலேயே புனித கயித்தாருக்கென அமைக்கப்பட்டிருக்கும் ஒரேயொரு ஆலயம் என்ற தனிச்சிறப்பை இவ்வாலயம் கொண்டுள்ளமை எமக்கெல்லாம் பெருமைரும் விடயமாகும். பண்டைய கட்டிடக் கலைச் சிறப்பைச் சிதைய விடாமலும் அதேவேளை புதிய ஆலயத்தின் தேவையும் அவசியமும் உணரப்பட்ட நிலையிலும் பழைய ஆலயத்தின் முகப்புத் தோற்றம் அப்படியே அமைந்திருக்க ஏனைய பகுதிகள் புதிதாகக் கட்டியெழுப்பப்பட்டிருப்பது தனிச் சிறப்பான அம்சமாகும்.

இவ்வாலயம் புனர்நிர்மாணம் செய்யப்பட்டுள்ள இக்காலப்பகுதியில் எமது பங்கில் பணிபுரிந்து கொண்டிருக்கும் அருட் தந்தை எம். ஞானேந்திரன் அடிகளாரின் அணுகுமுறையும் எமது பங்கு மக்களையும் புலம் பெயர்ந்து வாழும் எமது பங்கு மக்களையும் அவர் கையாண்ட விதமும் இவ்வாலயப் புனரமைப்பின் வெற்றிக்கு பெரிதும் வழிகோலியது. எனவே அவரது பணிக்காலம் எமது பங்கின் பொற்காலமே. மேதகு யாழ். ஆயர் அவர்களின் அனுமதியுடனும் நிதி உதவியுடனும் வெளிநாடுகளில் வாழுகின்ற எமது உறவுகளின் தியாகம் நிறைந்த பொருளாதார உதவியும் இங்கு வாழுகின்ற எமது பங்கு மக்களின் அர்ப்பணிப்பு நிறைந்த கடின உழைப்பும் சேர்ந்து இவ்வாலயம் அழகுறப் புனரமைக்கப்பட்டுள்ளது.

இவ்வாலயப் புனரமைப்பிற்கு அனைத்து வழிகளிலும் உதவி வழங்கியவர்கள் அனைவருக்கும் புனித கயித்தாரின் ஆசிகள் நிறைவாகக் கிட்டட்டும். என்றென்றும் எமது மக்களின் வாழ்வில் இறையுணர்வைத் தோற்றுவிக்கும் ஒரு ஆன்மீக பீடமாக இவ்வாலயம் திகழவும் இங்கு தஞ்சமெனத் தவித்தோடி வரும் பக்தர்களுக்கு நிறைவான அருள் கிடைக்கவும் ஆசித்து நிற்கின்றோம்.

**அருட்பணிச் சபையினர்**
புனித கயித்தார் ஆலயம்
மாரீசன்கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலப்பராகிரி முருகமூர்த்தி தேவஸ்தானம் வழங்கிய ஆசியுரை

இன்றைய உலகில் விஞ்ஞான வளர்ச்சியின் வேகத்தால் அஞ்ஞான முதிர்ச்சியின் நாசம் முன்னிற்கிறது. இவ்வேளையில் மெஞ்ஞான உணர்வின் வளர்ச்சி ஓரளவில் உலகத்தைக் காப்பாற்றி வருகிறது.

எங்கள் கிராம மக்கள் கடந்த காலப் போர் அனர்த்தங்களாலும் கடற்கோள் அனர்த்தத்தாலும் மிகவும் நொந்து போய் இருக்கிறார்கள். அவர்கள் அவற்றிலிருந்து மீண்டெழும் இவ்வேளையில் புனித கயித்தார் ஆலயம் புதிதாக மீள் அமைக்கப்பட்டு புதுப்பொலிவுடன் காட்சி அளிக்கிறது. இங்கு மக்களுக்கு இறையருள் நிறைவுடன் கிடைத்து அவர்களின் பண்பாடும், வாழ்வும் உயர்ந்திட எமது நல்லாசிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**நிர்வாக சபையினர்**<br>
கலப்பராகிரி முருகமூர்த்தி தேவஸ்தானம்,<br>
மாரீசன்கூடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கயித்தாரின் ஆசீர்வாதம் அனைவருக்கும் கிட்டட்டும்



மிகவும்தொன்மை வாய்ந்த புனித கயித்தார் ஆலய மலர் வெளியீட்டுக்கு ஆசிச் செய்தி வழங்குவதில் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன்.

இலங்கையில் ஒரேயொரு கயித்தார் ஆலயமாக இருக்கும் இவ் ஆலயத்தால் மாரீசன்கூடல் கிராமம் பெருமையடைகின்றது. வரலாற்றுச் சிறப்பும் நூறு வருடங்களுக்கு மேல் பழமை வாய்ந்ததுமான இவ் ஆலயம் இன்று இறை உணர்வு கொண்ட மக்களின் பண உதவியுடனும் சரீர உதவியுடனும் புனர்நிர்மானம் செய்யப்பட்டு இன்று கம்பீரமாகக் காட்சி அளிக்கின்றது. இது எம் அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தருகின்றது.

இவ் ஆலயம் யாழ் ஆயரின் வழிகாட்டலில் எமது பங்குத்தந்தை அருட்பணி ஞானேந்திரம் அடிகளாரால் சிறப்பாக நிர்வகிக்கப்பட்டு வருகின்றது. எனவே புனித கயித்தாரின் ஆசீர்வாதம் அனைத்து மக்களிற்கும் கிடைப்பதற்கு ஆண்டவனை வேண்டிநிற்கின்றேன்.

**சு. சூரியகுமார்**
கிராமசேவகர் J/154
மாரீசன்கூடல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரீசன் பதிசிறக்க ஆயனே நீர் ஆளுவீரே
# கயித்தானு மாமுனியே



கடலாளும் புவிமீது கற்பகங்கள் வான்நோக்கும்
இடிதாங்கும் குருகுலத்து மீனவர்கள் படகோடும்
அடியாளும் நீரினிடை மீனினங்கள் வலைநிரப்பும்
மடமாதர் தெரிவினிடை மாரீசன் பதிசிறக்கும்

ஏருழவர் நிலமுழுது பண்படுத்தி விதைத்திடுவார்
பாருறையும் மக்களுக்கு வாய் சுவைக்க உணவளிப்பார்
காரிறுக்க முகில் பொழியும் கழனிகளில் பயிர் செழிக்கும்
பேரெடுத்தும் புகழ் சேர்க்க மாரீசன் பதிசிறக்கும்

நாற்றிசையும் எழில்பெருக்கும் கற்பகங்கள் நடுவினிலே
ஆற்றுதற்கு யாருமின்றிக் கலங்குவாரைத் தாங்கிநிற்கும்
ஊற்றிலெழும் பெருநதியாய் வரமருளும் மாமுனியும்
தேற்றியெமை ஆளுகின்ற மாரீசன் பதிசிறக்கும்

காவற்தெய்வம் நீரெமக்கு காலமெலாம் வாழவைக்கும்
பூவிலொரு புனிதனாகப் புண்ணியத்தின் தெய்வமாக
தாவியுமதடிவருடும் நாதியற்ற அபலைகளின்
ஆவியினைத் தாங்கி நிற்கும் கயித்தானு மாமுனியே

ஆண்டவனின் தூதுவனாய் அவனியிடை போதகனாய்
வேண்டுகின்ற வரங்களெல்லாம் அருளுகின்ற மாதவற்கு
ஈண்டுறையும் மக்களொன்றாய்க் கரங்குவித்துத்தொழுதிடவே
யாண்டும்நின் புகழ்பரப்பும் ஆலயமும் எழுந்ததுவே

நோயினாலே வாதையுறும் சக்தியற்ற அநாதைகட்கு
தாயினைப் போல் கனிவுடனே அரவணைத்துக் காப்பவரே
மாயவினை தீண்டிடாமல் பாவியர்நாம் மீட்படைய
ஆயனே நீ ஆளுவீரே கயித்தானு மாமுனியே

மாரீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத் திறப்புவிழா ஆசிச் செய்தி



எமது பிரிவிலுள்ள மாரீசன்கூடல் புனித கயித்தார் ஆலயத் திறப்பு விழாவினை முன்னிட்டு ஆசிச் செய்தி வழங்குவதற்கு எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தால் மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன்.

அந்த வகையில் வரலாறு காணாத மிகப் பழமை வாய்ந்த இந்த ஆலயமானது பல நூற்றாண்டு காலமாக இப்பதியின் மக்களை ஆன்மீகப் பாதையில் வளர்த்து வளமான கிறிஸ்தவ வாழ்வுக்கு தூண்டுதலாக அமைந்துள்ளமையும் புனித கயித்தார் ஆலயம் இலங்கையிலுள்ள ஒரே ஒரு ஆலயமாக திகழ்வதும் எம் அனைவருக்கும் பெருமையே.

இவ்வாலயத்தின் வளர்ச்சிக்கு இதுவரை காலமும் தியாக உணர்வுடனும் பொறுப்புடனும் பணியாற்றிய பங்கு தந்தையர்கள் இவ்வாலயத்தின் உயர்ச்சிக்கு தம் ஊக்கத்தாலும், ஒத்துழைப்பாலும் கை கொடுத்து நிற்கும் சகல பங்கு மக்களையும் இவ்வாலயத்தின் மாண்பினைப் பேணிய மகத்துவம் நிறைந்த சேவையாளர்களையும் பொது நலன் விரும்பிகளையும் இறைவன் ஆசிர்வதிக்க அன்புடன் வேண்டுகிறேன். இன்று போல் என்றும் இவ்வாலயம் சிறப்பாகவும் இவ்வாலயத்தின் பெயரால் இறை பணியாளர்கள் பலர் உருவாகவும் இறையாசியினை இரந்து வேண்டுவதோடு எனது மனமார்ந்த ஆசிகளையும் கூறி இச்சந்தர்ப்பத்திற்கும் நன்றி கூறுகின்றேன்.

நன்றி

எப். அன்ரனி றோய்
கிராம சேவையாளர்,
வலி வடமேற்கு J/222



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கயித்தார் ஆலயம்
# லண்டன் கிளையின் ஆசிச்செய்தி

கடல் வளமும், தரை வளமும், பனைவளமும் நிறைந்து கத்தோலிக்கரும், இந்துக்களும் பரந்து வாழும் மாரீசன் மண்ணில், மங்காப் புகழுடன் விளங்கும் புனித கயித்தார் ஆலயம், மாரீசன் மண்ணின் பழமையையும், பெருமையையும் எடுத்துக் கூறுகின்றது.

காலத்தின் தேவையுணர்ந்து பழமை குன்றாது புதிதாய் அமைந்த ஆலயத் திறப்பு விழா மலரில் வாழ்த்துக்கள் கலந்த ஆசிகள் கூறி நிற்பதில் லண்டன் வாழ் மாரீசன் மண்ணின் மைந்தர்கள் மகிழ்வடைகின்றனர்.

இவ் ஆலயம் குறுகிய காலத்தில் நிறைவு பெற்று, புதுப்பொலிவுடன் திகழ்வதற்கு, பங்கு மக்களின் விடா முயற்சியும், கடின உழைப்பும் மட்டுமல்ல ஒற்றுமையின் மகிமையுமாகும்.

பழமை வாய்ந்த ஆலயமாக இருந்த போதிலும், அதனைப் புதிதாய் அமைத்திட அனுமதியுடன் ஆசீரும் அளித்த ஆயர் அவர்கட்கும், குருமுதல்வர் அவர்கட்கும், முன்னின்று உழைத்த M.M.H. ஞானேந்திரன் அடிகளார் அவர்கட்கும் எமது நன்றிகளும், வாழ்த்துக்களும் உரித்தாகட்டும்.

தூர நோக்கினைக் கருத்திற் கொண்டு புலம் பெயர்ந்து அனைத்து நாடுகளிலும் வாழும் கிராம மக்களுடன் நல்லுறவு பேணி, அளித்திட்ட பங்களிப்புடன், கிராமத்தில் வாழும் மக்களின் பங்களிப்புடனும் புனிதரின் ஆலயம் பேராலயமாக எழுந்து நிற்கின்றது.

கிராம மக்களின் விசுவாச வாழ்விற்கும், ஆன்மீக வாஞ்சைக்கும் எடுத்துக் காட்டான இவ்வாலயக் கட்டுமானப் பணியில் காட்டிய ஒற்றுமையையும், விடா முயற்சியையும் தொடர்ந்தும் கடைப்பிடித்திடவும், புனிதரிடம் விளங்கிய புண்ணியங்களைவ ாழ்வில் கடைப்பிடித்து வாழவும், கற்களால் கட்டப்பட்ட ஆலயங்களல்ல, எமது உள்ளமெனும் ஆலயங்கள் புனிதமாய் விளங்கிட புனிதரின் பாதுகாவல் என்றும் கிடைத்திட இறையாசீர் இறைஞ்சி வாழ்த்துகின்றோம்.

இருதயநேசன்
பொறுப்பாளர்
லண்டன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பாடகர் குழாம்



மறையாசிரியர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துச் செய்தி



காலமெனும் நதியின் ஓட்டத்தில் பல மாற்றங்களைக் காவிச்செல்லும் அந்நதியானது தடைப்பட்டு நின்றுவிட்டால் அவ்விடத்திலேயே அந்நீரானது தேங்கிக் குட்டையாகிவிடும் என்பதில் எந்தவித சந்தேகமுமில்லை. குட்டையான அந்நீர் நிலத்தைச் சேறாக்கி, சகதியாக்கி, நிறம்மாறி நாற்றம் எடுக்கும் அல்லவா! சகல விஷக் கிருமிகளும், தீங்கு விளைவிக்கும் பூச்சிகளும் வாழும் இடமாக மாறிவிடும்.

மாற்றங்கள் நல்லவையே. உலகத்துடன் ஒத்து வாழுதல் என்பது நல்லதே! அவசியம் தேவையான ஒன்றே! மாற்றங்கள் என்பது முன்னேற்றங்களாக இருக்கலாம், பின்னடைவுகளாக இருக்கலாம், வெற்றிகள், தோல்விகளாகக்கூட இருக்கலாம். எதுவாகினும் மாற்றங்கள் அவசியமானவை. பழமைவாதிகளின் பிடிக்குள் அகப்பட்டு நீர் குட்டையாகி நாற்றமெடுக்கும் நிலை மாறத்தான் வேண்டும்.


இந்த வகையில் புனித கயித்தார் ஆலயமானது பல மாற்றங்கள், வடிவங்களைப் பெற்று புதுப் பொலிவுடன் கம்பீரமாகக் காட்சியளிப்பது மனச்சந்தோஷத்தையும், மனநிறைவையும் தருகிறது. "ஆலயம் தொழுவது சாலமும் நன்று" என்பதற்கமைய மக்கள் கூடி செபிக்கும் ஆலயமாக, விண்ணப்பிக்கும் ஆலயமாக, கடவுளின் வார்த்தையைச் சிந்திக்கும் ஆலயமாக, குருவுடன் கல்வாரிப்பலியில் ஒன்றாகிவிடும் ஆலயமாகக் காட்சிதருவதையிட்டு நானும் பெருமகிழ்வடைகின்றேன்.

திரு. அ. அருள்நேசன்.
(ஆசிரியர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்தாவத்தை புனித பிலிப்பு நேரியார் ஆலயப் பங்கு மக்களால் அருளிய வாழ்த்துச் செய்தி



ஈழத் திருமணி நாட்டில் வடபால் அமைந்துள்ள மாரீசன் கூடல் என்னும் குக்கிராமத்தில் பல நூற்றாண்டு காலமாக அமைந்திருந்த புனித கயித்தார் ஆலயம் சீர்குலைந்த காரணத்தால் அதனைத் திருத்தி அமைக்க வேண்டிய சூழ்நிலை ஏற்படவேண்டியதாயிற்று. இக்கிராமம் பழைய சரித்திர வரலாறு பெற்ற ஒரு சிறந்த கிராமமாகும். இக்கிராமத்தில் பல நூற்றுக்கணக்கான கத்தோலிக்கர்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்கள் தங்கள் குல தெய்வமாகிய புனித கயித்தார் ஆலயத்தைத் திருத்தி அமைத்து தங்கள் புனிதரின் பக்தியைக் குவலயம் எல்லாம் ஓங்கிடச் செய்ய வேண்டுமென்ற எண்ணம் கொண்டவர்களாய் ஓர் ஆலயத்தைக் கட்டி எழுப்பி எம் மதத்திற்கும், திருச்சபைக்கும் பெரும் புகளாரத்தைச் சூட்டியுள்ளனர் என்பதை வெளிக்கொணர்வதில் புகளாங்கிதம் கொள்கிறோம்.

எமது பங்கு மக்களாகிய யாம் நினைவு கூர்ந்து இச் சிறப்பு மலரை வெளியிடவுள்ள புனித கயித்தார் ஆலயப் பங்கு மக்களுக்கும் ஏனைய புனிதர்களின் பக்தர்களுக்கும் இவ் ஆலயத்தை உருவாக்குவதற்கு பல வகையிலும் தோளோடுதோள் கொடுத்து ஒத்தாசை புரிந்த அனைவருக்கும் எல்லாம் வல்ல இறைவன் ஆசி அருள்வாராக.

பத்தாவத்தை பங்கு மக்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மாசில்லாமாதா சபை



புனித சூசையப்பர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனித கயித்தார் ஆலயம்
# ஜேர்மன் கிளையின் வாழ்த்துச் செய்தி

நீர் வளம், நிலவளம் நிறைந்து வட பகுதி கடலாலும், சூழவுள்ள இடங்கள் வயல்கள், பல இன மரஞ்செடி கொடிகளாலும் நிறைந்து பொலிவுற்று விளங்கும் எங்கள் கிராமத்தில் கோவில் கொண்டு குடிபுகுந்திருக்கும் எம் புனித கயித்தாரின் புகழைப்பாட புலம்பெயர்வாழ் மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பெருமிதப்படுகின்றோம்.

அன்று பழமைவாய்ந்து விளங்கிய எம் ஆலயம் இன்று புதுக்கோலம் கொண்டு பொலிவுடன் நிமிர்ந்து நிற்பதும், எம் புனிதரின் ஆசியென்றே கூறவேண்டும். இங்கு வாழும் மக்கள் கடற்றொழிலே ஜீவனோபாயம் என்று வாழ்ந்து பல துன்பங்களை வாழ்க்கையில் சுமந்தாலும் புனிதரைப் போற்றி அவரின் பாதத்தை விட்டு அகலாது வாழ்ந்தார்கள். எனவே எம் புனிதர் தம்மை அண்டி வந்தோரை பாசத்துடன் அணைத்துப் பாதுகாத்து வந்தமைக்கு நாம் அனைவரும் நன்றி கூறுவோம். கடந்த காலங்களிலே ஆவணி 3ம் திகதி என்றால் அனைவரும் ஒன்று சேர்ந்து கொடியேற்றி 7ம் திகதி வரை விழாவெடுத்துச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள். தொழில் சம்பந்தமாக வேறு இடங்களுக்குச் சென்றாலும் ஓடோடி வந்து தம் பாதுகாவலரின் திருநாளை கொண்டாடி மகிழ்வார்கள். அயற்கிராம மக்களும் திருநாளுக்கு வருகைதந்து சிறப்பிப்பார்கள்.

எம் பங்கில் கடமையாற்றிய குருக்களின் சேவைகளை மறந்துவிட முடியாது. மக்களோடு மக்களாக பின்னிப்பிணைந்து எம் அனைவரையும் இறை பக்தியில் வளர்த்தெடுத்தார்கள். எம் மக்களும் அவர்களுக்குப் பணிந்து குருவின் கூற்றே இறைவனின் கூற்றென எண்ணி செயற்பட்டதன் காரணமாக இன்று இப்பெருவிழாவை ஒன்றித்துக் கொண்டாட புனிதர் கருணை கூர்ந்துள்ளார். தினமும் மாலை 5 மணிக்கு மணியோசையுடன் தொடங்கும் செபமாலை வழிபாடு 7 மணி வரை இடம்பெறும். இது எம் அலயத்திற்கு சிறப்பான செயற்பாடு என்றே கூறவேண்டும். இவ்வித் செயற்பாடுகளினாலும் அத்துடன் பல சங்கங்கள், கூட்டங்கள் அமைக்கப்பெற்றும் எம் ஊருக்குப் பெருமை சேர்த்து வருகிறது. எமது சிறிய கிராமம் ஐந்த குருக்களைத் தந்துள்ளமை புனிதர் தாம் குருமடத்தை ஆரம்பித்து செயலாற்றியமையின் வெளிப்பாட்டின் காரணமாகவே எங்கள் பங்கு மத்தியிலும் தம் ஆசியைத் தந்து இவர்களைத் தம் பணியில் தொடர அழைத்துள்ளார்.

எம் பங்கிலுள்ள சிறார்கள் கல்வியிற் சிறந்து பல வகையிலும் முன்னேறி வருவது எமது பங்கிற்குச் சிறப்பும் பெருமையும் தருகின்றது. அத்துடன் புலம்பெயர்ந்து அபயம் என்று ஓடிவந்த எம் பங்கு மக்களை அந்நாட்டினர் அடைக்கலம் தந்து ஆவன செய்தமைக்காக இறைவனுக்கும் புனிதருக்கும் நன்றி கூறுகின்றோம். புலம் பெயர்ந்து வாழும் எம் சிறார்கள் பல துறையிலும் கல்வியைக் கற்று உயர் பதவிகளும் பெற்று சிறப்புடன் வாழ்வதுடன் ஏனையோரும் ஏட்டிக்குப் போட்டியாக எல்லா நாடுகளிலும் முன்னேறி வருவது புனிதரின் ஆசியென்றே கூறவேண்டும்.

ஆலய புனரமைப்பு என்று தொடங்கியதும் எப்படி நடைபெறுமோ என்று ஏங்கியபோது புனிதரின் ஆசியில் எவ்வித பிரச்சினையுமின்றி புலம் பெயர்ந்து வாழும் மக்களின் பண உதவியுடனும் பங்கு மக்களின் ஒத்துழைப்புடனும் ஆர்வத்துடனும் நிறைவு பெற்றமைக்கு இறைவனுக்கு நன்றி கூறுகின்றோம்.

எங்கள் நாட்டிலே கடந்த வருடம் நடந்த அசம்பாவிதங்களினால் ஒரு லட்சம் தமிழ் மக்களை இழந்து பல லட்சம் மக்கள் அநாதைகளாகவும், அகதிகளாகவும் இருப்பதையிட்டு எம் கவலையைத் தெரிவிக்கின்றோம். மறுபடியும் இந்நிலை ஏற்படாமல் ஒற்றுமையுடனும் அமைதியுடனும் செயற்பட்டு வாழ இறைவன் வழி செய்யவேண்டும் என்று ஆசிப்பதுடன் எம் பங்கு மக்கள் பகைமைகள், பேதங்களின்றி அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட்டு எம் பங்கை முன்னேற்ற உதவ வேண்டுமென்றும் எம் பங்குத்தந்தையின் சேவைகள் மென்மேலும் உயர்ச்சி அடைந்து அவரது விருப்பங்கள் நிறைவேற வேண்டுமென்றும் வேண்டுவதோடு எம் ஆலய வளர்சிக்காகப் பாடுபட்டு உழைத்த அனைவருக்கும் புனிதரின் ஆசி வேண்டி எமது வாழ்த்துக்களைத் தெரிவித்து நிற்கின்றோம்.

சூ. கயித்தாம்பிள்ளை
பொறுப்பாளர், ஜேர்மன் கிளை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விண்ணவனே கயித்தானு மாமுனியே
# திருக்கரத்து ஆசிதாரும்

மாதவத்தோர்ஈன்றளித்த பெருநிதியே,
மங்காத மாட்சிமையின் குலவிளக்கே
தேவனருள் பூரணமாய்ப் பெற்றவனே
தேசத்து மீட்சிக்காய் உதித்தவனே
சீவியத்தின் வெறுமையினை உணர்ந்தவனே
செல்வத்தின்செருக்கடக்கி வென்றவனே
ஆவியுடல் அத்தனையும் அர்ப்பணித்தே
அவனியுளோர் ஆன்மநெறி வளர்த்து நின்றாய்

துன்பங்கள் சூழ்ந்துலைக்கும் பூமியிலே
தூயவனாய் உனை வளர்த்த குலமகனே
அன்புமுகை உள்ளத்தில் மலரவைத்து
அகிலத்து மாயைகளை விரட்டி நின்றாய்
இன்பந்தான் வாழ்வென்று மயங்கிடாது
இன்னலுக்குள் இறையரசின் பேரொளியை
கன்மனத்தார் உள்ளங்கள் நெகிழவைத்து
காட்சியினால் கண்டவரும் களிக்கவைத்தாய்

அன்னைமரி யணைப்பினிலே வளர்ந்தெழுந்து
அழிந்தொழியும் வாழ்வினுக்கு ஏங்கிடாது
துன்புற்ற மக்கட்கோர் துணைவ னாக
துயர்களையும் உத்தமனாய் பணிமேற்கொண்டு
அன்புதான் வேதமென்னும் உண்மை தனை
அனைவர்க்கும் எளியவனாய் வாழ்ந்து காட்டி
சொன்னயத்தால் ஞானமதை யூட்டிநின்று
சோதனைகள் வெற்றிகொண்ட மாதவனே

கலைகளிலே தேர்ச்சிபெற்று உயர்ந்தவேளை
கடவுள்பணி கைவிடாது சிரமேற்கொண்டு
அலைக்குமிந்தஉலகவாழ்வின்பற்றறுத்து
ஆண்டவர்க்காய்த் துறவறத்தின் ஆடையோடு
நிலைகுலைந்த மக்களையே ஒன்றாய் சேர்த்து
நீக்கமற ஆலயமும் எழுப்பியாங்கு
தலைசிறந்த மறையுரையின் நாயகனாய்
தன்னிகரில்லாத பணி மேற்கொண்டாயே


மண்ணிழந்தோம் மனையிழந்தோம் வாழ்விழந்தோம்
மனம்மகிழச் சேர்த்துவைத்த பொருளிழந்தோம்
கண்மணிபோல் காத்தபல வுயிரிழந்தோம்
காவலனே அமைதியினைத் தாருமைய்யா
வண்ணமலர்ச் சோலையென எழில்பெருக்கும்
மாரீசன் பதியினிலே கொலுவிருக்கும்
விண்ணவனே கயித்தானு மாமுனியே
விரைந்துமது திருக்கரத்து ஆசிதாரும்

மாரீசன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளவாலை புனித நீற்றம்மாள் ஆலய மேய்ப்புப்பணிச்சபையின் வாழ்த்துரை



எமது பங்கில் புதிதாக அமைக்கப்பட்ட பழம்பெருமை வாய்ந்த புனித கயித்தார் ஆலய திறப்புவிழா நிகழ்வின் நினைவு மலரிற்கு வாழ்த்துரை வழங்குவதில் புனித நீற்றம்மாள் ஆலய இறைமக்களாகிய நாம் பெருமகிழ்வு அடைகிறோம்.

ஒரு ஊரின் விசுவாசத்திற்கும், ஆன்மீகத்திற்கும் அடித்தளமாக அமைவது அந்த ஊரில் அமைந்துள்ள ஆலயமே. அழகுற அமைக்கப்பட்டுள்ள எமது அயல் ஆலயம் ஆகிய புனித கயித்தார் ஆலயம் இதற்கு ஒரு சான்று. இவ் ஆலயம் அழகுறப் பிரகாசிப்பதற்கு எமது பங்குத்தந்தை அருட்பணி. ஞானேந்திரன் அடிகளாரும் இவ் ஆலய இறைமக்களும் முன்னின்று கடின உழைப்பை மேற்கொண்டுள்ளார்கள். இவர்களுக்கு எமது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள இந்த ஆலயம் பங்கு மக்களாகிய எம் விசுவாச வாழ்வை மேலும் வளர்ச்சியடையச் செய்யவும் இறை பிரசன்னத்தில் நாம் வழிநடக்க உறுதுணையாக இருக்கவும் பிரார்த்திக்கின்றோம்.


நன்றி

**ஆலய மேய்ப்புப்பணிச்சபை**
புனித நீற்றம்மாள் ஆலயம்
இளவாலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆலயக் கட்டுமானப் பணியில் எனது சிறப்புப் பார்வை



மூன்று ஆண்டுகளுக்கு முன்பு எனக்கு ஏற்பட்ட நோய் காரணமாக இந்தியா சென்று அப்பலோ மருத்துவமனையில் வைத்தியம் செய்து கொண்டிருந்த வேளை, எமது பாதுகாவலராம் புனித கயித்தார் ஆலய, செயலாளரிடமிருந்து ஓர் அழைப்பு வந்தது. அது என்னவெனில், எமது புனிதரின் ஆலயம் போரின் தாக்கத்தாலும். கட்டிடம் காலம் கடந்துவிட்டபடியாலும் வழிபாட்டிற்கு நாம் மிகவும் சிரமப்படுகின்றோம். எனவே கட்டிடத்தை சீக்கிரம் புனரமைப்பு செய்ய வேண்டும் என்று அழைத்தார்.

அன்று இரவு முழுவதும் தூக்கமில்லாமல் சிந்தித்துக் கொண்டிருந்த வேளை என்னையும் அறியாமல் எனது மனதிற்குள் ஒரு சக்தி புனரமைப்பு வேலையை செய்யும் படி தூண்டியது. அன்றிலிருந்து எனக்கு ஒரு உற்சாகமும் உத்வேகமும் எழுந்தது. எத்தனையோ பெரிய மனிதர்கள் எல்லாம் என்னை ஊருக்கு போக விடாது தடுத்தும் எதனையும் பொருட்படுத்தாது ஊருக்கு ஓடோடி வந்தேன். நான் ஊருக்கு வரும் காலத்திலேதான் எமது அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய பங்குத்தந்தை அருட்பணி ஞானேந்திரன் அடிகளாரும் பங்குத் தந்தையாக பொறுப்பேற்கவும் சரியாக இருந்தது.

பங்குத் தந்தையின் முதல் பொதுக்கூட்டத்திலேயே பழைய ஆலயத்தின் நிலைமையை அவதானித்து ஆலயம் புனரமைக்கப்பட வேண்டும் என்று ஏக மனதாக தீர்மானித்து கட்டிட வேலைக்கான திட்டமிடல் பணியை எனது தலையில் சுமத்தினார்கள். அன்று தொட்டு இன்றுவரை எமது புனிதராம் கயித்தார் என்னை தனது கருவியாக வழிநடத்தி எந்தெந்த வேலைகள் எப்படி சரிவரச் செய்ய வேண்டுமோ அவற்றை தனது அருளால் சரிவரச் செய்து இப்புதிய ஆலயத்தை வடிவமைக்க உறுதுணையாக இருந்துள்ளார்.

இப்புதிய ஆலய கட்டுமான பணிகூட புனிதரின் புதுமையான செயல்தான். அதை நாம் வாயால் விபரிக்க முடியாது. அவர் செய்த அருஞ்செயல்களில் சில அதற்கு சாட்சியாக முன்வைக்க கடமைப்பட்டுள்ளேன்.

அவற்றில் சில

1. புதிய கட்டடம் கட்டத் தொடங்கும் பொழுது எமது கையில் இருந்த பணமோ ஒரே ஒரு லட்சம் ரூபா மட்டும்தான். அவ்வேளை பங்கில் உள்ள மக்கள் அனைவரும் பணமில்லாமல் எப்படி இப்பெரிய ஆலயத்தை இடித்துக் கட்டுவீர்கள் என்ற ஏக்கக் கேள்வி
2. கட்டிடம் கட்ட தொடங்கிய காலப்பகுதியோ (2008) ஈழப்போரின் உச்சக்கட்ட நாட்கள். யாழ் குடா நாட்டிற்கு கட்டிடப் பொருட்கள் பெற முடியாமல் திண்டாடிய காலம்.
3. பழைய கட்டிடத்தை இடித்து அப்புறப் படுத்துவதற்கு ஏற்பட்ட சிரமமும், செலவும் மலைபோல் எம்மை ஆட்கொள்ள எதிர்பாராத விதமாக ஊரிலிருந்த பங்கு மக்கள் எல்லோரும் கொடுத்த பங்களிப்பும் இரத்த வியர்வையும் எமக்கு சொற்ப செலவையே கொடுத்தமை
4. பணமில்லாமல் வேலைகள் தடைப்பட போகிறதோ என்று ஏங்கிக் கொண்டிருந்த வேளைகளிலெல்லாம் எவரும் அறியாமல் வெளிநாடுகளில் இருக்கும் பங்கு மக்களின் உதவியும், உற்சாக அறிவுறுத்தலும் எம்மை இப்பொழுதும் மெய் சிலிர்க்க வைக்கிறது.
5. கட்டிடம் அத்திபாரம் இடப்பட்ட காலந்தொட்டு எமது புனிதரின் அருளாலும் பெயராலும் அவருக்கென்று அகைக்கப்பட்டுள்ள அழகிய ஆலயம் கடடி முடிக்கும் வரைக்கும் எனக்கு இருந்த நோய் எங்கு சென்றதென்றே தெரியவில்லை.

இவற்றையெல்லாம் புனிதரின் புகழுக்காக உலகிற்கு வெளிப்படுத்த கடமைப்பட்டுள்ளேன்.

இறுதியாக புதிய ஆலயக் கட்டுமான பணிக்கு உதவிய எல்லோருக்கும், விசேடமாக எமது கட்டிடக் குழுவை வழிநடத்திய பங்குத்தந்தைக்கும், வெளிநாடுகளிலும், உள்நாட்டிலும் உள்ள அனைத்து கட்டிடக் குழுவினருக்கும், புதிய கட்டிடத்தைக் கட்டுவதற்கு ஏற்ற ஆலோசனைகளை வழங்கிய தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கும், கட்டிட வேலைகள் அனைத்தையும் பகுதி பகுதியாக பொறுப்பெடுத்துச் செய்த அனைத்து உள்ளங்களுக்கும், கட்டிடக் குழுவினர் சார்பாக நன்றியைக் கூறி நிற்கின்றேன்.

"புனிதரின் நாமம் என்றென்றும் போற்றப்படுவதாக"

**எ. கயித்தாம்பிள்ளை** (கட்டிடக் குழு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வழிபாட்டுக்குழுவினர்



ஆலய அருட்பணிச்சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிச் செய்தி



யாழ் மறைமாவட்டத்திலே இருக்கும் ஆலயங்களில் பழமையாகக் கருதப்படும் எங்கள் புனித கயித்தார் ஆலயம் புதுப்பொலிவு பெற்று அலங்காரத் தோரணையில் திகழ்வதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் குதித்து ஒரு சில வார்த்தைகள் மூலம் எங்கள் ஆசியையும், ஆதரவையும் கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

இவ்வாலயம் புனித கயித்தாரின் 500வது ஆண்டு விழாவைக் காலஞ்சென்ற அதி வண. ஆயர். தியோகுப்பிள்ளை ஆண்டகையின் தலைமையின்கீழ் காலஞ்சென்ற பங்குத்தந்தை வண. அருமைநாயகம் அடிகளாரின் உதவியுடனும் உற்சாகத்துடனும் பங்கு மக்களின் அயராத ஒத்துழைப்புடனும் 1980ம் ஆண்டு ஆவணித் திங்கள் 7ம் திகதி கொண்டாடி மகிழ்ந்தோம். எங்கள் புனிதரின் பெயர் கொண்ட ஆலயம் இலங்கையில் நீர்கொழும்பிலும் எம் மண்ணாம் மாரீசன் பதியிலும் உயர்ந்து விளங்குவதும் எங்களுக்குப் பெருமை சேர்த்துள்ளதாகும்.

எங்கள் பங்கு மக்கள் இறை பக்தியும், எம் பங்கு மக்களுக்காகச் சேவை செய்ய வந்த வெளிநாட்டுக் குருக்களையும், சுதேசியக் குருக்களையும் பக்தியாகவும், மதிப்புடனும், பாசத்துடனும் பேணிப் பாதுகாத்து வந்தார்கள். எம்முன்னோரின் வழித்தோன்றிய நாமும் அதையே பேணி வந்தபடியால் சிற்றூராயிருக்கும் எங்கள் மாரீசன் பதியில் ஐந்து குருக்கள் எம் பாதுகாவலரின் துணையோடும் இறை ஆசியோடும் தற்போது யாழ் மறை மாவட்டத்தில் சேவையாற்றும் பெருமையையும் புனித கயித்தார் எங்களுக்குத் தந்துள்ளார். அவர்களைத் தொடர்ந்து மேலும் பல குருக்கள் தோன்ற அவரே வழிவகுப்பார் என்பது திண்ணம்.

எம்பாதுகாவலர் நாட்டிலேற்பட்ட அபாயகரமான காலங்களிலும் எம்மைத்தம் கண்ணிமைபோல் பாதுகாத்து வழிநடத்தியமைக்காக நன்றி கூறுகிறோம். எம் பங்கிலே சேவையாற்ற வந்த குருக்களின் சேவைகள் காரணமாக மாசில்லாக் கூட்டம், மரியாயின் சேனைகள். திரு இருதயச் சபை, பீடப்பணியாளர் சபை என்பன தோன்றி எம்பங்கு மக்களுக்குப் பெருமை சேர்த்தன. மேலும் மாதர்சங்கம், கடற்தொழிலாளர்சங்கம், கிராம முன்னேற்றச் சங்கள், சனசமூக நிலையம் என்பனவும் எம் பங்கு வளர்ச்சிக்குக் காரணம் என்பதையும் எடுத்துக் கூறியே ஆகவேண்டும். எம் ஆலய வளவிலுள்ள எம் பாடசாலையும், அங்கு கல்வியைப் பெற்ற, பெற்றுக்கொண்டிருக்கும் மாணவர்களையும், பாடசாலை வளர்ச்சிக்காக சேவையாற்றிய தற்போது சேவையாற்றும் ஆசிரியர்களையும் புனித கயித்தார் தம் காவலில் வைத்துக் காப்பாற்றியுள்ளார். அவர்கள் பெயரால் நன்றி கூறவும் கடமைப்பட்டிருக்கின்றேன்.

எங்கள் பங்கின் உதவிப் பங்குத்தந்தையாகக் கடமையாற்றிய வண. இராயப்பு ஆண்டகை மன்னார் ஆயராகக் கடமையேற்று நடத்தி வருவதும், தற்போதய குரு முதல்வாரன வண. யஸ்ரின் ஞானப்பிரகாசம் அடிகளார் எம்பங்கின் வளர்ச்சிக்கு உறுதுணையாயிருந்ததும் நாம் அறிந்ததே. எனவே எம் புனிதர் தம்மை நாடி வந்த அனைவருக்கும் பாதுகாப்பு அளித்து உயர்ச்சியடையச் செய்துள்ளார். தற்போது எம் பங்கிலே கடமையாற்றும் வண. பிதா ஞானேந்திரன் அடிகளார் இளமைப் பருவத்திலே எம் ஆலயப் பணிக்காக தம்மை அர்ப்பணித்து, தமது அன்பு, அறிவு, ஆற்றலின் காரணமாக தம் சொந்த முயற்சியுடனும், அயராத உழைப்புடனும் எம் ஆலயத்தைப் புதுப்பொலிவாக்கிய பெருமைக்கு புனித கயித்தார் ஆலய மக்கள் அனைவரும் என்றென்றும் கடமையும், நன்றியுணர்வுடையவராகவும் இருப்போம் என்பதை எடுத்துக் கூறுகிறோம்.

அத்துடன் ஆலயப் புனரமைப்புக்கு பலவழிகளாலும் பண உதவி செய்த புலம் பெயர்ந்து வாழும் அனைத்து மக்களினதும், பங்கு மக்களின் சரீர ஒத்துழைப்புக்கும் நன்றி கூறுவதுடன் எமது பங்கு பெரு விருட்சமாக வளர்ந்தோங்க மென்மேலும் ஒன்றுகூடி செயலாற்றப் புனித கயித்தார் ஆசி வேண்டி இவ்வாலயத்தேவைகளுக்கு உதவிய அனைத்துள்ளங்களுக்கும் மறுபடியும் நன்றி கூறி விடைபெறுகிறேன்

வணக்கம்

**திருமதி. பேணடேற் செபஸ்தியாம்பிள்ளை**

இளைப்பாறிய ஆசிரியர்.

கனடா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புகழ்கின்றோம் புனிதனே!

பார்போற்றும் புனிதனே
எம்பதியின் காவலனே!
கயித்தார் எனும் பெயர் கொண்ட
தூதுவனே எம் தூயவனே!

படைக்கின்றோம் உம்மலர்ப்பாதம்
எம் நன்றி நிறை புகழ்ச்சிகளை
பாக்கள் பல தொடுத்து
உம் தாழ் வணங்குகின்றோம்

பல நூற்றாண்டுகளாய்
எம்பதியை காத்துவரும் காவலனே!
உம் தயவின் மகிமையினால்
வாழுகின்றோம் இப்பாரினிலே நாம்

தனிப்பெரும் புகழ் சேர்த்து
தனித்துவமாய் எம்பதியில்
கோவில் கொண்ட காவலனே!
எம்பதியின் புகழ்தனை பார்போற்ற வைத்தவரே!

உமைநாடி ஓடிவரும் அடியவர்க்கு
வேண்டும் வரமளித்து காக்கின்றீர்
மழலைகள் இன்றிவாடிவரும் மாந்தருக்கு
புத்திரபலனளித்து தேற்றிடும் எம் அற்புதரே!

போர் மேகம் எம்நாட்டை சூழ்ந்து நின்ற போதிலும்
எத்தீங்கும் எமை அணுகாமல்
மண்ணவர் எமக்கு உயிர் கொடுத்து
எம்மவர் உறவுகளை காத்த உத்தமனே!

புத்தொழி வீசி புதுமணம் கமழ்ந்திட
புதியதோர் ஆலயம் நாம்
புதுப்பொலிவுடன் அமைத்திட
புத்துணர்ச்சி அளித்திட்டீர் புனிதனவனே எம் காவலனே!

வாழ்த்துகின்றோம் உமை என்றும்
வணங்குகின்றோம் உம் மலர்ப்பாதமதை
காத்திடுவீர் காலமெல்லாம்
எம் பதிவாழ் உம் அடியவரை

**பெ. சசின் றிசாந்தி**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆலய புனரமைப்புக்குழு



மலர் வெளியீட்டுக்குழு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாரீசன்கூடல் பங்கில் பணியாற்றிய
# அருட்பணியாளர்கள் வரிசையில்...

அருட்பணி ஆசீர்வாதம் OMI
அருட்பணி ஜேம்ஸ் OMI
அருட்பணி சேவியர் OMI
அருட்பணி கோமஸ் OMI
அருட்பணி வில்லியம்ஸ் OMI
அருட்பணி L. A. சிங்கராயர் OMI
அருட்பணி ஜோ. பெர்னாண்டோ OMI

1964 – 1968 அருட்பணி பிரான்சிஸ் OMI
1969 – 1971 அதிவந்தனைக்குரிய இராயப்பு யோசவ்
1972 – 1977 அருட்பணி லெபோன் OMI
1978 – 1979 அருட்பணி யேசுராஜா
1979 – 1981 அருட்பணி E. J. அருமைநாயகம்
1981 – 1986 அருட்பணி யஸ்ரின் ஞானப்பிரகாசம்
1987 – 1989 அருட்பணி A. J. ஜேசுதாஸ்
1990 – 1991 அருட்பணி J. அன்ரனிதாஸ்
1991 – 1992 ஆவணி வரை அருட்பணி G. பீற்றர்

**இடப்பெயர்வு காலமான இக்காலத்தில் அருட்பணியாளர்களான யேசுதாஸ், G. பீற்றர், அன்ரனிபாலா ஆகியோர் ஆலயமும், புனிதப் பொருட்களும் சிதைவுறாமல் பாதுகாப்பதில் பெரும் பங்காற்றினர் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.**

2000 – 2001 அருட்பணி அன்ரனிபாலா
2001 – 2003 அருட்பணி பொணிவேஸ்
2003 – 2004 அருட்பணி நிக்சன் டொறக்ஸ்
2004 – 2005 அருட்பணி J. அன்ரனிதாஸ்
2005 – 2006 அருட்பணி J. பிரான்சிஸ்
2006 – 2007 அருட்பணி S. லியோ ஆம்ஸ்ரோங்
2008 – அருட்பணி M. M. H. ஞானேந்திரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியின் நிறைவில்...

மாரீசன் மண்ணின் மங்காப் புகழ் மானிலமெங்கும் பரவிட மகிமைசேர் புனிதனுக்கு புதிதாய் எழுப்பிட்ட ஆலயத்தின் வரலாறு வெறும் வார்த்தையில் அல்ல ஆவணமாய் வைத்திட நூலுருவில் வெளியிட நல்லருள் புரிந்த வல்ல தேவனுக்கு நாவாலும் வாழ்வாலும் நன்றி சொல்வோம்.

எழுத்திலே வடித்திட வேண்டுமெனும்
எம்மவர் எண்ணமது நிறைவேற – சிந்தையின்
ஆசிதனைச் செவ்வனே தந்துதவிய யாழ் மறைமாவட்ட
ஆயனாம் அதிவந். தோமஸ் சவுந்தரநாயகம்
ஆண்டகைக்கு எமது அன்பான நன்றிகள்

விழா மலரது வெளியிடக் குழுவொன்று அமைத்து
அன்புடனே, கண்டிப்பும், கரிசனையும், அறிவுரையும் தந்து
ஆசீரும் அளித்து நிற்கும் பங்குத்தந்தை ஞானேந்திரன்
அடிகளாருக்கு இதயத்தின் ஆழத்தில் எழும்
நன்றிகள் உரித்தாகட்டும்

ஆசிச் செய்திக்காய் அன்போடு வேண்டியபோது
ஆம் என்று சொல்லி ஆசிச் செய்தி அருளியதோடு
அனுபவத்தையும் பகிர்ந்து கொண்ட மறைமாவட்ட குருமுதல்வர்,
மறைமாவட்ட நிதியாளர், மறைகோட்ட முதல்வர்
ஆகியோருக்கும் மகிழ்வுடன் நன்றி கூறுகின்றோம்.

புனிதரின் சரித்திரம் தன்னை சரிவர எழுதிட
புளகாங்கிதத்துடன் உதவிய சரித்திர வித்தகனாம்
புனித சவேரியார் குருமட அதிபராய் விளங்கும்
அருட்பணி மங்களராஜா அடிகளார்க்கு எமது
மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும்.

மாரீசன் மண்ணிலே மலர்ந்து விட்டதனால்
மனங்களின் எண்ணமதை எழுத்திலே வடித்து
மகிழ்வுடன் வாழ்த்துக் கூறி மனத்தால் ஒன்றித்து நின்று
மண்ணிற்கு பெருமை சேர்க்கும் அருட்தந்தையர்கள்
அருட்சகோதரர்கள் ஆகியோரை அன்புடனே
நினைவு கூருகின்றோம்.

நாடித் தேடிய வேளையில் நல்மனதுடனே
நல்லாசிச் செய்திகளைத் தந்துதவிய
பங்குதனில் முன்னாளில் பணியாற்றியோர்க்கும்
அரசதுறையின் அதிகாரிகட்கும், அதிபர்களாய் விளங்குவோர்க்கும்
கல்விசார் ஊழியர்கட்கும் கனிவான நன்றிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாரம்பரிய விசுவாசம் செழித்து நின்ற மாரீசன் மண்ணின்
பெருமை கூறும் பாதுகாவலராம் புனித கயித்தாரின்
ஆலய வரலாறுதன்னை அடியோடு எழுத்திலே வடித்து
ஆக்கங்களாய் அன்பனாம் கயித்தாரின் கவிதனையும் தந்து
மலருக்கு மணம் சேர்த்த, மண்ணின் வித்தாகி
முளையாகி விருட்சமாய் விரிந்து நிற்கும்
ஆசிரியர் சவரிப்பிள்ளை அவர்கட்கும் எமது அன்பான நன்றிகள்

வெளிநாடுகளில் வாழ்ந்தாலும் வேறாகி நிற்காது
வேண்டியவேளை வாழ்த்துக்கள் தந்துதவிய
கனடா, லண்டன், ஜேர்மன் கிளையினருக்கும்
எண்ணக்கருக்களை எழுத்திலே வடித்துத் தந்த
ஏனைய வெளிநாட்டு உறவுகளுக்கும்
எமது இதயம் நிறைந்த நன்றிதனை நவில்கின்றோம்

மலரது மலர்ந்து மணம் கமழ்ந்திட தமது
மனங்களின் எண்ணக்கருக்களுக்கு
மகிழ்வோடு எழுத்துருக்கொடுத்த அனைவருக்கும்
மலர்க்குழுவின் மனமார்ந்த நன்றிகள்

வாழ்த்துக்களுடன் அனுசரணை வழங்கி
வெளியீட்டிற்கு உதவிய விளம்பரதாரர்கள்
அனைவருக்கும் நாம் நன்றி கூறுகின்றோம்

மிகக் குறுகிய காலத்தில் நிறைவான மலராக வெளிவர
மிகையோடு செயற்பட்ட பண்டத்தரிப்பு J. S. அச்சக
உரிமையாளர், பணியாளர்கள் ஆகியோருக்கும் எமது
உளம் நிறைந்த நன்றிகள்

விழா மலர் சிறப்புடன் எமது கரங்களில் தவழ்ந்திட
விருப்புடனே இலைமறை காயாக நின்று
உதவிக்கரம் நீட்டிய அன்புள்ளங்கள் அனைவருக்கும்
உவப்புடனே நல் நன்றி நவில்கின்றோம்.

**- மலர்க்குழு**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழமையுடன் புதுமை சேர்த்து புதிய ஆலயமாய் விளங்கும் புனித கயித்தார் ஆலயத்தின் திறப்புவிழா சிறப்புற அமையவும் கிராம மக்களின் பாரம்பரிய விசுவாச வாழ்வு சுடர்விட்டுப் பிரகாசிக்கவும் மகிழ்வுடன் வாழ்த்துகின்றோம்

# மடுமாதா விற்பனை நிலையம்

## மாரீசன்கூடல்
## இளவாலை

செபமாலை, வரவணிக்கம், மெழுகுதிரி, வேதப்படங்கள், மற்றும் பாடசாலை உபகரணங்கள், அழகுசாதனப் பொருட்கள் ஆகியவற்றை எம்மிடம் மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"எம் பாதுகாவலரான புனித கயித்தாரின் அருளும்,
ஆசீரும் என்றும் நிறைவாக உங்களுடன் இருப்பதாக"

# பேர்ணாட்ஸ்

## மலேசியா

May the powerful Intercession of our patron St. Cajetan be with you always.

with Compliments From:

# ANNAI MONTESSORI CENTRE

241, Colombo Road,
Pattalam.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# PUTTALAM TIMBER FURNITURE

No. 30/1,
Kadumayankulam Road,
Puttalam.
Tel. 032 22 66838

# WOOD LANKA

St. Mary's Road,
Puttalam
Tel. 0722 887654
0714 098456

*Congratulation From:*

# A.P.L.W.A. Building Contractors

Reg. No: 2100630

Colombo Road,
Tilliayady,
Puttalam.

**Tel. 032 2269296**
**Hot Lane: 077 7184781**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FRANCIS

## ENTERPRISES (PVT) LTD

**IMPORTERS & DISTRIBUTORS OF FISHING GEAR**
**OUT BOARD SPARE PARTS ETC.**

S-08, 2ND FLOOR,
CENTRAL SUPER MARKET COMPLEX,
COLOMBO - 11, SRI LANKA.


T.P. # 0094 11 2434475, 0094 11 2344584
FAX # 0094 11 2344584
E-mail francisenterprlses@ymail.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org